# Islam Founder and Islamic Poets.

# நபிநாயகமும் கவிவாணர்களும்

By

M. S. PURNALINGAM PILLAI, B. A., L. T.,

Emeritus Professor in English,

Bishop Heber College, Trichinopoly.

"Islam is the natural religion of man, not associated with any people or country The Law of Islam is eternally applicable·· it is based on the same principles of nature on which man has been created"—Dr. Abdul Ghani.

"இஸ்லாம் மத தத்துவம் அநேகமாய் உலக மக்கள் எல்லோருக்குமே பொருத்தமானது. ஏனெனில் அது சமீபத்தில் ஏற்பட்ட மதமானதினுல் மிகவும் திருந்திய மதமென்றே சொல்லுதல் வேண்டும்."—E. V. Ramasamy Naickar,

24—8—1930.

# Dedication.

By permission to

**Begum Mir Amiruddin Sahiba, B. A., Hons.**

**(wife of the District and Sessions Judge, Tinnevelly.)**

To thee do I dedicate this book brand-new,
Who art by birth, learning, culture, broad view,
A true beloved, devoted Islamite,
Who duly prays and sheds her sacred light
On all that strive to live a noble life
And love their fellowmen should keep out strife.
Like the Prophet who preached out of his heart,
'Pray thou, give alms, live clean, go haj, depart.'
I hope and wish this drop of ink diffuse
True faith, divine glory and love profuse
Among women behind the veil and youth
That they, swan-like, imbibe the milk of Truth
And cherish it like thee and impart it
With gladsome heart and do what is right fit.
May Allah grant thee happy life and long
And fortune great and worth well sung in song.

May 1939. M. S. P.

# பொருளடக்கம்—Contents


முகவுரை—Preface....................i............................ i

நபி நாயக வாழ்த்து—Praise of the Great Prophet iv

உரிமைப்பா-Dedication (Begum Mir Amiruddin v

| அதிகாரம் Chapter | | தலைப்பு Heading | பக்கம் Page |
|---|---|---|---|
| I | அரேபியா | Arabia | 1 |
| II | நபிநாயக வரலாறு | Life of the Great Prophet | 4 |
| III | குர் ஆன்— | The Quoran (Koran) | 24 |
| IV | இஸ்லாம்— | Islam | 39 |
| V | கலிபாக்கள்— | Khaliphs (Caliphs) | 50 |
| VI | கலம்பகம்— | Olla Podrida | 56 |
| VII | சொற்பொருள் விளக்கம்- | Glossary | 72 |
| VIII | இஸ்லாமியப் புலவர்கள்- | Muslim Poets | 80 |

இணைப்பு—Appendix.

I விழாக்களும் விரதங்களும்— Feasts and Fasts 99

II முகம்மதியர்— Muslims, Muhammadans 101

பிழை திருத்தம்— Errata et. Corrigenda 104

Books Consulted—பார்வையிட்ட, ஆராய்ந்த நூல்கள்.

# முகவுரை.

இந்நூலை இயற்றுவதற்குப் பல காரணங்களுள. 1907௵ யான் நெல்லையம்பதியில் 'காமைசிஸ் கல்லூரி'யை யமைத்து நடத்தத் தொடங்கிய காலத்தில் அந்நகரில் நிருல் இஸ்லாம் அச்சகத் தலைவர் குர்ஆனைத் தமிழில்மொழி பெயர்த்துத் தருமாறு என்னைப் பன்முறை கேட்டனர். அப்பொழுது சேல்ஸ் துரை மகனார் ஆங்கிலத்தில் ஆக்கி அளித்த அந்நூலை வாங்கி அதனைப் பன்முறை படித்தேன். ஆயினும் அவகாசக் குறைவால் குர்ஆனை மொழி பெயர்க்க இயலவில்லை. அதுமுதல் இஸ்லாமைப் பற்றிய நூல்களையும் மாதப் பத்திரிகைகளையும் கவனமாகப் படித்து வந்தேன். முகம்மது நபி நாயகர் வரலாறுகளையும் ஆங்கிலப்பத்திரிகைகளின் மூலமாக நான் விடாமற் படித்து வந்தேன். யான் ஆங்கிலத்திலெழுதிய 'தமிழிலக்கிய வரலாறு' எனும் புத்தகத்தில் முகம்மதியப் புலவர்களைப்பற்றியும் அன்னாரருளிய நூல்களைப்பற்றியும் குறிப்பாகச் சில கூறியுளேன். அதன்பின் கல்லூரிகளினின்று யான் ஓய்வு பெற்று வந்ததும் இஸ்லாமைப்பற்றியும் முகம்மதிய ஆசிரியர்களைப் பற்றியும் சிறு நூலொன்று எழுதவேண்டுமென்ற அவா என் மனத்தில் எழுந்தது. உடனே ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள நபிகளின் வரலாறுகளையும் காலிபாக்களின் சரிதங்களையும் பலமுறை படித்தனன். இவற்றின் சாரமே இந்த நூலாகும். சாதிக் கொடுமையில்லாத இஸ்லாமைத் தழுவிய எம்மக்களும் தொழுகையிலும் உணவுகளருந்துவதிலும் சமூக வாழ்க்கையிலுஞ் சமமாக உயர்வு தாழ்வின்றி நன்கு மதிக்கப்படுதல் என் மனத்தைக் கவர்ந்தது. முன்னேற்றமடைய விரும்புவோருக்கு இத்தகைய சாதனம் இன்றியமையாததென்றுணர்ந்தேன். இச்சமயத்திலுள்ள சகோதர சகோதரிப் பான்மை மெய்ச்சத்தக்கது. அன்றியும், நபிகளின் வாக்குப்படி வாணிபமே வளம்தருமென்று நம்பி முகம்மதியர்கள் வாணிபஞ் செய்து தனவணிகர்களாய் வருகின்றனர். நெசவுத் தொழில், பாய் முடைதல் முதலான தொழில்களில் யாதாயினு மொன்றைச் செய்து காலங்கழிக்கின்றனரே யல்லாமல்

சோம்பேறிகளாகத் திரிவதில்லை. பிறருழைக்கத்தாம் உண்பதுமில்லை மேலும், இறைவனைப் புகழாத சமயம் யாண்டுமில்லையாதலால் சக்கையாகிய வெறுஞ்சடங்குகளைப் பொருட்படுத்தாமல் சாரமாகிய இறைவனைத் தொழுதலே சிறந்த வொழுக்க முறையென்பதுந் தெளிவாயிற்று. தற்காலப் பள்ளிச்சிறார்கள் இதனை யுணர்ந்துய்யுமாறுஞ் சிறார்களன்றி முதியோரும் இஸ்லாமைப்பற்றியும் இயற்றமிழ்ப் புலவர்களைப்பற்றியும் படிக்கத்தக்கவாறு இந்நூலை எழுதியுளேன். பெரியாரெங்கணுமுளர். பெரியோர்க்குச் சாதிகுலம் பிறப்பு எனுங்கட்டுப்பாடுகள் கிடையாவாதலால் நபி நாயகத்தின் வரலாறு எவராலும் படிக்கத் தகுந்ததாகும். பொட்டல்புதூர் கந்தூரித் திருவிழாவொன்றுமே இந்து முகம்மதிய ஒற்றுமையை விளக்கத்தக்க சான்றாகும். இவர்களுடைய ஒற்றுமையின்றி இந்திய தேசம் எம்முறையிலும் மேம்பட்ப் போவதில்லை. ஆதலால் முகம்மதியர்களுக்கு மட்டும் இது வரையப்பட்டதென்றுணரற்க, உரையற்க, ஒறுவற்க.

'இச்சிறு நூலின் பொருளடக்கத்தை யுற்று நோக்கும் எல்லாமக்களும் இதனைப்படித்து இச்சமய வொழுக்க விரதவிழா நடைகளை ஆராய்ந்து பார்ப்பாராயின் தாமும் அரியன செய்யும் பெரியாராகலா மென்பது விளங்கும்.

இந்நூலை முகம்மதிய மாதரசியாகிய இந்நெல்லையம் பதியில் நீதிபதியாக விளங்கிய பெரியாரின் மனை மாட்சிமை பொருந்திய பீநம் மீர்அமிருடீன் அம்மையாருக்கு உரிமைப்படுத்தலே தகைமையெனக்கருதி அந்த அம்மையாரின் அனுமதியும் ஆதரவுமளிக்குமாறு விரும்பினேன். அவ்அம்மையாரின் மனமார்ந்த அநுமதி விடை கிடைத்ததும் இதனை வெளியிடத் தலைப்பட்டேன். இது போராதிய பலகாரணங்களால் காலம் தாழ்த்து வெளிவரலாயிற்று.

இதனைப் படிக்கும் முகம்மதிய நண்பர்கள் இதன் கண்ணுள்ள வழுக்களை எடுத்துக்காட்டுமாறும் அவற்றைத் திருத்துமாறும் வேண்டுகின்றேன். அங்ஙனஞ் செய்வோருக்கு என் நன்றி என்றுமுரியதாகும்.

கற்பகம்,
முன்னீர்ப்பள்ளம்
15—4—1939

மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை
பி. ஏ. எல். டி.
ஆங்கிலப்பேராசிரியர் (ரிட்டயர்டு)

## நபி நாயகம்.

1. உருவிற் சிறந்த உயர்குல மகனே
உருவ வணக்க முடற்றிய வீரனே.

2. உருவுந் திருவு மொக்கப் பெறினுங்
கருவ மிலாத கருணைக் கடலே.

3. சருவ மக்களுஞ் சோதர ரென்றே
பருவ மறிந்து பகர்ந்துழைத் தனையே.

4. வருவது வரினும் வரம்பினின் றவனே,
தருவது தானந் தாணி யோர்ககே.

5. மருவிய வொற்றுமை மாசற வகுத்தனை,
அருமை பெருமை அரபிகட் களித்தனை.

6. இருநில மெங்கணு மில்லறம் பேரறங்
கருதியே காரிகை பலர்பற் றினையே.

7. குருத்துணை யின்றியே கூரறி மக்கள்
அருக்க னொப்ப அவனியில்மிளிருவர்.

8. கருவி லிருந்தே கருணைக் கருகனாய்
வருவை யென்று வரம்பெற்ற வள்ளலே.

9. அன்பு [illegible]ருளு மொத்த பண்பும்
இன்பு மெய்திய இறையொப் பவனே.

10. திருவடி நீழலில் திருந்திய கொள்கையால்
ஒருவழி நின்று உயர்ந்தனை யண்ணலே.

11. விரும்பிய வண்ணம் வியனடி போற்றுவோர்
கருந்தனம் பெறுவர் காண்பது திண்ணமே.

# அதிகாரம் I. அரேபியா

சுமார் பன்னிரண்டு தேசங்களுள்ளது ஆசியாகண்டம். இக்கண்டத்தின் மேற்கற்றத்திலிருப்பது அரேபியா தேசம். இதற்கு மேற்கில் செங்கடல், தெற்கில் ஏடன்குடாக் கடல், இந்து மகா சமுத்திரம், கிழக்கில் பாரசீகக் குடாக்கடல், ஓமன்குடாக் கடல், வடக்கில் பாலஸ்தீன், சிரியா என்பன. மேற்கோரமாக வடக்கிலிருந்து தெற்கு முனை வரை தென் வடல் 1500 மைல் நீளம், தெற்கில் கிழமேல் 1300 மைல் அகலம், வடக்கில் கிழமேல் 600 மைல், மொத்தம் நிலப்பரப்பு 12 லக்ஷம் சதுர மைல்.

இதன் பாகங்கள் மேற்குக்கரையோரத்தில் ஹெஜாஸ், நஜ்ரின், ஏமென்; தெற்கில் ஏடன், ஹாத்ராமுத்; கிழக்கில், ஓமன், ஹாஸா; நடுவில் பாலைவனம், செம்பாலைவனம், டாஹனாவனம் முதலியன. இப்பாலைவனத்தில் சிற்சில விடங்களில் கிணறும், தோப்புமுள. இதைக் கடப்பதற்கு ஒட்டகம் அமைந்துள்ளது. இவ்வனத்தில் மழை குறைச்சல். அரேபியாவை வடக்கு, நடு, தெற்கு என மூன்று பாகங்களாகப் பிரித்துக் கூறுவதுமுண்டு. வட பாகத்திற்கு எல்லை, மேற்கில் மிடியன் கடற்கரை முதல் கிழக்கில் பாரசீகக்குடாக் கடல் வரை. இவற்றிற்கு இடையிலுள்ளது வனமே. இதன் வட பாகம் கற்றரை, தென் பாகம் மணற்பாங்கு. இதன்கண் சில பருவ காலங்களில் மேய்ச்சலுக்கு ஏற்ற தரையுண்டு. நடுப் பாகத்தில் மேற்கில் ஹெஜாஸ், இடையில் செம்பாலை, கிழக்கில் ஹாஸாவுமுள. செம்பாலையிற்றான் கிணறுகளும், தோப்புகளும் இருக்கின்றன. ஹாசிர், ஏமென் பகுதிகளில் தட்டுத் தட்டாக மலைகளுள. இவற்றில் மழை பெய்யும், அதனால் பயிருண்டு. கிழக்கில் பத்தினா கரையில் ஓமன் நாட்டில் அக்தார் மலைவளம் அமைந்துளது ஹாத்ராமுத்திலும் நீரோடைகளாற் செழிப்பு ஏற்பட்டு நல்ல நிலைமையிலுள்ள பல கிராமங்கள் காணப்படும். இப்பகுதியை **ஆனந்த அரேபியா** (பீலிக்ஸ்) என்றழைப்பர்.

வட பாகத்தில் குடிகள் சொற்பம், அவர்கள் தேசசஞ்சாரிகள், ஆடுமாடு மேய்ப்பவர்கள். நடுப் பாகத்தில் சிற்சிலவிடங்

களில் குடிபடையுண்டு. கான்யாறுகளால் விவசாயமுண்டு. இதனில் அநேக பட்டணங்களும் கிராமங்களும் உள. தென் பாகத்தில் நிலையான குடிகள் பயிர்த் தொழில் புரிகின்றனர். இதுவும் சில தூரம் வரையில்த்தான். அரேபியா தேசத்தில் மான்களும், ஒட்டகங்களும், குதிரைகளும் அகப்படும். விளை பொருள்களில் முக்கியமானது காப்பி. அடுத்தது கொக்கோ போன்ற காட் செடி. இதன் இலைகள் வெற்றிலை போன்று சவைக் கப்படும். வெறியுண்டாக்கத்தக்கவை. சாரப்பாங்கான நிலங் களில் 'டாம்' எனப்படும் பனைகளுள, இவற்றின் ஓலைகளால் கூடைகளும், பாய்களும் முடைவார்கள். ஈச்ச மரம் மிருந்துள தால் பேரீச்சம்பழம் பிரியமான உணவுப் பொருளாகும்.

அரேபியா தேசத்திலுள்ளவர்கள் கலப்பில்லாத அரேபி யர்கள்; ஜாக்தான் அல்லது காக்தான் வழியில் வந்தவர்கள். முஸ்தரேபியர், கலவைகள், இஷ்மேல் வழி வந்தவர்கள், என இரு வகை மக்களாவர். முன்னவர் எமென், ஹாத்ராமுத், ஓமென், இப்பகுதிகளிற் காணப்படுவர். பின்னவர், பெடுயின்ஸ் பத்தூக் கள், பதவிகள் என்றழைக்கப்படுவர். இவர்கள், ஹெஜாஸ், ஹாஸா, சிரியா வனம், மெசோபொட்டேமியா முதலான இடங் களில் வசிப்பவர்.

அரேபிய மக்களில் பல குலங்களுள. குலத்தலைவர்கள் ஷேய்க் எனப்படுவர். இத்தலைவர்கள் சொல் அங்கீகரிக்கப்படும். ஊர்ப் பொதுவில், மன்றத்தில் குடி குலக் காரியாதிகள் நடுவு நிலை மையாக முடிவுபெறும். வழக்கில் தோற்றவர்களுக்கு அபராதம் கால் நடைகளை யீதலே யாம். கொலை செய்தால் தலை முறை தலை முறையாகக் கொலை செய்தவன் குடும்பத்தில் பழிக்குப் பழி வாங் கப்பெறும். இரு கக்ஷிக்காரரும் ஒத்துக்கொண்டால் இரத்த நாணயம் (தியா) பரிகாரமாகப் பெற்றுக்கொள்வர். மத சம்பந்த மான வழக்குகள் ஷாரிப், செயித், காதிகளால் தீர்க்கப்படும்.

கைப்பர் வாசிகள் பாட்டாளிகளே. அவர்களில் அனே கர் அடிமைகளாம்.

தென் அரேபியாவில் யூதர்கள் மிகுதி. அன்னூரில் வர்த்தகச்செல்வர் ஏடனில் பெருங் கூட்டங்களாகக் காணப்படும். மாகாணங்கள் வாரியாக ஜனத் தொகை பின் வருவதாம்.

| | |
|---|---|
| ஹெஜாஸ் | 300,000 |
| எமென் ஆசிர் | 1,800,000 |
| நெஜ்டு (வனம்) | 1,000,000 |
| ஹாத்ராமுத் | 150,000 |
| ஓமென் | 1,000,000 |
| ஹாஸா | 300,000 |
| சிரியா வனம் எல்கை | 275,000 |
| ஆக | 4,825,000 |

அரேபியாவின் பெயர் துலங்குவது ஹெஜாஸ் மாகாணத்திலுள்ள **மக்கா, மதீனு**, தலங்களினுற்றான். சிரியா நாட்டினர் தல யாத்திரையாக இரு தலங்களுக்கும் தரை வழியாக வருவர். வழியில் 30 மைலுக்கு ஒரு தங்கல் உண்டு. அதில் கிணறு குளமுண்டு, பெடுயின் காவலுமுண்டு. ஒட்டகத்தின் மீது 1300 மைலேயும் 40 நாட்களில் பிரயாணஞ்செய்வர். ஈகிப்தர்கள் இப்பொழுது சூயெஸ் துறைமுகத்தில் கப்பலேறி ஜிட்டா துறைமுகத்தில் வந்திறங்குவர். பாரசீகர்கள் பாக்டாட், கெர்பெலாவிலிருந்து வனுந்தர மூலமாக மக்காவிற்கு வருவார்கள். வியாபாரிகள் யாம்பூ (யெம்போ)விலிருந்து மெடினு (மதீனு)விற்கும், ஜிட்டாவிலிருந்து மக்காவிற்கும், ஹோடெடாவிலிருந்து சன்னு தலைநகருக்கும், ஏடனிலிருந்து சன்னுவிற்கும், முகல்லாவிலிருந்து ஹாத்ராமுத் பள்ளத்திற்கும் செல்வார்கள். தற்காலம் (1908 முதல்) தமாஸ்கஸிலிருந்து மக்காவுக்கு ரயில் பாதை ஏற்பட்டுளது. இந்தியாவிலிருந்து மக்காவுக்குப் போகும் யாத்திரிகர்கள் ஏடன் வழியாக ஜிட்டா துறைமுகத்திலிறங்கி 48 மைல் தரை வழியாகப் போவார்கள்.

அரேபியாவில் முன் காலத்தில் அபிசீனியர், பாரசீகர்,

ரோமாபுரி அரசர்களின் ஆட்சி நிகழ்ந்தது. கி. பி. 630 ம் மக்கா பிடிபட்டது முதல் ஈராண்டில் முகமது நபி இறக்கும் வரை அரே பியா முழுவதையும் இஸ்லாம் மத மூலமாக ஓராட்சிக்குட்படுத்த முயற்சித்தவர் முகமது நபியேயாம். இஸ்லாமைத்தழுவிய மக் களனைவரும் முஸ்லீம் சகோதரர்களே யாவரென்று கூறி தேசா பிமானமுண்டு பண்ணினவர் முகமுது பெருமானே.

அரேபியர்களிடம் வீரமும், தயையும், உபசாரமும், அபி மானமும் இன்றும் காணப்படும். அந்நற்குணங்களுடன் பழி வாங்கும் தன்மையும் பொருந்தியிருப்பது வியப்பேயாம். கல்விப் பெருக்க மதிகமிலதெனினும் கவிஞர்களிருந்தனர். சிற்றின்ப மயமாகவே அன்னார் கவிகளிருக்கும். ஆண்டுதோறும் மக்காவில் கூடும் கூட்டத்தில் அன்னார் கவிகள் அரங்கேற்றப்படும், அவற் றிற்குப் பரிசும் அளிக்கப்படும். அரேபியர்கள் சூதாட்டத்தில் நிபுணர்கள், பெருங்குடியர்கள், காமியர்கள், பல மனைவிகளுடை யவர்கள், அடிக்கடி மண ரத்துச்செய்பவர்கள். பெண்டிர்களுக்கு உரிமையே கிடையாது. பெண் பிறப்பு கேவலம் என்று கருதி னர், அடிமைகள் பலருளர். அடிமைகள் விலங்குகள் போன்று நடத்தப்பெற்றனர். அரேபியர் விக்கிரக ஆராதிகள் ஆயினும் ஒரு கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள். அரேபியாவில், யூத மதம் கிறிஸ்தவம், பல மதங்கள் பரவியிருந்தன. ஒரு மதமே சம்மத மாகச் செய்தவர் முகமது நபிகளே.

## அதிகாரம் II. நபி நாயக வரலாறு.

அரபி நாட்டிற் சிறந்த அத்னன் கிளையில் உயர்ந்த குறை ஷியர் குலத்தில் அப்துல்லாவிற்கும் ஆமினா அம்மையாருக்கும் தீர்க்கதரிசிகள் பலர் கூறியவாறு மக்கா நகரத்தில் ரபீயுல் அவ் வல் மாதம் 12ம் தேதி திங்கட்கிழமையன்று அஞ்ஞான இருளை அகற்றுமாறு முகம்மது அவதாரமாயினர். இம்மாற்றம் கேட்டதும் பாட்டனார் அப்துல்முத்தலிப் வந்து குழந்தையைப் பார்த்துவிட்டு ஆண்டவனுக்குத் தோத்திரஞ்செய்தனர். அவரு டைய மகனார் காலஞ்சென்றதையும் பார்க்காமல் குழந்தை பிறந்த

ஏழாம் நாள் அவர் பெருவிருந்தளித்தனர். அன்று பேரனுக்கு முகம்மது (புகழுக்குரியன்) என்று நாமகரணஞ் செய்தனர். அக் குழந்தைக்கு 'அக்மத்' எனும் பெயரை அருமைத் தாயார் இட்டழைத்தனள். இரண்டொரு நாளில் தகப்பனை யிழந்த அக் குழந்தை நாட்டு வழக்கப்படி 'ஹலிமா' வெனுஞ் செவிலித் தாயிடம் ஒப்புவிக்கப்பட்டது. அம்மாதரார் அந்த அநாதைக் குழந்தையை ஏற்று ஆறு மாதத்துக்கொருமுறை அதனைத் தாய், பாட்டனரிடம் காட்டி வந்தனள். ஈராண்டு கழிந்ததும் தாயாரிடங் காட்டச் சென்றபோது அம்மாது சிரோமணி குழந்தையை மீளவுங் கொண்டுபோய் வளர்க்குமாறு வேண்டினள். நான்கு வயதாகும் வரை குழந்தையை அருமையாக வளர்த்து வந்த அந்த அம்மணி பின் நற்றாயினிடம் கொண்டு சேர்த்தனள். தாயார் மதீனாவில் உற்றாருறவினரைக் காணப்போனபோது ஆறு வயதுள்ள அருமை மகனையு முடன் கொண்டு சென்றனள். இருவரும் திரும்பிவரும் வழியில் 'அப்வாஹ்' எனுமிடத்தில் தாய் தேகவியோகமாயினள். தாயை யிழந்த மகனார் பாட்டனாராதரவிலிருந்து வந்தனர். வயோதிகராகிய பேரனார் சிறியப்பராகிய அபூதாலிப் வசம் அநாதைப் பாலனை ஏற்பித்த சில நாட்களில் இவ்வுலகம் விட்டேகினர். சிறு வயதுள்ள அப்பிள்ளையார் விளையாடுவதில் பிரியமில்லாதவராய் தனித்தவிடத்தில் தனிமையாக இருந்து சிந்தித்தலிலே ஆசைப்பட்டனர். பள்ளிக்குச் சென்றாரிலர். ஆதலால் அவரை 'உம்மி' என்றே உலகம் அழைத்தது. சிறுவயதிலே ஆடு மேய்த்துவந்த இம்மகனார் வியாபாரத்திற்காகப் பெரிய வர்த்தகரான அபூதாலிப் சென்ற பொழுது அவருடன் சிரியா அல்லது ஷாம் தேசத்திற்குச் சென்றனர். புஸ்ரா நகரில் பஹீரா எனும் கிறிஸ்தவத்துறவியின் மடத்தில் இருவரும் தங்கினர். இவ்விளைஞரைப் பார்த்ததும் வேதத்தில் கூறியாங்கு உலக ரக்ஷகராக வரப்போகும் மகான் இவரே யென்று நினைத்து இவருக்கு யூதர்களால் இடையூறு நேரிடாத வண்ணம் பார்த்துக் கொள்ளும்படி சொன்னார். இந்த நாட்டில் அரேபியா தேசத்தில் காணப்படாத ஆறுகள், ஏரிகள் முதலான இயற்கைத் தோற்றங்களைக் கண்டு இவர் மகிழ்ந்தனர். இவை இறைவனுண்டென்னும்

உணர்ச்சியைக் கிளப்பின. வர்த்தக முறையில் பல மக்களைப் பார்க்கவும் பலருடன் பழகவும் பலவிடங்களுக்குச் செல்லவும் தருணங் கிடைத்தமையால் உலகஅறிவு இயற்கையறிவுடன் சேர்ந்தது. இவர் பிறந்த நாட்டிற்கு வந்த காலத்தில் குறைஷி கீஸ் வமிசத்தவருக்குள் கலகம் நிகழ்ந்தது. அபூதாலிப்பும் சண்டைக்குச் சென்றனர். ஆனால் முகம்மது இதில் கலக்கவில்லை. பின்பு சமாதானம் ஏற்பட்டது. அப்பொழுது முகம்மதுக்கு வயது பதினான்கு. ஜனங்கள் இவருக்கு 'அல் அமீன்' (நம்பத்தகுந்தவர்) என்ற பட்டத்தைச் சூட்டினார்கள்.

சிறிய பிதாவைப்போன்று முகம்மதும் வர்த்தகஞ்செய்யத் தலைப்பட்டனர். அல் அமீன், தாஹிரா (பரிசுத்தமானவர்) என இவர்மீது மக்களபிமானங் கொண்டமையால் தக்க லாபம் கிடைத்தது. பத்தாண்டுகளாக ஆடு மேய்த்தவர் வியாபாரியாகி சீருஞ் சிறப்பும் பெற்றனர். இவர் பெயரெங்கும் பரவியதால் கதீஜா வெனுஞ் சீமாட்டி இருதரம் மணந்தும் அமங்கலியாயிருந்த நிலைமையில் குலத்தாலும், குணத்தாலும், செம்மேனியுஞ் சிறப்பும் பெற்றிருந்தமையால், இருபத்தைந்து பிராயத்தில் காளைப் பருவமுள்ள இவரைத் தாம் வதுவை செய்யவிரும்பி 'மைஸ்ரா' வெனும் அடிமைமூலமாயும அவருடைய குணதிசயங்களைக்கேட்டு நபீஸாவென்ற மாங்கியிடம் தம் நோக்கத்தைத் தெரிவித்தனள். உருவுந் திருவும் வாய்ந்தனளெனினும், பதினைந்து வயதுக்கு மூத்த விதவையைத்தான் மணம் புரியலாமாவென்பதைத் தன் சிற்றப்பருக்கு அறிவிக்க அவரும் சம்மதங்கூறத் திருமணம் நிகழ்ந்தது. இருவரும் போன்புடனிருந்தனர். இம்மணத்தால் ஏழை மணாளர் செல்வவானயினர்.

"செல்வம்வந் துற்றகாலைத் தெய்வமுஞ் சிறிதுபேணார்
சொல்வன வறிந்துசொல்லார் சுற்றமுந் துணையுநோக்கார்
வெல்வதே நினைப்பதல்லால் வெம்பகை வலிதென்றெண்ணார்
வல்வினை விளைவுமோரார் மண்ணின்மேல் வாழுமாந்தர்".

ஆயினுஞ் செல்வச் செருக்குச் சிறிது முறாதவர் முகம்மது. ஆன

தால் உற்றுழி உதவியது அம்மாதரார் செல்வம். உரிமை பாராட்டிய மாதரசியும் ஒருமனப்பட்டு வாழ்ந்தமையால் மணவாளரின் பேரும் புகழும் பெருகின. அம்மையாருக்கு ஒரு மகனும் மூன்று பெண்மணிகளும் தோன்றினர். மகன் சிறுவயதிலேயே மறைந்தனன். மகளிர் மூவரும் அரிவை தெரிவைகளாய் மணந்து மக்கட்பேறும் எய்தினர். அன்னார் பெயர்களை வமிச வழியில் பார்க்க. அம்மையார் காலமுழுதும் அன்பரோடு இணங்கி அன்பருடைய கொள்கையையுந் தழுவிவந்தனர். 'ஸைத்' என்பவர் சண்டையில் பிடிபட்டு விற்கப்பட்ட அடிமையை மனைவி கதீஜா பெற்று அவரைக் கணவனுக்கு அடிமையாக்கினள். கொண்கன் அவருக்கு விடுதலையளித்தனர். அஃதன்றியும், அவருக்குத் தம் அத்தை மகள் 'சைனப் பீவி'யையும் மனைவியாக்கினர். இதனால் இவருடைய மக்கள்மீது பொலிந்த இரக்கமும் பேரன்பும் ஜொலித்தன. மேலும், அம்மையார் இம்மண்ணுலகை நீத்த பின்னரே ஒருவரின் பின் னொருவராக ஒன்பது காரிகைகளை இவர் மணந்தனர். இவர்களில் சிலர் சண்டையில் உயிர் துறந்தவர்களின் மனைவியர். இவர்களில் யூதப் பெண்மணி ஒருவர். இவ்விதமாக இவர் மணஞ்செய்ததற்குக் காரணங்கள் பலவுள. 'எல்லா மக்களும் கடவுள் மக்களே. மேல் கீழ் இல்லை. இனம் அயல் என்பதும் இல்லை. ஆதலால் வேற்றுமைக் கிடமில்லாமல் அனைவரும் ஒற்றுமைப்பட்டு வாழ்தலே அரேபியா தேசத்திற்குப் பெருமையளிக்கும்', என்பன சில.

இவர்களுமல்லாமல் இப்பெரியாருக்குப் பத்து மனைவிகளுமிருந்தனரென்பர். மேற்கூறிய நோக்கமே இதற்குக் காரணமென்பர். இவர்களில் மரியே என்பவளுக்கு இபுராகிம் என்ற மகன், பிறந்த பதினைந்து திங்களிலே மறைந்தனனெனச் சரிதங் கூறும்.

இஸ்லாம் மதத்தை நிலைநாட்டப் பெருமான்பட்ட அவஸ்தைக்குக் கணக்கில்லை. தனித்திருந்து தியானஞ் செய்யும் வழக்கமிருந்தமையால் முகம்மது அவர்கள் மக்காவிற்குச் சமீபமாயுள்ள ஹிரா எனும் மலைக்குகைக்குப் போய்ச் சிலநாள் தங்கிவந்த காலத்

தில் அரேபியருடைய அஞ்ஞானவிருள் நீங்குங்காலம் கிட்டியது. ஒன்றே தெய்வமென்பதை அரேபியர் மறந்து கஅபா எனுந் தொழுகை மண்டபத்தில் பற்பல விக்கிரகங்களை ஆராதித்து வந்ததை ஒழித்தலே தம் கடமையெனக் கருதி இவர் ஆண்டவனைப் பிரார்த்தித்து வந்தனர். ரம்லான் மாதத்தில் ஒரு திங்கட்கிழமையன்று ஞானச் சுடரொன்று தோன்றிற்று. (கே)ஜிப்ரீல் தேவதூதராகக் காணப்பட்டனர். இவருடைய வெளியீடே குர் ஆன் எனப்பட்டது. ஊருக்குத் திரும்பி வந்ததும் தம் முதல் மனைவியிடம் இந்த அற்புதத்தைத் தெரிவித்தனர். அம்மையார் சிலை வணக்கத்தைக் கைவிட்டனர். ஊரார் வசையையும் ஏற்றனர். இவரைப் பின்பற்றி ஒருவரொருவராக நாற்பதுபேர் இவர் தம் கொள்கையில் பற்று வைத்தனர். இவர்களில் அபூபக்கர் இணைபிரியா நண்பர். இவர் தம் ஆயுள் பரியந்தம் முகம்மது நபியைக் கைவிடாமல் கூடவே இருந்து வந்தனர். அடிமை விடுதலை பெற்ற சைத்தென்பாரும் அவ்வண்ணமே பிரியாதிருந்தனர். நபி அவர்கள் மூன்றுண்டுகளாக மறைந்திருந்து நற்போதனைகள் செய்துவர, நான்காமாண்டில் வெளிப்படையாக ஸபாவெனு மலையடியில் தமது தீர்க்க தரிசனத்தைப்பற்றித் தம் குலத்தினராகிய குறைஷிகளுக்கு அறிவித்தனர். அதனை ஏற்காத பலரும் இவர் காக்காய் வலிப்புடையவர், ஆவேசமும் மயக்கமும் உடையவர் என்று கூறி இவர்மீது கல்லெறியத் தலைப்பட்டனர். இவருடைய சிற்றப்பரும் இப்புதிய போதனையை விட்டுவிடும்படி நபி அவர்களிடம் மன்றாடினர். அதற்கு நபியவர்கள் இணங்கவில்லை. சிலை வணக்கத்தைக் கைவிடும்படி பதிலளித்தனர். இதனைச் செவிமடுத்த சிறிய தந்தையார் மனமுருகி 'உமக்கு யாதொரு இடுக்கணும் இடையூறும் வந்தணுகாதபடி நான் உம்மைப் பாதுகாப்பேன்' என்று திருவாய் மலர்ந்தருளினர். குறைஷிகள் எத்தனையோ விதங்களில் இடுக்கண் இழைத்துவந்த போதிலும் நபியவர்கள் மனந் தளராமல் ஊக்கமாகப் போதனையாற்றி வந்தனர். பின்னர் இவர் குலத்தினர் 'உத்பா' வெனுந் தூதரையனுப்பிச் சிலை வணக்கத்தைக் குறை கூறுதிருக்க வேண்டினர். 'பெருந்தனம் வேண்டுமெனின் அதனை அளிப்போம்', 'அரசனாக விரும்பினால் அரசனாய் வீற்றிருக்கச்

செய்வோம், உத்தமப் பெண்மீது ஆசையிருப்பின் அதனை நிறைவேற்றுவோம்' என்றும் சொல்லியனுப்பினர்.

இத்தூதுக்கு இசையாமல் தம் கொள்கையே சிறந்தது என்று மறுமொழி விடுத்தனர்.

"ஏங்குவ ரிரங்குவ ரிருகணீர் விழத்
தேங்குவ ரடிக்கடி தீனை மாறியு
நீங்குவ தில்லென நினைத்திட் டுள்ளகம்
வீங்கிட நெட்டுயிர்ப் பெறிந்து வீழ்குவார்".

ஒரு தடவல் நபியவர்கள் கஃபாவிற்குச் சென்றிருந்தபோது குறைஷிகள் பெருமானைப் பிடித்துக் கழுத்தில் நாணிட்டுத் துன்புறுத்தினர். அத்தருணம் பெருமானவர்களை அபூபக்கர் ஆபத்தினின்று விலக்கினர். நபிகள் ஏழை முஸ்லீம் ஆண் பெண்மக்களுக்குப் பலவிதத்துயரமேற்பட்டும் மனஞ்சலிக்காமல் பிடித்தபிடி நெகிழாமல் நாயன்மீதுள்ள பற்றை விடாதிருந்தனர். பெருமானுத்தரவின்படி துன்பமுற்ற முஸ்லீம்களில் எண்பத்து மூவர் 'ஹபஷி' என்ற அபிசினியர் நாட்டில் குடியேறினர்கள். இது 'நுபுவவத்' எனும் ஐந்தாமாண்டினில் நிகழ்ந்தது. ஊரைவிட்டுப் போனவர்களுடைய துயரம் நீங்கவில்லை. கொடிய குறைஷிகளின் தூதர்கள் அங்குஞ்சென்று முஸ்லீம்களை வெளிப்படுத்துமாறு முறையிட்டனர். அங்ஙனஞ் செய்ய மறுத்துவிடவும் தூதர்கள் மக்காவிற்குத் திரும்பினர். பின்னர் மற்ருெரு முஸ்லீம் கூட்டம் ஹபஷிக்குச் சென்றது. மக்காவிலிருந்த அபூபக்கர் போன்றவர்கள் நாடு விட்டேக முனைந்தும் முடியவில்லை. வீடுகளின் பக்கத்தில் பள்ளிவாசலை ஏற்படுத்தி ஆங்கே இவர் தொழுதுவந்தனர், குர்ஆனைப் படித்தனர், கண்ணீர் சொரிந்தனர். இதனை நோக்கிய குறைஷிகள் மேலும் மேலும் துவேஷங் கொண்டனர். அப்பொழுது நபியவர்களின் மற்ருெரு சிற்றப்பாராகிய ஹம்ஸா என்பவர் முஸ்லீமானர். குறைஷிகளின் சூழ்ச்சியொன்றும் பலிக்கவில்லை. பின்பு உமரும் இஸ்லாத்தைத் தழுவினர். இதன்பின் குர்ஆன் பகிரங்கமாகப்போதிக்கப்பெற்றது. இவ்விருவர்களின் மதமாற்றத்

தால் குறைஷிகள் திகிலடைந்தனர். அப்படியிருந்தும் முகம்மது நபியவர்களின் குடும்பத்தைக் குறைஷிகள் தாக்க ஆரம்பித்தனர். அப்பொழுது அபூதாலிப் அவர்களும் கதீஜா பிராட்டியாரும் காலஞ்சென்றனர். இதனால் நபியவர்களுக்கு வருத்தத்தின் மேல் வருத்தமுண்டாயிற்று. மக்காவிற்குச் சமீபமாயுள்ள 'தாயிப்' என்ற விடத்திற்குப்போய் அங்கேயுள்ள மக்களுக்கு இஸ்லாத்தைப்போதித்தனர். அங்கே வீணர்கள் கூட்டங்கூடி கல்லெறிந்னர். அதனால் நபியவர்கள் மக்காவிற்குத் திரும்பி வந்தனர். அங்கும் பகைவர்கள் கூச்சலிட்டனர், நிந்தித்தனர். ஆயினும் பேர் பெற்ற 'துபைல்', எனும் மகான் மக்காவிற்கு வந்தபொழுது இக் கூச்சலையும் இறைச்சலையும் கேட்டு உண்மையை ஆய்ந்து முஸ்லீமாயினர். இச்சம்பவத்தால் முஸ்லீம்களுக்கு மதவூக்க மிகுந்தது.

மதீனுவிலிருந்து தல யாத்திரை செய்து மக்காவில் நிகழும் ஆண்டுவிழாவிற்கு அநேகர் வந்திருந்தனர். நபியவர்கள் அன்னுருக்கு இஸ்லாத்தைப் போதித்தனர். அவர்களில் சிலர் வசப்பட்டார்கள். அவர்களுடன் முஸ் அபுவின் உமைர் இஸ்லாம் மதப் போதகராகச் சென்றனர். இவருடைய போதனையால் இஸ்லாம் விரைவாக எங்கும் பரவிற்று. முஸ்லீம்கள் பலர் அடுத்த ஆண்டு மக்கா விழாவிற்கு வந்தனர். அன்னுரிடம் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள் நபியவர்களை நீங்கள் ஆதரிப்பீர்களானல் அவர்கள் உங்களுடைய நகரத்திற்கு வருவார்கள் என்றதும், அனைவரும் முக மலர்ச்சியுடன் அதற்குச் சம்மதித்தனர். உடனே முஸ்லீம்களில் நூறு குடும்பம் வரை மதீனுவில் குடியேறின. அதனுல் மக்காவில் பல வீடுகள் மூடப்பட்டிருந்தன. நபிகளைப்பாதுக்காக்க அன்ஸாரி குடும்பங் தலைப்பட்டது. பதின்மூன்ருமாண்டு நபி அவர்கள் யாதரப் எதரப் என்ற மதீனுவிற்குப் புறப்பட்டனர். அபூபக்கர் பின் தொடர்ந்தனர். இவ்வாறுன நிகழ்ச்சிக்கு ஹஜ்ரத் என்று பெயராயிற்று.

இருவரும் மக்காவுக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள 'தௌர்' எனும் மலைக்குகையில் மூன்று நாளிருந்தார்கள். பெருமான் வீட்டை முற்றுகை போட்ட கொடிய குறைஷிகள் அவ்வீட்டி

னுள் ஹஸ்ரத் அலிமட்டும் இருப்பதைக்கண்டு அவரிடம் நபி எங்கே என்று வினவ, நாயனுக்குத் தெரியுமென்று விடை பகர, கோபங்கொண்டு அன்னாரையும் அபூபக்கரையும் பிடித்துக்கொடுப்பவருக்கு நூறு ஒட்டகங்கள் நன்கொடை கொடுப்பதாக விளம்பரஞ் செய்தனர். மேற்கூறிய குகையருகே சிலர் சென்றனர். குகை வாயிலைச் சிலந்திப்பூச்சி வலையைப்பின்னி அடைத்து விட்டதையும், பக்கத்தில் நின்ற மரக்கிளையில் புறாக்கள் கூடுகள் கட்டியிருந்ததையுங் கண்டோர் அதனுட்புகாமல் மீண்டனர்.

"முஹம்மதரிருக்குஞ் சார்பிற் சிலம்பிநூல் மறைப்பவோர்பால்
புகைநிறக் குன்றிச்செங்கண் புறவினங் குடம்பைசெய்திட்(டு)
அகடுறைக் கருவிட்டன்பா யணிமணிச் சிறையால்போர்த்துப்
புகரறச் சேவலோடும் பொருந்தியங் கிருந்ததன்றே".

இருவரும் நான்காம் நாள் குகையைவிட்டுப் புறப்பட்டுக் கடும்பகலில் நடந்துசெல்லக்களைப்புண்டாகி இடையில்ஆட்டுப்பாலருந்திப் பின் பிரயாணஞ் செய்யத் தொடங்கினர். வேவுகாரரிலொருவன் இருவருஞ்செல்வதைக்கண்டு அன்னார்பின் குதிரையை வேகமாய்ச் செலுத்தினன். பரி அயர்ந்து விழுந்தது. மூன்று முறை பரியேறிப் புறப்பட்டும் தடைமேல் தடை யேற்பட்டதால் வேவுகாரன் மனஞ்சஞ்சலப்பட்டு நபியவர்களை அணுகி நிகழ்ந்ததைக் கூறினான். நபியவர்கள் அவன்மீது இரக்கமுற்று உனக்கு யாதொரு ஆபத்தும் நேரிடாதென்று கூறவே, அவன் ஊர்நோக்கித் திரும்பினான். நபியவர்களும் நண்பரும் பிரயாணப்பட்டு மூன்றாம் நாள் 'குபா' எனு மூரில் பதினான்கு நாள் தங்கி அங்கு பள்ளிவாசல் அமைக்க முயன்றார்கள். ஊராரனைவரும் ஊக்கமாக வேலை செய்தனர். அதன்பின் இருவரும் புறப்படவே அன்சாரிகளும் பின் தொடர்ந்தனர். நபிகளின் வரவை முன்னறிந்த மதீனத்தார்கள் எதிர்வந்து அழைத்தார்கள். அவ்வூரில் ஹஸரத் அபுஅய்யூப் எனும் ஏழையின் விருந்தாளியாக ஏழுமாதம் வதிந்தனர். அப்பொழுது மக்காவிற்கு ஆளனுப்பி நபிகள் தம்கண்மணியாகிய **பாத்திமா** வையும் ஆயிஷாப் பிராட்டியாரையும் வரவழைத்துக்கொண்டனர். குடியிருப்பதற்கு மண்செங்கலாலமைத்த சுவரின்

மேல் பேரீச்சஓலைகளால் மேயப்பட்ட சாதாரணமான கட்டடம் அமைக்கப்பெற்றது. அன்றியும் அங்கு புதிதாகப் பள்ளிவாசல் ஒன்றும் அதன் பக்கத்தில் இரண்டு அறைகளும் கட்டப்பட்டன. இவற்றிற் கூடிய மக்களுக்குத் தருமம்பற்றிய அருமையான பல உபதேசங்களைப் பெருமானவர்கள் செய்யவே யூதர்கள் கிறித்த வர்களுள்பட அவற்றைக் கேட்டு அநேகர் முஸ்லீம்களானார்கள்.

மதீனாநகரில் அன்சாரிகளுக்கும் யூதர்களுக்கும் அடிக்கடி போராட்டமுண்டு. அவற்றில் இருகக்ஷிக்காரர்களிலும் பிரபலமானவர்கள் பலர் மாண்டனர். பலர் வறுமையுற்றனர். அந்நகரின் பள்ளிவாசலில் 'பாங்கு' எனும் தொழுகை முறை துவங்கிற்று. 'அல்லா மிகப் பெரியவன். அல்லாவைத்தவிர வணக்கத்திற்குரியவரெவருமில்லை.' இதனைக்கேட்ட மக்களனைவரும் பக்தியொழுக்கத்தோடு பள்ளிவாசலில் வந்து கூடுவது வழக்கமாயிற்று. அடைக்கலம் புகுந்த முஹாஜிரீன்களும், உதவி புரிந்த அன்சாரிகளும் சகோதரர்களாயினர். 'பதர்' யுத்தத்திற்குப்பின் அடைக்கலம் புகுந்தோரில் பலர் செல்வம் பெற்றனர். செல்வர்களானது வியாபார முயற்சியினாலே என்பர். பெரும்பாலோர் கூலிவேலை செய்து பிழைத்தனர். இவ்வாறு கிடைத்த பொருளில் ஒரு பகுதியை வீட்டுச் செலவு செய்து, மீதியைப் பொது நிதிக்கும் அளித்து வந்தனர். பெம்மானவர்களுக்குச் சகாவாயிருந்த ஏழைகளுக்குப் பெருமான் தமக்கு வருமுணவைப் பாகித்துக் கொடுப்பதுண்டு. பசிப்பிணியால் இரவு முழுதும் விழித்து ஓதும் இவ்வறுமையாளர்களுக்குப் போதனை செய்யப் போதகர் நியமித்து அன்னாரைக்கொண்டு அயலூரில் பிரசங்கஞ் செய்ய அனுப்புவதுண்டு. மற்றவேளைகளில் இவர்கள் 'சுப்பா' (பள்ளிவாசல் வாரி நீட்டிவிட்ட விடம்) வில் வசிப்பார்கள்.

முஸ்லீம்களுக்குப்பகைவர்கள் இருவகையினர்: (1) முஸ்லீம் வேடதாரிகள், (2) யூதர்கள். இவர்களால் முஸ்லீம்களுக்கு இடைஞ்சல் நேரிடாதபடி நபியவர்கள் ஒருடன்படிக்கை செய்து வைத்தனர். அன்னிய நாட்டார் பிரவேசித்தால் இவ்விருவகையி

னரும் அன்னியனுக்கு இடங்கொடாமல் ஒறுத்தல்வேண்டும். இதற்கு அனைவரும் சம்மதமளித்தனர். இவ்விருவகையாருக்குள் வித்தியாசமேற்படின் நபியவர்கள் நியாயமாக வழக்கை முடிவு செய்வார்கள்.

இதுவரை முஸ்லீம்கள் தொழும்பொழுது பைத்துல் முகத்திஸ் (எருசலேம்) நகரத்தை நோக்கித் தொழுது வந்தார்கள். இதுமுதல் கஅபாவை நோக்கித் தொழுமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. முன்னோக்குமிடம் "கிப்லா" வெனப்பட்டது. பலரும் ஒன்றுசேர்ந்து தொழுதல் புண்ணியமாம் என்ற கோட் பாட்டின் படி பலரும் கூடிவாழ நேரிட்டது. தொழுகையை நடப்பிப்பவர் இமாமெனப்பட்டனர். முன்காலத்தில் கஅபா அமைக்கப்பெற்றதே ஒரு கடவுளை வணங்குவதற்காகவே. அதனை நாளடைவில் மக்கள் மறந்து சிலை வணக்கம், பல தெய்வவணக்கம் இவற்றைக் கைப்பற்றினர். இதனை யொழித்தலே நபியவர்களின் கருத்தாதலின் எதிரிகள் பலர் தோன்றினர், போர் புரிந்தனர், இடையூறு பலவிளைத்தனர் என்பதை முன்னமே கூறப்பட்டது. குறைஷிகள் வைராக்கியம் குறையவில்லை. மதீனாவைத்தாக்கத் தானையைத் தயார் செய்தனர். இதையறிந்த பெருமான் முன் உடன்படிக் கைப்படி பலரும் ஒற்றுமைப்பட்டு அன்னியரைத் தாக்குமாறு தூண்டினர். முன்னூற்க்கு மேற்பட்ட முஸ்லீம்கள் ரம்லான்மீ 12உ பெருமானவர்களின் தலைமையின் கீழ் புறப்பட்டனர். இருகக்ஷியினரும் 'பதர்' (மதீனாவிலிருந்து 80 மைல் தூரத்திலுள்ளது) எனும் பள்ளத்தாக்கில் சந்தித்தனர். இரவில் பெம்மான் நித்திரை செய்யாமல் பகவானைத் தோத்தரித்தனர். குறைஷிகளில் சிலர் இரத்தஞ் சிந்துதலாகாது என்று ஓதுங்கினர். சிறு படை பெரும்படையை வென்றது. இதுவே இஸ்லாமுக்குக் கிடைத்த முதல் வெற்றி. இச்சண்டையில் எதிரிகள் மாவு மூட்டைகளை விட்டோடியபோது அவற்றை முஸ்லீம்கள் கைப்பற்றினதால் இதற்கு 'சவீக்' என்ற பெயருண்டாயிற்று. இவ்வெற்றி ஞாபகமாக ரம்லான் நோன்பு ஏற்பட்டது. மறுநாள் ஈதுல்பித்தர் எனுந் திருவிழாவில் 'ஸதகா' எனும் தருமஞ் செய்யும் வழக்கமும்

தொடங்கப்பெற்றது. இத்தோல்வியால் சண்டை நின்றுவிடவில்லை. ஹிஜரி மூன்றுமாண்டில் 'உஹது' சண்டை நிகழ்ந்தது. இவ்விடம் மதீனாவிலிருந்து இரண்டாவது மைலிலுள்ளது. ஹஸரத் அப்பாஸ் அவர்கள் மூலமாகக் கிடைத்த இரகசிய எழுத்தால் நபியவர்கள் எதிரிகளை எதிர்க்கத் தயாராயிருந்தனர். ஆயினும் தாம் கண்ட கனவு விரோதமாக விருந்தமையால் பெம்மானவர்கள் மனஞ் சிறிது கலங்கிற்று. தம்வசமிருந்த வீரர்கள் 700 பேர்களே. யுத்தக் குழப்பத்திலே முஸ்லீம்கள் முஸ்லீம்களைக் கொன்றனர். குழப்பத்திற்குக் காரணம் இந்த யுத்தத்தில் பெருமானவர்கள் இறந்து பட்டனரென்ற வதந்தி பரப்பப் பெற்றமேயாம். பெருமானவர்கள் காயப்பட்டிருந்தது உண்மை. தம் இரண்டு பற்களையும் இழந்தனரென்பதும் நிச்சயம். பாத்திமா சிகிச்சை செய்ததும் உறுதி. அபு சூபியான், இன்று தான் பதர்த் தோல்விக்குப் பதிலாக நாங்கள் வெற்றி பெற்றோம் என்று கர்வங்கொண்டனர். அவர் மனைவியார் ஹந்த் என்பவளும் ஹம்ஸாவின் வயிற்றைப்பிளந்து ஈரலை யெடுத்து வாயிலிட்டுச் சப்பினளாம். நம் சண்டையில் ஆயிஷா நாயகியும் ஏனைய மாதர் பலரும் காயமடைந்தவர்களுக்கு வேண்டும் சிஸ்ருஷை செய்தார்கள். அபு சூபியான் சபதம்முற்றும் பலிக்கவில்லை. வெற்றி யார்பக்கமென்று உறுதியாகத் தெரியமுடியவில்லை. மதீனாவெங்கணும் அழுகைக் குரலே கேட்கப்பட்டது. இப்பெரு நஷ்டம் முஸ்லீம்களுக்கு ஏற்பட்டதால் குறைஷிகள் ஊக்கமடைந்தனர்.

ஆயினும், கலாபிக் முதலான சில கூட்டத்தார்கள் முஸ்லீம்களானார்கள். யூதர்களிலும் முக்கியமானவர்கள் இஸ்லாத்தைத் தழுவினார்கள். ஔஸ், கஜ்ரஜ், இருவகைக் கூட்டத்தாரும் முஸ்லீம்களாகி ஒற்றுமைப்பட்டு வாழ்ந்தார்கள். அன்சாரிகளுக்கு யுத்தத்தில் கிடைத்த பொருளைக்கொண்டு யூதர்களிடமிருந்த ஏழை மக்களின் பணயங்கள் மீட்டப்பட்டன. முனபிக்கீன்கள் சிலருடன் குறைஷிகள் கடிதப் போக்குவரத்துச் செய்தபோதிலும் முஸ்லீம்களைக் கசக்கிவிடப் பலவாறு முயன்றும் சித்திகிடைக்கவில்லை. அவர்கள் ஆயிஷாப் பிராட்டியார் மீது சுமத்திய பெரும்

பழியும் ஆண்டவன் கிருபையால் இற்றொழிந்தது.

அபுசூபியான் விரோதம் பின்னும் தொலைந்தபாடில்லை. இருபத்து நாலாயிரம் யூதர்களும் இவனைத் தலைவனாகக் கொண்டு யுத்தத்திற்கு வந்தனர். மதீனாவிற்குப் பாதுகாப்பாயிருந்தது மலைகளும் குன்றுகளும் தோட்டங்களுமே. ஷாம் மாகாணத் திசைமட்டும் திறந்த வெளியாயிருந்தது. அதைப் பாதுகாத்தற்பொருட்டுப் பெருமானவர்கள் பத்துகெஜ சதுரமும் ஐந்துகெஜ ஆழமுமுள்ள அகழைத் தோண்டும்படி உத்தரவிட்டனர். தாமும் அம்முயற்சியில் ஈடுபட்டனர். இப்பொழுதுதான் பாரசீகத்தின் திறவுகோல் கிடைத்ததென்று மகிழ்ந்தனர். ஜிப்ரீல் அதனை உறுதிசெய்ய, சிறுபடையினர் ஊக்கம்பெற்றனர். அகழ்ச்சண்டையில் அபுசூபியான் முதலான ஐந்து தளகர்த்தர்கள் சேனையை நடத்தியும் அவர்கள் அகழைக்கடக்க முடியவில்லை. இச்சண்டையில் இறந்த முஸ்லீம்கள் சிலரே.

முகாஜிரீன்கள் மதீனாவிற்கு வந்து ஐந்தாண்டுவரை மக்காவைப்பாராத காரணத்தால் பார்க்கவேண்டுமென்ற அவா மிகுந்திருந்தது. இவர்களின் பெண்டிர் பிள்ளைகள் அங்கே குடியிருந்து வந்தனர். கபாஅவிற்கு யாத்திரிகர்கள் வரும் நான்கு மாதங்களில் சண்டை சச்சரவுகளை நிறுத்திவைப்பது வழக்கம். கஅபாவைக் கண்டு தரிசித்ததாகப் பெருமானவர்களும் கனவுகண்டார்கள். கலகமொன்றும் நேரிடாதிருக்குமாறு ஹுதைபியா உடன்படிக்கை செய்யப்பட்டது. "அடுத்த வருஷத்தில் முஸ்லீம்கள் மக்காவில் மூன்றே நாள் தங்கலாம். உறையிலிட்ட வாள் மட்டும் தாங்கிவரலாம். மக்காவிலுள்ள முஸ்லீம்களை கூட்டிக்கொண்டு போகலாகாது. மக்காவில் குடியிருக்க விரும்பும் முஸ்லீம்களைத் தடுக்கக்கூடாது." இதன்பின் பெருமானவர்கள் மதீனாவுக்குத் திரும்பி வருகையில் ஆண்டவனருளால் 'நாம் உமக்கு வெளிப்படையாக வெற்றி தந்தோம்' எனும் அசரீரிபிறந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் அபிசீனியாவிலிருந்த முஸ்லீம்கள் தங்கள் தங்களூருக்கும் மதீனாவிற்கும் பயமில்லாமல் திரும்பி வந்தனர்.

இதற்குமுன் மதீனுவிலிருந்து வெளியேறிய யூதர்கள் இரு நூறுமைல் தூரத்தில் கோட்டைகளைக் கட்டிச் செழித்திருந்த தேசம் கைபர் என்பது. ஹிஜ்ரி ஆருமாண்டில் ஈண்டுள்ள யூதர்களுடன் கத்பான் கூட்டத்தாரும் சேர்ந்து யுத்தபாணிகளாயினர். மதீனுவைத் தாக்குவதே அவர்கள் கருத்து. பெருமானவர்களின் ஒட்டகங்களில் இருபதைக் கன்னெஞ்சம் படைத்த யூதர்கள் கைப்பற்றினர்கள். அவற்றை மேய்த்துக்கொண்டிருந்த அபூதரையும் வெட்டிவிட்டார்கள். இச்செய்தி எட்டியதும் பெருமானவர்கள் "ஆண்டவனுக்காகப் போர்புரிய ஆசையுடையவர்கள் நம்முடன் வாருங்கள்" என்று விளம்பரஞ் செய்தார்கள். ஆயிரத்து நானூறு காலாட் படையும் இருநூறு குதிரைப்படையும் தயாராயின. பெருமானவர்களுடன் பிராட்டியார் ஹஸரத் உம்மு ஸல்மாவும் யுத்தகளத்திற்குப் புறப்பட்டனர். முஸ்லிம் படையினர் மூன்று கொடிகளைப் பிடித்துக்கொண்டு தக்பீர் சொல்லி ஆகுலஞ் செய்து கைபரை நோக்கிப் புறப்பட்டனர். அங்ககரிலிருந்த ஆறு கோட்டைகளில் இருபதாயிரம் போர்வீரர்களிருந்தனர். 'மர்ஹப்' எனுந் தலைவன் தலையை ஹஸ்ரத் அலி அவர்கள் வாளால் துணித்தனர். இருபது நாள் யுத்தம் நடந்தது. யூதர்கள் தோல்வியடைந்தனர். முஸ்லீம்கள் கைபரைக் கைப்பற்ற ஆரம்பித்ததும், யூதர்கள் ஆண்டு தோறும் அந்நாட்டின் விளைவு பொருள்களிற் பாதியைக் கப்பமாகக் கொடுக்கச் சம்மதித்தவுடன் பெருமானவர்கள் அதற்கு இணங்கினர். திக்கற்றிருந்த பெருஞ் செல்வியாகிய யூதஸ்திரி ஸபீயா என்பாள் சிறைப்பட்டவுடன் அந்த அம்மையாரை அடிமைப் படுத்தாமல் யூதர்களுடைய விரோதத்தைத் தணிக்கும் பொருட்டுத் தம்மனைவியாக்கிக் கொண்டனர். இதற்கு முன் நடந்த யுத்தங்களில் முஸ்லீம்கள் தங்களைக்காத்துக்கொள்ளவே யுத்தஞ் செய்தார்கள். இந்தக் கைபர் போர்தான் முஸ்லீம்கள் வாகை சூடற் பொருட்டுத் தொடுத்த போர்களில் முதலாவதாகும். கைபர் நாட்டில் பாதி பொது நிதிக்கும், பாதி யுத்தவீரர்களுக்கும் அளிக்கப்பட்டன. இப்போரின் பயன் யூதர்களின் பகை யொழிந்தது. குர் ஆன் தடையன்னியிற் போதிக்கப்பட்டது. மற்றிடங்களிலுள்ள யூதர்களும் கலகஞ் செய்வதை நிறுத்திவிட்டனர். மக்

காவுக்கு முஸ்லீம்கள் வருவதைப் பார்த்துப் பொறுக்கமாட்டாத குறைஷிகள் அவர்கள் அவண் தங்கும் மூன்று நாள் வரை நக ரத்தைவிட்டு வெளியூர்களிலிருந்தனர். இது நிற்க.

அடுத்த போர் ஷாம் தேசத்தில் 'மூத்தா' எனும் பதியிலி ருந்து அரசாண்ட கிறிஸ்தவ மன்னனாகிய ஷர்ஜிலுடன் நிகழ்ந் தது. அதற்குக் காரணம் முஸ்லீம் தூதரொருவரைக்கொன்றதே யாம். பழிவாங்குவதற்காக மூவாயிரம் வீரர்களைப் பெருமானவர் கள் அனுப்பினர்கள் எதிரிகளின் தானையோ எண்ணிக்கையற்றி ருந்தது. இரண்டு படைகளும் ஈட்டி வாள்களைப் பிரயோகித்தன. காலித் அவர்களின் வீரத்தால் முஸ்லீம்கள் வெற்றி பெற்றனர். பெருமானவர்கள் இந்நற்செய்தியைத் தீர்க்கதரிசனத்தால் அறிந்து வெளியிட்டார்கள். பின்னர் சில கிறிஸ்தவர்கள் இஸ்லாத்தைத் தழுவினர்கள். ஷர்ஜீல் பலவாறு முயன்றும் இஸ்லாம் பரவி வரு வதைத் தடுக்க முடியவில்லை.

இஸ்லாத்தின் பலத்தைக் குறைப்பதிலே கண்ணுங் கருத்து மாயிருந்த குறைஷிகள், ஹுதைபியா உடன்படிக்கை சரத்துக் களை மீறி, முஸ்லீம்களுடன் சேர்ந்த குஸாஅக் கூட்டத்தாரைத் தாக்கும்படி, பனுபக்கர் கூட்டத்தாரைத் தூண்டிவிடவே, கோர மான யுத்தத்தைத் தாங்கமாட்டாத குஸாஅக் கூட்டம் கஅபா வில் புகுந்தனர். எதிரிகள் அந்தப் பரிசுத்தமான தலத்தில் புகுந்து அநேகரைக் கொன்றனர். இந்த விவரந் தெரிந்ததும், பெருமானவர்கள் குறைஷிகளிடம் ஒரு தூதரையனுப்பி, இப் பரிசுத்தக் கேட்டிற்குக் கர்ரணமும் ஈடும் அறிந்து வரச்சொன் னர்கள். குறைஷிகள் சரியான பதிலளிக்கவில்லை, வீரமே பேசி னர்கள், உடன்படிக்கையை மீறினர்கள். இதனைத் தெரிந்தபின் பெருமானவர்கள் மக்காவிற்குச் சேனையோடு செல்ல எத்தனித் தனர். பத்தாயிரம் பேர்களுடன் பெருமானவர்கள் மக்காவுக்குப் புறப்பட்டனர். கடும்பகைவனான அபுசூபியான், முஸ்லீம்கள் இடைவழியில் தங்கியிருந்த இடத்திற்கு இரவில் வந்து பார்த்த தும் திகிலடைந்தான். ஹஸரத் அப்பாஸ் என்பவர் அவனைக் கண்டு பேசினர். பெருமானுடைய மன்னிப்பைப் பெற்றுத் தருவ

தாக வாக்களித்தனர். அபுசுபியான் அதற்கிசைந்து சொல்லவும், இருவரும் பெம்மானவர்களிடஞ் சென்றார்கள். அபுசுபியான் நபி நாயகத்துடன் பேசியதும் அவன் முஸ்லீமாயினன். இதனைக் கண்ணுற்ற முஸ்லீம்கள் ஆனந்த பரவசராயினர். அபுசுபியான் குறைஷிகளிடஞ் சென்று, 'விக்கிரக ஆராதனையை விட்டுவிட்டு நாயனை நம்புங்கள். நாம் நற்கதி அடையலாம்,' என்று கூறினான். அபுசுபியானுடைய மனைவி அதைக் கேட்டதும் தீராக்கோப முற்று அவனை அவமானமாகப் பேசித் துன்புறுத்தினள். முஸ்லீம் படை மக்காவுக்கருகில் வர, எதிரிகள் எவருங் காணப்படவில்லை. முஸ்லீம் படை நான்கு திக்குகளின் வழியாக மக்காவுக்குள் பிர வேசித்தது. அத்தருணத்தில் குறைஷிகளின் சிறுபடையொன்று முஸ்லீம்களின் மீது அம்பு எய்தது. காலித் அப்படையைப் புடைத்தோட்டினர். பூசல் ஒய்ந்தது. போர் முடிந்தது. பெருமான் கஅபாவை எழு முறை வலம் வந்து அங்கு உள்ளிருந்த சிலைகள் முந்நூற்று அறுபதையும் தம் கையாற்றள்ளி வெளியேற்றினர். கஅபாவும் தூய்மை அடைந்தது. பாங்கு கூறப்பட்டது. தொழுகை நிகழ்ந்தது. கஅபாவின் திறவுகோல் உத்மான் இப்னு தல்ஹாவிடம் கொடுக்கப்பட்டது. அப்படியே அச்சாவி அவர் சந்ததியிடமிருந்து வந்தது. பெருமானவர்களின் பெருந்தன் மையை அறிந்த உத்மான் உடனே முஸ்லீமாயினர். பெருமான் இஸ்லாத்தின் மகிமையைப்பற்றிக் குத்பா (பிரசங்கம்) செய்தனர். 'நாயன் உங்களை மன்னிப்பாராக' என்று அவர் கூறியதும், 'இவ ரினும் சிறந்தவர் எவருமில்லை' என்று கேட்டோரனைவரும் சொன்னதுமன்றித் தாங்களே வந்து முஸ்லீமாயினர். பதினைந்து நாள் மக்காவிலிருந்து விட்டு பெம்மான் மதீனாவிற்குச் சென்றனர். மக்காவின் வெற்றி மகானின் வெற்றியாயிற்று.

௬

ஹிஜ்ரி எட்டாமாண்டில் ஹுனைனில் சண்டைஉண்டாயிற்று. இப்பள்ளத்தாக்கிலிருந்து கூட்டத்தாருக்கு மக்காவின் வெற்றி வருத்தத்தைக் கொடுத்தது. அக்கூட்டத்தார் வில் வீரர்கள். அவருடைய அம்புகளைத் தாங்கமாட்டாமல் முஸ்லீமுடைய பெருஞ்சேனை சிதறியது. பெருமானும் அப்பாஸும் நிலை பெய

ராமல்நின்றனர். பின்னர், சிதறிய சேனை திரும்பவுங் கூடிற்று. ஆவேசத்திலாழ்ந்தது. வீரப்போர் நிகழ்ந்தது. எதிரிகளில் ஆறாயிரவர் அடிமைப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான ஒட்டகங்களும், ஆடுகளும், ஔக்கியா (வெள்ளிக்காசும்) முஸ்லீம்களின் கைவசமாயின. பிடிபட்டவர்களில் பெருமானவர்களின் செவிலித்தாயின் மகள் ஒன்று என்றறிந்து, அம்மாதை வருவித்து மரியாதைசெய்து ஒட்டகங்களையும் ஆடுகளையும் கொடுத்து காவலாளருடன் ஊருக்கனுப்பினார்கள். ஆறாயிரம் கைதிகள் விடுதலையடைந்தனர். இவ்வாண்டில் பெருமானவர்களின் வாழ்க்கைத் துணையாயிருந்த மாரியாகப்தியாவிற்கு இபுராகிம் என்றழைக்கப்பெற்ற மகன் உதயமானான். ஓராண்டு அக்குழந்தை உயிருடனிருந்தது. நபியவர்களின் மகள் ஸைனப் ரலியும் இவ்வாண்டினில் பரலோகஞ் சென்றனள்.

கிறிஸ்தவர்கள் தொல்லையும் முஸ்லீம்களுக்கு ஏற்பட்டிருந்தது. தபூக் நகரம் ஷாம் மாகாணத்தின் எல்லையிலுள்ளது. முஸ்லீம் பெருஞ் சேனை வருவதைக்கண்ட கிறிஸ்தவ வீரர்கள் மருண்டு போயினர். இருபது நாள் வரை எதிரி வருவதை நோக்கிக் கொண்டேயிருந்த நபிகள் ஏமாற்றமடைந்தனர். அனேக கூட்டத்தார் பெருமானவர்களிடம் பாதுகாப்பு வரி கொடுப்பதாகச் சொல்லி உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அதன்பின் பெம்மான் மதீனாவிற்குத் திரும்பிவர நகரவாசிகள் முதியர், இளைஞர், ஆண், பெண் பகுதியாரனைவரும் கூடி நல்வரவு கூறினர்.

ஹிஜிரி ஒன்பதாமாண்டில் மக்காவுக்குத் தலயாத்திரை போன முஸ்லீம்களுக்கு நற்போதனை செய்யுமாறு சில பெரியாரைப் பெருமானவர்கள் அனுப்பினர். அப்பொழுது கஅபாவில் பழைய அநாகரிக கிரியைகள், சடங்குகள் நிகழ்வதைப் பார்த்தார்கள். அநாகரிகத்தை நீக்குமாறு பெருமானவர்கள் முயன்றனர். அந்த ஆண்டு தலயாத்திரைக்கு 'ஹைஹஜ்ஜுல் அக்பர்' என்ற பெயருண்டாயிற்று. அபுபக்கரும், ஹஸரத் அலி அவர்களும் குர்ஆனிலிருந்து பல ஆயத்துகளை ஓதினார்கள். பின் "முஸ்லீம்களைத்

தவிர ஏனையர் கஃபாவினுட் பிரவேசிக்கலாகாது என்றும், ஆடை யணியாமல் எவரும் கஃபாவைச் சுற்றிவரலாகாது என்றும், முஸ் லீம்களுக்கு விரோதிகளாயிருப்பவர்களும் அங்ஙனம் வரலாகாது என்றும் முஸ்லீம்களுடன் உடன்படிக்கை செய்து கொள்வ தற்கு நான்கு மாத அவதி கொடுக்கப்படுமென்ற அறிக்கை யொன்று வெளியிடப்பட்டதும், அனைவரும் முஸ்லீம்களாய் விட் டனர். அதன்பின் ஸக்காத்து (தருமவரி) ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆண்டிலும் அடுத்த ஆண்டிலும் பெருமானவர்களிடம் தூதுகள் பல வந்தன. பனூதமீம், பனூஸஅத், தக்கீப், நஜ்ரான் (எமனின் பக்கத்திலுள்ள சிறு மாகாணம்), கீஸ் ஐவான், தை, மஸைனு, ஆதிய விடங்களிலிருந்து நானாவிதக் கூட்டங்கள் இஸ் லாத்தைத் தழுவின.

முஸ்லீம் வேடதாரிகள் இஸ்லாமீது உட்பகையுற்று உழை யிருந்து தீங்கு இழைத்துவந்தனர். இவர்களுக்கு முனாபிகின்கள் என்று பெயர் வழங்கியது. விரோதிகளிடம் உறவு கொண்டாடி இஸ்லாத்திற்கு இடைஞ்சல் செய்தலே தங்கள் கருமமென்று இவ் வஞ்சகர்கள் நினைத்து ஒழுகி வந்தனர். அன்னாரில் உபையின் குழாமுமொன்று. இவ்வஞ்சகன் கொடிய நோயுற்று மறைந்தான். அவனுடைய தீச்செயல்களை மன்னித்து அவனுக்கு மரண பிரார்த் தனையும் பிரானவர்கள் செய்தனர். மதீனு நகர முழுவதும் இஸ் லாமியமாயிற்று. பெருமானவர்கள் அவதாரமெடுத்ததன் பயன் கைகூடிற்று.

ஹிஜ்ரி பத்தாம் ஆண்டில் துல்கஅதா மாதம் 26உ பெருமா னவர்கள் மக்காவுக்கு யாத்திரை செய்தார்கள். பிராட்டிகளனை வரும் அம்மகானுடன் ஆங்கு ஏகினர். துல்ஹலீபா, ஸர்ப் எனு மிடங்களிற்றங்கி ஸ்நானஞ் செய்து ஜெபதபம் முடித்தும், ஓதி உபதேசித்தும், ஒன்பதாம் நாள் ஞாயிறன்று மக்காவில் அனைவ ரும் வந்து சேர்ந்தார்கள். கஃபாவைத் தரிசித்தார்கள். அதன் பின் மர்வா என்ற குன்றின் மீதேறிப் பல கிரியைகள் செய்து முடித்ததும், அரபாத்தில் குழாம் தங்கிற்று. ஆண்டு லக்ஷக்கணக் கான பக்தர்கள் கூடியிருந்தனர். அன்னாருக்காகப் பெம்மான்

வெகு அருமையான ஒரு பிரசங்கஞ் செய்தனர். மதீனாவிற்குத் திரும்பிவரும் மார்க்கத்தில் கதீர்கம் என்னுமிடத்தில் தம் தோழர்களுக்குக் கேட்டாரைப் பிணிக்கத்தக்க அழகான உபதேசஞ் செய்தனர்.

மதீனாவிற்கு வந்த பின் பெருமான் தாம் பிரியுங்காலம் வந்துற்றதென்று தெரிந்து ஆண்டவனைத் தொழுதலிலே தம் காலத்தைச் செலவு செய்து வந்தனர். ஹிஜிரி 11ல் ஸபர் மாதமத்தியில் ஒரு நள்ளிரவில் மதீனாவில் பெரியார்களடக்கஞ் செய்யப்பட்டிருந்த ஜன்னத்துல் பக்கீஉக்குச் சென்று மனமார்ந்த பிரார்த்தனையொன்று செய்தார்கள். அதன் பின் பெருமானவர்களுக்குக் காய்ச்சல் கண்டு பலவீனப்பட்டிருந்த காலத்தில் ஒரு நாள் குளித்துவிட்டுப் பள்ளிவாசலுக்குப் புறப்படும் தருணத்தில் மயக்கமுண்டானதால், அன்று பெருமானவர்களின் ஆணைப்படி அபூபக்ரவர்களே தொழுகையை நடத்தினார்கள். நண்பர்கட்கும் பகைவர்கட்கும் நற்கதி கிடைக்கும் வண்ணம் கடைசியான பிரார்த்தனையைப் பெருமானவர்கள் செய்து முடித்தனர். பின்னர் அவர் மகள் பாத்திமாவை அழைத்து, 'நான் இனி இறந்து விடுவேன் நீயே என்னிடம் முதலில் வந்து சேருவாய்' என்று சொற்றனர். ரபீயுல் அவ்வல் 12உ திங்களன்று பிற்பகலில் பெருமான் ஆண்டவன் அடி சேர்ந்தனர். அப்பொழுது பெருமானவர்களுக்கு வயது அறுபத்து மூன்றே. ஆண்டவன் அருள்க.

மரணமோ, மயக்கமோ என்ற சந்தேகந் தீர்ப்பதற்காக நபியவர்களின் உடம்பு கீழ் நாட்டு வழக்கப்படி மூன்று தினங்கள் புதைக்கப்படாமல் இருந்தது. மக்கவிலா, மதீனாவிலா, வேறு இடத்திலா அடக்கஞ் செய்வது என்ற வர்தம் நிகழவே, பெருமான் தாம் மரணமாயின இடத்தில் தம்மை அடக்கஞ் செய்ய வேண்டுமென்று கட்டளையிட்டிருப்பதாக அபூபக்கர் தெரிவித்தனர். அங்ஙனமே ஆயிஷிப் பிராட்டியார் இல்லத்தில் நபிகள் மரணமாகும்போது படுத்திருந்த படுக்கையினடியில் குழி தோண்டப்பெற்று ஆங்கே அடக்கஞ் செய்யப்பெற்றது. அம்மையார் அகம் பள்ளிவாசலுக்கு அடுத்திருந்தது. ஹுத் ஜீராவில் நபி

யவர்களின் நண்பர் அபூபக்கர், உமர் இருவர்களும் அடக்கஞ் செய்யப்பட்டுளர். தலயாத்திரிகள் அந்த இடத்தைப் பார்த்து வணங்காமற் போவதில்லே. வாகாபியர் மதீனவைப் பிடித்துக் கொள்ளேயடித்த காலத்தில் பக்திமான்களுடைய பிரார்த்தனேகள் நிறைவேறியதன் ஞாபகமாக அளித்த விலேயுயர்ந்த காணிக்கைப் பொருள்கள் அந்த இடத்தில் புதையல்களாக இருப்பதைக் கேள்வியுற்று அதனேக் கொள்ளே கொண்டார்கள். ஆயினும் அவ்விடம் செம்மைப்படுத்தப்பட்டு ஷேக் அல்ஹாமுடைய மேற்பார்வையில் வைக்கப்பெற்றது.

முகம்மது நபி அவர்கள் இயற்கை அறிவு மிகுந்துள்ளவர். ஞாபக சக்தி மிகுந்தவர். படியாதவரெனினும் செவிச் செல்வம் நிறைந்தவர். இங்கிதமாகப் பேசும் வல்லமை பெற்றவர், பிள்ளேகளிடங் கொஞ்சுபவர், மிதமாகவுண்பவர், விரதங்கள் நோன்புகள் காப்பவர், எளிய கிழிந்த உடையுந் தரிப்பவர், அணி ஆபரணங்களே நயவாதவர், உயர்ந்த பதவியி லிருந்தபொழுதும் பாட்டாளிகளுடன் கடுத்தமான வேலே செய்பவர். மேல் கீழ் என்றில்லாமல் யாவருடனும் சமத்துவமுஞ் சகோதரத்துவமும் பாராட்டியவர். எப்பொழுதும் குளித்துச் சுத்தமாயிருப்பவர். பெண்மையும் சுகந்தமும் நாடுபவர், நடுவு நிலேமை தவருதவர். காட்சிக் கெளியர், கடுஞ் சொல்லீரல்லர். ஈவுமிரக்கமுங் குடிகொண்டவர். இயற்கையில் முற்கோபியாயினும், அடக்க முடையவர். அத்தகையரென்பதற்கு அவருடைய ஏவலாளி ஆனஸ் கூற்றே தக்க சான்ருகும். 'எனக்கு எட்டுவயது முதல் நான் அவருக்குப் பணிவிடை செய்தேன். என்னல் எத்தனேயோ சாமான்கள் கெட்டுப்போயின. அப்படியிருந்தும் எப்பொழுதாயினும் எதற்காயினும் அவர் என்னேத் திட்டியதேயில்லே.' பெருமானவர்கள் சிறுவயதிலிருந்தே ஏகமாயிருந்து தியானஞ் செய்து வந்த பழக்கத்தாலும், வெவ்வேறு மக்களுடன் பழகிக் குற்றங் குறையில்லாத மனிதவர்க்கமே கிடையாதென்று தெரிந்தமையாலும், 'ஆங்கமல நீர்போல்' எவருடனும் வேற்றுமைப்படாது ஒத்து வாழ்ந்தனர். இவருடைய குணதிசயங்களால் அரேபியா தேசம் ஒற்றுமைப்பட்டு முன்னேற்ற

மடைந்ததென்னும் முஸ்லீம் உலகம்.

சுருங்கக்கூறின், மனத்தூய்மை, இன்னு செய்யாமை, மரியாதை, அன்பு, சுத்தமான வாக்கு, பெரியாரிடம் வணக்கம், தாழ்ந்தாரிடம் பொறுமை, ஏழைகளிடம் அன்பு, இவை நபிகளிடம் மிளிர்ந்தன. முதலில் மதோபதேசகராயிருந்து, பின் தேச அதிகாரியாகி, உறுதி தவருத நண்பராகவும், தர்மந்தவருத சத்துருவாகவும், கருணை தவருத எதிரியாகவும், நியாயந்தவருத அரசராகவும், பக்தி தவருத அடிகளாகவும், இயன்றவரை உபகாரியாகவும், கடவுள் தூதராகவும் இருந்து கடவுளுபதேசத்தைப் பரப்பி அனைவரையும் கருணைக்கு ஆள்களாக்கினர்.

"ஞானவாரிதியை நபிகளுக்கரசை நானில மேற்சுவடுறுத
வானமாமணியை இருநிதித்தருவை மரபுகட்கோருதனிச் சுடரை
மோனமாதவர்கள் தொழுநவமணியை மூவுலகனைத்தும் ஒருலகில்
கோனியல்புரிய வருமுகம்மதுவைக் குணமுடன் என்றுகாண்
குவனே."

பெருமானவர்களின் வரலாற்றிற் காணப்படும் முக்கியமான சம்பவங்களின் காலக் குறிப்பு

| | | |
|---|---|---|
| கி. பி. | 570 | பிறப்பு, மக்காவில், தாய் அமினு |
| | 595 | கதீஜாவின் மணம். |
| | 610 | தீர்க்கதரிசியானது. |
| | 613 | வெளிவந்தது. |
| | 616 | பாரசீகர் கீழ்த்திசை நாட்டைப் பிடித்தது. |
| | 617 | பெருமானைப் பின்பற்றியவர்கள் அபிசினியாவில் குடியேறியது. |
| | 618–9 | மக்கா முற்றுகை, அபூத்தாலிப், கதீஜா மரணம். |
| | 620 | தயிபுக்குத் தப்பியோடுதல். |
| | 622 | சூலை 16 முஸ்லீம் ஆண்டுப்பிறப்பு. (ஹெஜ்ரா) செப்டம்பர் 20, ஒடியபின் கூபாவிற்கு வருதல். |
| | 632 | ஜெனவரி 27 இபுராகிம் மரணம், சூன் 7–8 நபிகளின் மறைவு மதீனுவில். |

பெருமானவர்களின்

1. விருதுக்கொடி சஞ்செக் ஷெரிப். தற்காலம் கான்ஸ்டான்றி நோபிள் எயாப் மருதியிலுளது.
2. ஒட்டகம்—அத்ஹா, அதா—மிக விரைவானது.
3. குகை—ஹோயா.
4. பிரேதப்பெட்டி—திரிசங்கு சொர்க்கமாக ஆகாயத்தில் தொங்கியிருத்தல்.
5. கவசம்—பாதா.
6. புரு—புனிதமான ஆவி.
7. குதிரை—அல்போரக்
8. கோவேறுகழுதை—பத்தா.
9. குட்டம்—பானிறமானது.
10. துவசம், கொடி—பஜுரா.
11. வாள்—துல்பகர், அல்பத்தர், மேதம், ஹதெப்.

---

## அதிகாரம் III. குர் ஆன்.

இது சிறந்தொரு வேதாகமம். நல்லவர்களுக்குச் சிறந்த வழிகாட்டி. பக்திமான்களுக்கு உவந்த வெளியீடு. உலக நோயுற்றார்களுக்குச் சாவா மருந்து. இதன் கண் காணப்படும் விதி விலக்குகளும் உபதேசங்களும் உவமானங்களும் நீதிவழுவா நெறி முறையில் முமீன்களைச் செலுத்தும், கபீர்களை எச்சரிக்கை செயும். இந்த நன்னூலில் எவரும் மனனம் பண்ணவும், அதன்படி ஒழுகவும் வசதியாகப் பற்பல பாகங்கள் அமைக்கப்பட்டுள. இதன் வெளிப்படையான பொருளைப் பலரும் அறியக்கூடும். உட்பொருளை அறியக்கூடிய கல்வி கேள்விகளிற் சிறந்த பெரியார் சிலரேயாவர். இந்தத் தெய்வநூல் ஜிப்ரீல் மூலமாகப் பலசந்தர்ப்பங்களில் சிறிது சிறிதாகப் பல ஆண்டுகளாக நபி நாயகத்திற்கு அளிக்கப்பெற்றது. இது ரம்ஸான் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பரிசுத்தமானவர்களே இதைத் தொடலாம், படிக்கலாம்.

"வேத நல்வணக்கம் யார்க்கும் விரித்துற விளக்கும் என்ன
ஆதிதன் பருமான் மேற்கோண் டமரர்கோன் உரைத்துப் போனர்".

இவ் வேதாகமத்தில் 114 சூராக்கள், அதிகாரங்களுள. முதல் சூரா பத்திகாவென்ற பெயர் பெறும். இது ஆண்டவனுக்குப் பிரார்த்தனையாம். இந்நூலில் தொழுகை சம்பந்தமாக 6 பாகங்கள் (அக்ஸாப்) அல்லது பகுதிகள் (அஜ்ஸா) உள வென்பர். இவையனைத்தும் எழுத்து வரி ரூபமாக முதன் முதலில் அபூபக்கரின் கட்டளைப்படி வெளிப்படுத்தியவர் உமர் என்பர். சூராக்கள் பின் வருமாறு பிரிக்கப்பட்டுள.

மக்கா ஆண்டு 1 முதல் 5. 76, 74, 111, 106, 108, 104, 107, 102, 105, 92, 90, 94, 93, 97, 86, 91, 80, 68, 87, 95, 103, 85, 73, 101, 99, 82, 81, 53, 84, 100, 79, 77, 78, 88–9, 75, 83, 69, 51–2, 56, 75, 55, 112, 109, 113, 114. (1)

ஆண்டு 5–6. 54, 37, 71, 76, 44, 50, 20, 26, 15, 19, 38.36, 43, 72, 67, 23, 21, 25, 17, 27. 18.

ஆண்டு 7 முதல் ஹிஜரா வரை. 32, 41, 45, 16, 30, 11, 14, 12, 40, 28, 39, 29, 31, 42, 10, 34–5, 7, 46, 6, 13.

மதீனு. 2, 98, 64, 62, 8, 47, 3, 61, 57, 4, 65, 59, 33, 63, 24, 5–8, 22, 48, 66, 60, 110, 49, 9, 5

ஹிஜரா முதல் பதர் வரை 2, 62

பதர் முதல் உகத்வரை 8, 24, 59

உகத்முதல் மக்கா பிடி பட்டது வரை

3, 29, (1–12) 4, 57, 64, 61, 60, 58, 65, 33, 63. 49, 110, 48, (1-14) 66, 9

இந்த ஒழுங்கு ஜெர்மன் நோல் டெக்கி என்பவரால் ஏற்படுத் தப்பட்டது. ஒவ்வொரு சூராவின் தலைப்பில் மக்கா, மதீனா என்ற பெயரும் ஆயாத்துகள் இத்தனை யென்றும் குறிப்பிடப்பட்டுள. தயையும் தயாளமும், கிருபையுமுள்ள ஆண்டவன் பெயரால் என்று ஒவ்வொரு சூராவும் துவங்கும். மக்காவில் வெளிவந்த சூராக்களில் 'ஓ, மக்களே' என்று காணப்படுவது மதீனா சூராக் களில் 'ஓமுமீன்களே' என்று வரும். முதல் மக்கா வகுப்பின் முதல் 54 சூராக்களில் ஆணைகள் நீளமாயிருக்கும், செய்யுள் போக் காகவும், செய்யுள் நடையாகவும் இருக்க, இரண்டாம் பகுதியில் பிரமாணங்கள் குறுகியனவாயும், அரசியல் வீர முறையும் நீதி போதிக்கும் வகையாகவும், வசன நடையிலிருப்பது காணப்படும். மதீனாப் பகுதியில் இவை காணப்படா; ஆட்சி முறையும் வெற்றி யும், மதப் பரப்பும் மிளிரும்.

குர் ஆன் கடவுளால் ஆக்கப்பெற்றதா, முகம்மது நபியவர் களால் ஆக்கப்பெற்றதா என்ற வினாவிற்கு வைதீகர்கள் கடவுளா லென்பர், லௌகீகர்கள் பெருமானவர்களாலென்பர். சிலவெளியீடு கள் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாதிருக்கின்றன. இதற்குக் காரணம் யூதர் கொள்கையும் கிறிஸ்தவர் கொள்கையும், கலந்திருப் பதே யென்பர். கடவுள் அல்லாவென்றும், ரஹ்மான் என்றும் கூறப்பட்டிருப்பதைக் காண்க. ஆண்டவனடியார்கள் ஹானி புக்களாயிருந்தனர். பின்னரே முஸ்லீம்கள் என்ற பெயரை வகித் தனர். கடவுளுக்குத் தொண்ணூற்றொன்பது அழகான பெயர்க ளமைந்திருக்கின்றன. அன்றியும் கடவுள் ஏழாவது வானில் வீற்றி ருப்பதாகவும், அவரைச் சுற்றித் தேவதூதர்களிருப்பதாகவும் கூறப்படுகிறது. சிருஷ்டிப்பு ஒருவாறிருக்க, மறுபடி எழுப்புல்த, கடைசித்தீர்ப்பு, பாவநிவிர்த்தி, சுவர்க்கம், பாதாளம் முதலானவை ஓதப்பட்டிருக்கின்றன. பக்தி ஒழுக்கமுடையார் சுவர்க்கம் பெறு வர். அதிலிழுக்கமுடையார் அக்கினியில் அளறி லாழ்வர். தீர்க்க தரிசியாரின் வரலாறு பரம்பரையாக, தலைமுறை தலைமுறையாக வருவதால் கூட்டுதல் குறைத்தல் நிகழக் கூடும். உருவ வணக்க மும் அதற்குரிய கிரியைகளும் சடங்குகளும் நிறைந்திருந்த ஐதீ கத்தை ஆய்ந்து, நல்லன ஏற்கப்பட்டும், தீயன விலக்கப்பெற்றும்

இஸ்லாம் வளர்ச்சி பெற்றது நபிநாயகத்தாலன்றோ. மேலும், மதத்துடன் அரசியல் முறையும் கலந்து மதீன சூராக்களில் காணப்படும் பாரசீகர் கோட்பாடுகள் அராபியர் கொள்கைகளுடன் பின் காலத்தில் கலந்தன. இவற்றைப் பிரித்து ஆய்தலால் உண்மை வெளிப்படலாம்.

ஆதம், ஆபிரகாம், மோசஸ், தாவீது, ஜோசப், ஜோனு, ஏசு, மரியாள் முதலான விவிலிய நூலிற் காணப்படும் பெயர்களும் சம்பவங்களும் அராபி யூதர்கள் மூலமாகவும், ஷாம், நாட்டுக்கிறிஸ்தவர்கள் மூலமாகவும், முக்கம்மது இளவயதில் வியாபாரியாகப் பல நாடுகளுக்குச் சென்றபோது அறிந்திருக்கக் கூடுமென்று அறிவாளிகள் ஐயுறுகின்றனர். நபியவர்கள் மக்காவில் முதலில் வெளியிடப்பட்ட சூராக்களில் போதகராக விளங்குபவர், பின் மதீனு சூராக்களில் விதிகள், சட்டங்கள் அமைப்பவராகவும், போர் வீரராகவும் துலங்குகின்றனர்.

குர் ஆனின் பொருளடக்கம் பின் வரும் நற்போதனைகளாலறியலாகும். உவமானத்தாலுண்மை விளக்கப்பட்டிருக்கும் சூராக்களில் பின் குறிப்பிடப்பட்டன பலமுறை வாசித்துச் சுவை காணத்தக்கன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பேனு-எழுதும் இறகு- | சூரா | 68 | ஆயாத் | 52 |
| 2. | அத்தி | ஷை | 95 | ஷை | 8 |
| 3. | எறும்பு | ஷை | 27 | ஷை | 95 |
| 4. | தேனீ | ஷை | 16 | ஷை | 128 |
| 5. | சிலந்தி | ஷை | 29 | ஷை | 69 |
| 6. | பசு | ஷை | 2 | ஷை | 286 |
| 7. | இரும்பு | ஷை | 57 | ஷை | 29 |

குர் ஆன் ஆண்டவன் கட்டளைப்படி மனிதர்களை இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு, கடவுள் நெறிக்குக் கொண்டுவர வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சூரா 14(1) குர் ஆனைக் காலை தோறும் ஓதுக: 17(78) குர் ஆனை ஓதும் பொழுது அமைதியாயிருந்து கேட்க.

குர் ஆன் அருளப்பட்ட பின்னரே வனாந்தர மிகுந்த அரேபிய தேசத்தில் உருவ வணக்கம் தொலைந்து, அல்லா வணக்கந் தலைப்பட்டது. வனதேவதைகள் வெளியேறின. அஞ்ஞானம், வீண்பக்தி, புராதன அநாகரிக வழக்க வொழுக்கங்கள், கிரியைகள், சடங்குகள் அகன்றன. மதலை மரணம் மாய்ந்து, மனைவியர் தொகை மட்டுப்பட்டது. கோஷா குர் ஆனில் கிடையாது. இடைக்காலத்தில் இணைக்கப்பெற்றது. இதனைத் தம் துருக்கி அரசனாகிய கமால் ஆற்று டர்க் என்பவர் தம் நாட்டைவிட்டு வெளியேற்றினர். முஸ்லீம் பெண்கள் நன்கு புலமையும் வீரமு மெய்தியிலங்குகின்றனர்.

## I பொற்போதம்

1. தெய்வமொன்றே. அது தூய்மையுடையது.
2. ஆதியில் பகவன் ஒருவனே. மற்றவையெல்லாம் அவன் சிருஷ்டிகளே.
3. கடவுளின் போதனைகள் என்றும் அழியா.

## II மனிதன்

4. தன்னையறிந்தவன் தலைவனை யறிவான்.
5. 'என்னை நம்புங்கள். உங்கள் ஒட்டகத்தைப் பேணுங்கள்.'
6. நம்புங்கள், உங்கள் பாவம் பறந்தோடிப்போம்.
7. என் விதிப்படி நடமின். நீங்கள் தெய்வத்தன்மை அடைவீர்கள்.

## III உயிர்கள்

8. கடவுளை நினைப்பவர் நெஞ்சு புனிதமாகும்.
9. வாயில்லா உயிர்களிடம் கண்ணோட்டமிருக்கட்டும்.
10. ஆண்டவன் குடும்பமே அவனியி லனைவரும்.
11. கருணையுடையாரே கருணைக்கட லருள் பெறுவர்.

## IV சிருஷ்டிகள்

12. பரம்பொருளாகிய யான் (அல்லா) என்னை அறிவிக்கவே மனிதனைப் படைத்தேன்.
13. மனிதரனைவரும் ஆதாம் மக்களே.

## V மதம்

14. கடவுளின் கட்டளைப்படி நடமின். எல்லா உயிர்களிடமும் அன்பாயிருமின்.
15. பிறப்பால் பிள்ளைகளுக்கு மதமில்லை. பெற்றோராலேயே மதம் ஏற்படுகிறது.
16. இஸ்லாமை நம்புமின், ஆண்டவன் மன்னிப்பார், புத்துயிர் பெறுவீர்.

## VI குர்ஆன்

17. இதன்கண் உயர்ந்த உண்மைகள் பலதக்க உவமானங்களால் விளக்கப்படும். உட்கருத்தை யூகித்து அறிமின்.

## VII நபி

18. நானும் மனிதனே, நானும் ஆண்டவனுக்கு அடிமையே. நான் பகவான் தூதனே.
19. மக்களுக்குக் கருணை புரியவே நான் வந்துளேன்.
20. என் அற்புதம் குர் ஆனே. அது என்றுமுளது.

## VII மன்னுயிர்

21. பிறப்பு இறப்பு-எவருமறியார். நன்மை தீமை மன்னுயிரடையுமே.
22. அவாவை யொழிப்பவனே ஆண்டவனை அடைகிறான்.

## VIII தொழுதல்

23. நின்றும், இருந்தும், கிடந்தும் எங்கும் தொழலாம். நாள் தோறும் ஐந்து நேரம் தொழுக.
24. பாவ மன்னிப்பே தொழுகையின் நோக்கம்.
25. பகுத்தறிவுடன் தொழுக. ஆண்டவன் உன் தொழுகையை அங்கீகரிப்பான்.
26. தொழும் பொழுது ஆண்டவனையே நினைமின், சுவர்க்கம் கிட்டுவது திண்ணம்.
27. இஸ்லாத்தில் துறவிகள் கிடையா.

## IX நோன்பு

28. நோன்பென்பது உடலை வாட்டுவதன்று, மனச்சுத்தமே நோன்பாகும்.
29. திங்கள் (மாதம்) தோறும் மும்முறை நோன்பு இருமின்.
30. விரதத்தால் உடல் தூய்மை, மனத்தூய்மை பெறலாம். மோட்ச வீடடையலாம்.

## X அறம்

31. அறஞ் செய்தல் முஸ்லீமின் கடமை.
32. பிறரறியாமல் அறஞ் செய்தலே உத்தமம்.
33. தாம் உழைத் தீட்டிய பொருளே அறச்சுவைபெறும்.
34. ஏழைச்சுற்றத்திற்கு உதவுவதே முதலறம்.
35. செல்வரிடம் யாசித்தும் அறஞ் செய்யலாம்.
36. ஒன்றுமில்லாதவன் தீயதைக் கைவிட்டு நல்லதைச் செய்யலாம்.
37. மன நோயை மாற்றுதல் மாண்புடைய அறமாம். செஞ்சொல் பகர்தல் சிறந்த அறமாம்.
38. நடுநிலை நிற்றலும், நற்சொல் வழங்கலும், நற்செய்கைக்கு ஏவலும், கூன், குருடு, நொண்டி, சப்பாணிக்குதவலும்' பிறர் இடர்நீக்கலும், அன்னமிடுதலும், தண்ணீர் கொடுத்தலும், வழிதப்பியவர்களுக்கு வழி காட்டலும் அறச்செயல்களாம்.
39. கைப்பிடி யன்னமாயினும் (பாதி பேரீச்சம் பழமாயினும்) யாசகருக்குக் கொடுமின்.
40. கைம்மாறு வேண்ட லறமன்று. நன்றி 'கெட்டவரென்று வைவது மறமேயாம்.
41. வறுமைப் பிணியாற்றுதலே பேரறம். உடையவர்க்களித்தல் விருந்தேயாம்.
42. தாள் தந்தது ஈதலே தருமம் (விறகு வெட்டிச்சுமந்து விற்றுப் பொருளாக்கியீதலே சிறந்த தொழில்)

## XI தலயாத்திரை

43. மக்காவுக்குத் தலயாத்திரை போதல் முஸ்லீம் கடமை. போதுமான பொருளில்லாதவர்கள் காணிக்கைப் பணம்

அனுப்பலாம்.

44. யாத்திரை குறிப்பிடப்பட்ட மாதங்களில் போகலாம்.

45. யாத்திரை போக நினைத்தால் தீயொழுக்கம், தீயசொல், இவற்றை விட்டுவிடுக (வேட்டையாடுதல் கூடாது). ஆனால் கடல்மீனைப் பிடித்து அருந்தலாம்.

46. பலி கொடுத்தலால் பயனில்லை. பக்தியே பயன் தரும்.

## XII நல்வழி

47. தூய்மையாக இருந்து நல்லறிவு புகட்டுவதே நல் வழியாம்.

48. முஸ்லீம் சகோதரரை அன்புடன் பாராட்டலே நன்னெறியாம்.

49. பக்தி என்பது பணிதலும், ஒப்புரவாற்றலுமேயாம்.

## XIII கல்வி

50. கல்வியே சாவா மருந்து. திரைகட லோடியும் கற்க.

51. இறக்கும் வரை கற்க. இறைவன்வழி யதுவே.

52. மதத்தினும் கல்வியே பெருமையுடையது.

53. கற்றபின் நிற்க அதற்குத்தக.

54. கற்றலிற் கேட்டலும் கற்றதைச் சொல்லலும் சிறப்பேயாம்.

55. கல்வியறிவே மோட்சம். அது உற்றுழியுதவும், துணையும், நன்கலனுமாகும், நண்பனும் நற்சகாவுமாகும். அதனால் இக பர சுகம் பெறலாம்.

56. படியாதவனினும் படித்துக்கெட்டவனே பாவி.

57. பிறர்க்குதவாக் கல்வி பயனிலாப் புதையலென்க.

## XIV ஆடவர், பெண்டிர்.

58. ஆடவர் பெண்டிர் இரட்டைப் பிறவிகள்.

59. மங்கலமென்ப மனைமாட்சி.

60. மாண்புடை மனைவி நிறையும், பண்பும் உடையாளே.

61. மனைவியைப்போற்றுமின், புடையன்மின், வையன்மின், விலக்கன்மின்.

62. அன்னாரை அன்புடன் ஆதரித்தலே ஆண்டவன் கட்டளை.

63. நாள் தோறும் ஐம்முறை தொழுதும், நோன்புக் காலத்தில் (ரம்ஸானில்) நோற்றும், தற்காத்தும், தற்கொண்டானைப்

பேணியும், அவன் சொற்றிறம்பாமையும் எவ்வழியிலும் (மோட்ச) வீடு சேர்க்கும்.

64. பெண்களி னுரிமைக்குப் பங்கம் செய்யன்மின்.

65. குணமே மணம், உருவுந்திருவும் பதவியும் பாடு படும்.

66. காரணமின்றிக் கணவனைக் கைவிடின் காரிகை கையறுநிலை அடைவாள்.

67. சட்டத்தால் மணவிலக்குப் பெற்றாலும், விலகிய மனைவி ஆண்டவன் அருளைப் பெருள்.

## XV தாய் தந்தையர்

68. தந்தை தாய் பேண்.

69. தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை. ஆதலால் பெற்றோரை ஓம்புமின்.

70. தந்தை, தாய், தமர், தாரம், தொந்தரை செய்யற்க.

## XVI தாய்தந்தையற்றோர்

71. அநாதைகளை ஆதரிமின், புண்ணியமாம்.

72. அநாதைகளை ஆதரிப்பார் இல்லமே அழகான முஸ்லீம் அகமாகும்.

## XVII உடைமை

73. உடைமையால் உலகியற்றியானைப் போற்றுக, மன்னுயிரை மணஞ்செய்க, அதனால் ஆண்டவனருள் பெருகும்.

74. நல்லான் உடைமை, கதிரொன்று ஏழாகப்பெருகி, ஒவ்வொரு கதிரும் நூறு தானியங்கொண்டு வளரும் பயிர்போலும்.

75. வெஃகாமை நன்று, இவறற்க, பற்றுஅறுக, இவை கடை நாளில் கணக்கிடப்படும். உலகில் எல்லாம் ஆண்டவனுடையதே.

76. இடுக்கண் வரின் அதனை நீக்க இறைவன் எதிர்வருவான்.

77. அக்கினி எரிக்கும் அடாத செய்கையை.

78. மிஞ்சிய செலவு அஞ்சப்படும்.

79. நன்றாற்றுபவனே நன்னலம் பெறுவான்.

80. குருக்கள், துறவிகள், வேடதாரிகள், பொன்னாசைப்படும் உலோபிகள் கடவுள் கருணையை இழந்தோராவர் (அருகாகார்).

81. உடைமை உடைக்கும் அன்பையும் அருளையும்.
82. ஆடவர் பெண்டிர் (மக்கள் சகோதரர் சகோதரி பெற்ரோர்,) உடைமைக்குரியர்.
83. விதவைகளுக்கும் விலக்கப்பட்டவர்களுக்கும் ஓராண்டு ஜீவனும்ச முண்டு.
84. நல்வழியில் உடைமையை வழங்குவோர் விண்மதிபோன்று விளங்குவர், கடவுளை நண்ணுவர்.
58. மனப்பூரணமான திருப்தியே, ஒன்றும் வேண்டாமையே, ஐஸ்வரியம். அளவிற்கு மிஞ்சினல் அமுதமும் நஞ்சு. பேராசை பெருந்தரித்திரம்.

## XVIII வையகம், விண்ணகம்

86. மூமின்களுக்கு (கடவுள் நம்பிக்கையுடையவர்களுக்கு) வையகம்சிறைச்சாலை, மற்றவர்களுக்கு அதுவேமோட்சவீடு.
87. முன்னோரை நினைமின். செய்வதை ஆய்மின், அவனியினின்று தப்பமுயலுமின்.
88. நரகம் திறைமுன்காணும் உலகசுகம், மோட்சம் திறை மறைவிலுள்ள ஆனந்தம்.
89. வையக வளத்தை வேரறச்செய்வது சாவு. அதை என்றும் நினைமின்.
90. விண்ணகம் பெற வையக நன்செயிற் பயிரிடு. முயற்சி திருவினை யாக்கும்.
91. இஸ்லாம் அடியார் இம்மை மறுமையை நினையார்.
92. உண்மை அடிகள் வானோர்க் குயர்ந்த வுலகம் புகுவர்.
93. இற்றது பற்றெனில் உற்றது வீடு.
94. உலக வாழ்வு ஊர்ப்பிரயாணமே, பரவாழ்வு பார்க்க வொண்ணாதது, பகரவொண்ணாதது

## XIX அந்தி நாள்

95. அந்தி நாளில் (தீர்ப்பு நாளன்று) ஆண்டவனே அரசன்.
96. ஆவது செய்வோர் அன்னாளில் வரார்.
97. நன்மை செய்தோர் நலம் பெறுவர், தீமை செய்தோர் தீயில் மடிவர்.
98. அனைத்தும் அறிந்த அவன் பால் எதனை மறைக்க இயலும்.

99. பக்திமான்களுக்கு அன்று பயமில்லை.

100. தீமை செய்திடின் நன்மையுஞ்செய்க. தீமையை வெல்வது நன்மையே.

101. நன்மையெனப்படுவது மனவமைதியும் உறுதியும் செய்வதாம்.

102. நன்மையே செய்க, ஞாலத்தினர்க் கெலாம்.

103. நீடூழி வாழ்வினில் நன்மையே நாடுக.

104. மாக்களுக்கு நன்மை மக்களாலாகும்.

105. குடி தண்ணீர் நாடிய நாய்க்குக் கொடுந் தானையா லளித்த வரைவின் மகளிர் குற்றம் மன்னிக்கப்பெற்றது. சிறைப்படுத்தப்பட்ட பூனை பசியால் சாவதைப் பார்த்தவள் கர்த்தரால் கடியப் பெற்றாள்.

## XX நல்லொழுக்கம்

106. அடக்கம் (நா, சொல்) அமரருளுய்க்கும், பக்தியும் கற்பும் நற்பதமளிக்கும்.

107. மூமின்கள் நற்சொல் பகருவர், இலையெனில் ஒன்றும் பேசார்

108. நன்மை தீமை நாருக்குரியன. நன்மையால் ஆண்டவனருளை அடையலாம்.

109. மலர்ந்த முகமும் மௌனமும் உத்தமம்.

110. புறங்கூறுதல் நோன்பை அப்புறப்படுத்தும்.

111. பொறுமை மனதுற மனமாசு அகலும் (விரியும்)

112. நண்பர் நயம் நாடுவோர் நாயன் நலம் பெறுவர்.

113. குணசாலிகளே நபியின் நண்பர்கள்.

114. செருக்கும், வியப்பும், வன் சொல்லும் கடுகளவுமுள்ளார் கடைத்தேறார்.

115. கோபம்பாவம். ஆறுவது சினம். மனவடக்கம் மாண்புறும்.

116. எல்லார்க்கும் நன்றாம் பணிதல். பணிந்தவில் லைதக்கும். ஆண்டவன் அருள் அகலும் (பெருகும்)

117. சாந்த குணபதி சாந்தத்தை விரும்பும் போலவா, முரட்டுத்தனத்தை வெறுக்கும்.

118. சபித்தலும் வைதலும் வீண்பெருமை, அவதூறு பேசலும் ஆண்டவன் அடியார்க்கு அழகாகா.

119. மனங்கொள்ளும் பெருமிதம் விறகில் தீயொக்கும். ஐயப் படுதல் ஐக்கியக்கேடு.

## XXI மெய், உறுதிச்சொல், ஆணையீடு.

120. சொல்லிய சொல்லைக் காப்பாற்றுங்கள், நிறைவேற்றுங்கள்.

121. பாவத்திற்குப் பரிகாரமுண்டு. ஊணுடை யளித்தல், நோன்பு நோற்றல், அடிமை விடுதலை, இவையே தக்க பரிகாரம்.

122. பொய்ச் சத்தியம், பெரிய ஏமாற்று, கொடிய பாவம்.

123. மெய்யே பேசுக, மெய்மய மாகுக.

124. மனத்திலும் சொல்லிலும் செய்கையிலும் உண்மையாயிருமின்.

125. பொய்யன் நபியின் அடிகளை யடையான்.

## XXII தூய்மை

126. சுத்தமாயிரு, தொழு, சுவர்க்கம் புகு.

127. தொழுமுன்னர் கை கால் கழுவி, பல் விளக்குக.

128. தூய உணவுகொள், நபியின் கட்டளைப்படி நட, மக்கட்கு தீ தொழிய நன்மை செய் — நபிகளடியினை நண்ணலாம்.

## XXIII மன்னிப்பு

128. வேலையாட்களை அடிக்கடி மன்னிப்பாயாக.

129. புண்பட்டவன் நெஞ்சைப் போற்றின் ஆண்டவன் மன்னிப்பார்.

130. கைவசப்பட்ட பகைவனை மன்னிப்பவர் கைகண்ட மெய்யராவர்.

131. குற்றங் குறைகளுக்கு வருந்தி இரங்குபவனுக்கு ஆண்டவன் மனதும் இரங்கும்.

132. இரக்கமுடைய ஆண்டவன் வேறு தெய்வங்களைப் பூசித்தவனையும் மன்னிப்பான், அதற்கு நோயும் வறுமையுமே தக்க கருவிகள்.

## XXIV பொறை

133 வறியருடைய பொறையும் மன்னிப்பும் சிறந்த செயல்களை ஆற்றும்.

134. எல்லாம் நன்மைக்கே என்று நம்பிப் பொறுமையும் சாந்தமு மடைபவன் ஆண்டவன் கருணைக்கு ஆளாவான்.

134. பிள்ளைகளை யிழந்ததாலுண்டாகும் மனக்கவலையையும் பொறியின்மையையும் பொறுப்பவன் ஆண்டவனிடம் வெகுமதி பெறுகிறான்.

## XXV உதவி

135. உயிர்களின் ஆபத்திற்குதவுவோரும், இடர்ப்பட்டவர்களுக்கு உதவி யளிப்போரும் ஆண்டவன் தீர்ப்பு நாளில் நல்லுதவி பெறுவர்.

136. பிறருக்கு நன்றாற்றுபவர்களின் பாவங்களை ஆண்டவன் மன்னிப்பான்.

137. சிரியருக்குச் செய்யுமுதவி நரகத்தை நீக்கு மருந்து.

138. துன்புறுத்தும், துன்பப்படும் முஸ்லீம் இருவருக்கும் உதவி புரியுங்கள். தீயவழியினின்று விலக்குதலே அது முன்னவருக்குப் பேருதவியாகும்.

139. உவகை கொள்ளலும், ஊணளிப்பதும், நிலைமை கெட்டவருக்குச் சிறுமை நீக்கலும், துக்கமுற்றாரின் துயரம் போக்குதலும், துன்பமுற்றாருக்குத் துணை செய்தலும் உத்தமமான நற்செய்கைகளாம்.

140. முஸ்லீம்கள் ஒருவரை ஒருவர் தாங்கவேண்டும். அனைவரும் சகோதரர்களே.

141. எவ்வகைத் தானத்திலும் பிரிந்தாரைச் சேர்த்து வைத்தல் பெருந்தானமாகும்.

142. முஸ்லீம்கள் சந்திக்கும்போது ஸலாம் செய்வர். விருந்து செய விரும்பினுல் விருந்தினராவர், மதி கேட்பின் மதியளிப்பர், நோயுற்றால் உடல் நலம் கேட்பர், செத்தால் சவத்துடன் செல்வர். இவையனைத்தும் அன்னார் கடமையாம்.

## XXVI அடைக்கலம்

143. அடகு வைக்கும் பொருளை அட்டியில்லாமல் கொடுப்பீ ராக, ஏதும் வஞ்சியாதீர்.

144. அடைக்கலப் பொருளை அருளோடு திரும்ப அளிப்போ ரும் கவனத்தோடு தொழுவோரும் வீடு பெறுவர்.

## XXVII கடனும் வட்டியும்

145. வட்டிக்குக் கொடுப்பதும் வட்டிக்கு வாங்குவதும் கடஞ தாரம் எழுதுவதும் குற்றமேயாம்.

146. கடன் கொண்டாரை நெருக்காமல் அவருக்கு அவகாசங் கொடுத்தல் நலம். கூடுமானல் கடனைக்கேளா திருத்தல் மிக நலம். அதனைத் தள்ளிக்கொடுத்தலும் நலமே.

147. கடனடைக்கத்தக்க பொருளிருக்கக் கடனைக் கொடா திருப்பின் அவனைத் தண்டிப்பது நீதியாகும்.

## XXVIII தீயவொழுக்கம்

148. நம்பிக்கை மோசஞ் செய்பவன் மோசக்காரனுவான்.

149. வம்புப் பேச்சும் வாய்ச்சா துரியமும் கபடச் செயல்களாம்.

150. சதியாலோசனை சைத்தான் செயலேயாம். அதனல் கேடு வாராது.

151. வருத்தஞ் செய்வோனுக்கு உதவியாகப் போகின்றவனும், நியாய விரோதமாகச் சண்டை செய்பவனும், அதன் கண் இறந்து பட்டவனும் மூவரும் முஸ்லீம்கள் அல்லர்.

152. மதுபானம் விலக்கல் மேன்மையே. மதுபானம் அருந்தல் பெரும் பாவமே.

153. சாராயம் பருகுதல் சகல தீமையும் விளைவிக்கும்.

154. அதுபோன்றே லாகிரியும் சூது விளையாட்டும்.

## XXIX பிறன் மனை நயத்தல்

155. பிறன் மனை நயத்தல் பெரும் பாவமாகும், அது ஈமானை விசுவாசத்தைப் பறிக்கும்.

156. வேலைக்காரர்களுடன் கூடுதல் வெறுக்கத்தக்கதாம்.

157. கண்ணுல் கண்டு மோகித்தலும், அதனை நாவினுலுரைப்பு தும் நகைக்கத் தக்கன.

158. ஆடை ஆபரணங்களை யணிந்தும் கமழும் பொருள்களைப் பூசிக்கொண்டும் ஆடவர் முன்பு செல்பவள் விபசாரியாவள்.

## XXX கொலையும் களவும்

159. தற்கொலை புரிதலும் பிறனுயிரைப் போக்கலும் பெரும் பாவமேயாம்.

160. காரணமின்றிப் பிறன் இரத்தத்தைச் சிந்துபவன் கடவுளுக்கு விரோதியே.

161. களவாடுதல், கொள்ளையடித்தல், அபகரித்தல் கொடுஞ் செயல்களாம்.

162. கொடுஞ் செயலுக்கேற்றது கொடுந்தண்டனையே.

163. சைத்தானை விட்டு விலகி ஆண்டவனடியில் அடைக்கலம் பெறுக.

### வமிசவழி

இபுராகிம் (ஆபிரஹாம்)
|
இஷ்மேல்—12 மக்கள்
|
கெய்தர் (2வது)
|
(40ம் தலைமுறை)
|
அத்னன்
|
(11ம் தலைமுறை)
|
பஹர், 7வது பேரன்
|
குசை, (யாத்திரிகர்க்குதவி)
|
(6 பிள்ளைகள்)
|

ஹாஷிம்

அப்பாஸ் — அப்துல் ஹப் (உலோபி)—அப்துல் முதாலிப் (10 பிள்ளைகள்)

(1) அப்துல் ரலி – மனைவி அமீனு
(2) அப்துல் தாலிப் — அசன், உசைன்
(3) ஹாஸ்ருத் அப்துல்லா
(4) ஹாஸ்ருத் ஹம்ஸா
(5) ஹாஸ்ருத் அப்பாஸ்
(6) முகமது முதாபா அக்மத்

## முகமது நபியின் மனைவிகளும் பிள்ளைகளும்.

மனைவி 1. கதிஜா (அமங்கலி)
(a) ருக்கையா + அன்கு
(b) சைநப் + அபுல் ஆஸ்
(c) பாத்திமா + சையத் அஸ்ரத் அலி
(d) உம்முகுலதூம் + உதுமானுடைய (2)ம் மனைவியின் முதல் கணவன்

மனைவி 2 அயிஷா. அருமைநாயகி அபுபெக்ர் மகள்

மனைவி 3. சவுதா (அமங்கலி) (பாத்திமாவின் செவிலித்தாய்)

மனைவி 4. ஹப்சா (மகள்)

மனைவி 5. ஸேனுப் (கணவனால் விலக்கப்பட்டவள்)

மனைவி 6 பர்ரா (கைதி)

மனைவி 7 ரெகானு— (யூதர்கைதி)

மனைவி 8 சாபியு (நபியின் பின் 40 ஆண்டு இருந்தவள்.)

மனைவி 9 ஒம் ஹாபியா (விதவை) — உயிரோடிருந்தகடைசி மனைவி

மனைவி 10 மெய்முனு (விதவை)

## அதிகாரம் IV. இஸ்லாம்.

உலகத்தில் முக்கியமான மதங்கள், சமயங்கள் ஐந்தெனப் படுவதில் இஸ்லாமும் ஒன்றும். ஆரிய திராவிடர்கள் சமயமே இந்து மதமெனப்படும். புத்தர் பரப்பியது புத்த சமயம். இது இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் தீவுகளிலும் பரவியது. சீனு

தேசத்தில் பரவியிருந்தது கன்பூசியானிஸம். அரேபியா தேசத்தில் உண்டானது இஸ்லாம், அல்லது முகம்மதிய மதம். இது பாரசீகத்திலும், ஆபிரிக்காவின் வடபாகத்திலும், ஸ்பெயின் தேசத்தின் பெரும் பாகத்திலும், துருக்கியிலும், முதலில் பஞ்சாபிலும், பின்னர் இந்தியா தேசமெங்கணும் பரவிற்று. இது இத்தேசத்தில் டில்லியிலிருந்து அரசாண்டது. பதின்மூன்று நூற்றுண்டுகளாக இச்சமயம் பல தேசங்களிலும் பரவியதால் இதைத் தழுவினவர்கள், முஸ்லீம்கள், உலக மக்களிற் பத்திலொருபாகம் எனலாம்.

இஸ்லாம் என்ருல் என்னே? பெரும்பாலார் கடவுள் சித்தப்படி அடங்கி நடத்தலென்பர். சையத் அமிர் ஆலி அதனை சித்தார்த்தம், நீதிப்படி யொழுகுதல் என்றனர். ஒவ்வொரு சமயத்திலும் கொள்கை, கோட்பாடு என்றும், ஆசாரம், அநுஷ்டானமென்றும் இருபாகுபாடுகளுள. இஸ்லாத்தின்படி முஸ்லீம்களின் கொள்கைகளும் ஆசாரங்களும் யாவை?

முதலில், கடவுள் நம்பிக்கை. கடவுள் சர்வ வல்லவர், எங்கும் நிறைந்தவர், எல்லாமறிந்தவர், உவமையில்லாதவர், என்றுமுள்ளவர், தயாளமனதுடையவர். அவர் நாமம் அல்லா. அவருடைய தூதர் முகம்மது. அல்லாவைத் தவிர வேறு கடவுளில்லை. முகம்மதைத் தவிர வேறு தேவதூதருமில்லை. இருவர் மீதும் நம்பிக்கை கொண்டொழுகுதலே இஸ்லாம்.

இரண்டாவது, தேவர்கள் மீது நம்பிக்கை. இவர்கள் நெருப்பினுலானவர். உருவிலும் அழகிலும் சிறந்தவர், ஆண் பெண் பாகுபாடு இலாதவர், பாசமில்லாதவர், என்றும் இளமைப்பருவமுற்றவர், இவர்கள் பலதரப்பட்டவர், இவர்களின் கடமையும் பலப்பல. சிலர் கடவுள் பீடத்தைச் சுற்றியிருப்பார்கள். அனேகர் அல்லாவைத் துதிப்பார்கள், சிலர் அவருடைய கட்டளைகளைப் பறந்தோடி நிறைவேற்றுவார்கள், சிலர் சிறுவர்களுக்காகப் பரிந்து பேசுவார்கள். தேவ தூதர்களிற் சிறந்தோர் நான்கு வகையினர். ஜப்ரீல் (கேப்ரீல்) கட்டளைகளை வெளிப்படுத்துவார், தீர்ப்புகளை

வரைவார். மைக்கேல், வீரர், மதப்போர் புரிவர்; அஸ்ரீல், மரண தூதர்; இஸ்ரபில், மறுமையன்று எக்காளம், வாங்கா ஊதுபவர். அஸாஸில், ஆதாமைவணங்கமறுத்தவர், ஆதலால் சபிக்கப்பெற்று சொர்க்கத்தினின்று துரத்தப்பட்டு எப்ளிஸில், ஏக்கமுற்றவர், சாத்தான், சைத்தான் என்ற பெயர் தாங்கினவர்.

தாழ்ந்த வகைத் தூதர்களில் மோக்கிபத் என்பாரில் இருவர் பகலெலாம் ஒவ்வொரு மானிடரின் வலது இடதுபுரம் நின்று அவருடைய சொல்லையும் செய்கையையும் பற்றிக்குறிப்பெழுதி மாலையில் வானுலகமேகுவார்கள். அங்ஙனம் குறிப்பெழுது முன் ஏழு மணி நேரம் பொறுப்பர், ஏனெனில் தீயவன் குற்றத்தை ஒப்புக்கொண்டு பிரார்த்தித்து மன்னிப்புப்பெறலாம்.

இவர்களன்றி நெருப்பிலுண்டான வேறு தேவதைகளுள ரென்றும், மக்களைப்போன்று காமம் பசிப்பிணியுற்று மரணமடை யக்கூடியவர்களென்றும், இவர்கள் வனதேவதைகளென்றும், இவர்களிடமும் பக்தி செலுத்த வேண்டுமென்றும். முகம்மது போதித்தனர். இவர்கள் டைவ்ஸ், பெரி எனப்பட்டனர். மேலும் பேய் பிசாசுகளினின்று தப்புவிப்பவர் தக்வின்ஸீ, திசபல், அதி தேவதைகள் எனப்படுவர்.

மூன்றுவது கொள்கை. குர்அன் தெய்வ வெளியீடு என்று நம்புதல். ஏழாவது வானகத்தில் உலக முண்டானது முதல் 104 வேதங்களுடன் இப்புத்தக மிருந்ததென்றும், இதன் பிரதிகள ஜிப்ரீலால் சமயசந்தர்ப்பத்திற் கேற்றவாறு மண்ணகத்திற்குக் கொண்டுவரப்பட்டனவென்றும், இது முகம்மதுக்கு அளிக்கப் பட்டதென்றும், கூறப்படும். முகம்மது நபிகள் மறைந்தபின் அபூ பக்கரால் பிரமாணங்களாகத் தொகுக்கப்பட்டனவென்றும், முன் னர் சொல்லப்பட்டுளது. இத்தொகுதியை முஸ்லீம்களுக்குச் சமய, சமூக, தரும, ஆக்கினைக்குரிய நூலாகும். இஃதன்றி முகம்மது நபியின் வாக்குகளாகத் திரட்டப்பட்ட சுன்னு என்ற பெயர்பெற்ற புத்தகமும் உண்டு. இது வாக்குப்பிரமானமென்ற ழைக்கப்படும். இதனை மதிப்பவர் சுன்னுக்காரர் எனப்படுவர்.

இதனை மறுப்பவர் ஷீயாக்கள் எனப்படுவர். வெண் தலைப்பாகை யணிபவர் முன்னவர், செந்தலைப்பாகையணிபவர் (கூசில் பக்கி) பின்னவர். முகம்மதியர் கட்டாயமாக நடத்திய சுன்னத்துக் கல்யாணத்தைப்பற்றி குர் ஆனிலாவது சுன்னுவிலாவது ஒன்றுங் காணப்படவில்லை. ஆனாலும் இப்பழக்கம யூதர்களைப் பின்பற்றியது. அரபிய தேசமெங்கும் பரவியிருந்தது. பெருமானால் விலக்கப்பெற்ற உருவ வணக்கமும் அன்னாரிடமிருந்து வந்ததேயாம். கிறிஸ்தவர்களும் அதனை விலக்கியுள்ளார். முகமதிய பெண்மக்களுக்கு மன்னுயிர் ஆத்மா கிடையாதென்றும், அவர்களுக்கு சுவர்க்மில்லையென்பதும் தவறான கொள்கைகள். குர்ஆன் 56 சூராவைப் பார்க்க.

நான்காவது கொள்கை, தீர்க்கதரிசிகளைப் பற்றியது. தீர்க்கதரிசிகள் இரண்டு லக்ஷமிருந்தனரெனினும், அறுவரே சிறப்புப் பெற்றவராம். ஆதம், நோவா, ஆபிரஹாம், மோசஸ், ஏசு, முகம்மது, இவர்களே அவ்வறுவராவர்.

ஐந்தாவது கொள்கை, மறித்தெழுதல், கடைசித் தீர்ப்புப் பற்றியதாம். இவை இரண்டும் யூதர் கிறிஸ்தவர் இருவருக்கும் பொதுவாம். முன்கர், நகீர் எனும் தேவ தூதர்கள் பிரேதத்தை எழுப்பி உட்காரவைத்து, கடவுள் ஒருமை, முகம்மது நபி நம்பிக்கை பற்றி விசாரணை நடத்தி, ஆத்மாவை உடம்புடன் சேர்த்தல். சுவர்க்கம், நரகம் கடைசி நாள் தீர்ப்பின் பயனும். மாணத்திற்கும், மறுவுயிர் பெறுதற்கும் இடைப்பட்ட காலம் பெர்ஸாக் எனப்படும். இவ்விடைக் காலத்தில் பிரேதம் குழியிலே யிருக்கும். தீர்க்கதரிசிகளின் ஆன்மா சுவர்க்கமே புகும். மாளும் வீரர்கள் பச்சைநிறப் பறவைகளாவர் எனப்படும். பிரேதக் குழியைச் சுற்றியும் தங்கும் என்பதை நம்பும் உற்றார் உறவினர் தங்கள் அன்பைக் காட்டுவதற்கு ஆண்டு ஏகுவர் என்பதும், முற்றும் நம்பிக்கையுடையார் வெள்ளை நிறமுள்ள அன்னப் பக்ஷிகளாக அல்லாவின் சிம்மாதனத்தின் அடியில் அமைந்திருப்பர் என்பதும், யூதர்களின் கொள்கைகளேயாம். கடவுள் தயாளமுடையவராத

லால் நம்பிக்கை யற்றவர்களுங்கூட நாளாவட்டத்தில் மன்னிக்கப் படுவார்கள் என்ற ஐதீகமுளது.

ஜிகென்னும் (நரகம்), சுவர்க்கம், இரண்டிற்கு மத்தியில் அல் அராப், அமைதியும் இன்பமுமில்லாத இடம். இதில் சிசுக்கள், பித்தர்கள், நன்மை தீமை செய்யாதவர்கள், இவர்களும் முகம் மது நபியை வணங்குவதால் ஈடேறலாம்.

பலவிதச் சோதனைகளும் நிகழ்ந்தபின் ருஷவன் எனும் தேவ தூதர் சுவர்க்க வாயிலைத் திறப்பார். சுவர்க்கத்தில் எல்லா மத நம்பிக்கையுள்ளவர்களும் பெண்டிர் சமுகம் பெறுவர். தங்கள் சொந்தமனைவியருடன் ஒவ்வொரு ஹவுரிகளுடனும் இன்புறுவர்.

ஆறுவது. கொள்கை. ஊழ், தலைவிதி, முன் நியமம். வீரர் களைச் சேர்ப்பதற்காக இந்தக் கொள்கை பரப்பப்பெற்றதாம். உலக நிகழ்ச்சியெல்லாம் தெய்வ முடிவேயாகும். பிறப்பு, இறப்பு, சுகம், அசுகம், வறுமை, வளமை அனைத்தும் தெய்வச் செயலே. இந்த நம்பிக்கை கொள்வதால் வீர சொர்க்கம் பற்றி உயிரைப் பெரிதென்று கொண்டிலர் போர் வீரர்கள். உகுத் யுத்தத்தில் தோல்வியுற்ற பிறகு இக்கொள்கை வெளியிடப்பட்டதாம். ஹம்சா எனும் வீரர் ஏழாவது விண்ணுலகு புகுந்தார் என்று ஜிப்ரீல தெரிவித்தார். இது பற்றி மூன்று வகையான அபிப் பிராயங்களுள. ஜாபிரியர்கள் வகுத்தான் வகுத்த வகையேயன்றி மனிதனுக்குச் சுதந்திரமில்லை யென்பர். குவாதிரியர்கள் மனித னுக்குச் சுயபுத்தியுண்டு, பகுத்தறிவுண்டு, நன்மை தீமை இன்ன தென்று அறிந்து நன்மையைக் கடைப்பிடித்துத் தீமையை விலக் கும் சக்தியுளது. அவனன்றி ஓரணுவு மசையாதென்பது சரி யன்று என்பர். ஆஷாரியர்கள் நன்மை தீமை கடவுள் அமைப்பே, ஆனாலும் மனிதனுக்குத் தான் எண்ணியதை நிறைவேற்றும் வல் லமையுண்டு, அந்த சக்தியை யளிப்பது கடவுளே என்பர்.

ஆசார அனுஷ்டானம், ஐந்து வகைத்தாம். இவை (1) சம யப்பிரமாணத்தை ஓதுதல், (2) உடற் சுத்தத்தொடு தொழுதல் (பிரார்த்தனை) செய்தல், (3) தருமமளித்தல், (4) நோன்பிருத்

தல், (5) தலயாத்திரை போதல் — என்பன. இவ்வைந்து சமயக் கடமைகளும் அராபி பாஷையில் தஷாஹீத், ஸலதக், ரோஸ்ஸா, ஸக்கத், ஹஜ் எனப்படும். இக்கடமைகளைந்தும் முக்கியமானவை யாம். (1) சமயப்பிரமாணமாவதுலா இலாகா இல்லாலகு முகம் மதுர் ரசுலு இல்லாகி = கடவுளைத் தவிர கடவுளில்லை. கடவுளின் அப்போஸ்தலர் முகம்மது. இதனால் ஏக கடவுளெனுங் கொள்கை உறுதிப்படுகிறது. இஸ்லாமிய சேனைகள் இதனைக் கௌரவமாகக் கூறிச் சேனைகளை யுத்தத்திற்குத் திரட்டும். பல தேசங்களிலுள்ள முஸ்லீம்களும் இப்பிரமாணத்தை ஓதுவார்கள். இதுநிற்க.

2. சுத்தி முகம், புஜங்கள், முளங்கை, தலை, (நாலிலொரு பாகம்) பாதம் கழுவுதல், குளித்தல் — தெய்வ வணக்கத்திற்கு முன் ஒருமுறை நிகழும். கைகள், வாய், மூக்குத் துவாரங்கள் மும்முறை சுத்தஞ்செய்ய வேண்டும். காதுகளைத் தலைகழுவிய தண்ணீர் மீதங்கொண்டு நனைத்தலுங் குச்சிகொண்டு பல் விளக்கு தலும் சுத்திகளாம். வலதுபுறம் கழுவியபின் இடது பக்கமும், கால், கைகளுக்கு முன் விரல்களும், நீர் கிடையாத விடத்தில் பொடி மணலாலும் புனிதப்படுத்தலாம். உடற்றூய்மை உயிர்த் தூய்மைக் குறிகுறி.

பிரார்த்தனை (வேண்டுகை). ஒவ்வொரு தினமும் ஐந்துமுறை சூரியோதயத்திற்கு முன்னும், மத்தியானத்திலும், பிற்பகலிலும், மாலைக்கருக்கலிலும் (இரணிய வேளையிலும்), அந்தி சந்தியிலும், ஆறுவது முறை, முதற் சாமத்திற்கும் அருணோதயத்திற்கும் இடையிலும், தெய்வ வணக்கம் செய்யவேண்டும். 'கடவுள் பெரியவர், வல்லபர், மிக வல்லபர்' என்பதைப் பல தடவல் சொல்லி ஜெப மாலையிலுள்ள அக்குமணிகளைக் கவனத்தோடு, கூர்ந்து எண்ணுதல். இது மசூதி அல்லது பள்ளிவாசலிலும் வேறெந்த விடத்திலும் நிகழ்த்தலாம். வணங்கும்போது கண்கள் மக்காவில் கெப்ளாவை நோக்கவேண்டும். இத்திசையை மசூதி யின் கோபுரம், முடி, அல்லது தூபி, சுவரறை, கதவுகள் காட்டும்.

வணங்கும்போது இருக்கவேண்டிய நிலையும் விவரிக்கப்பட்டிருக்கின்றது. நின்று தொழுதல் யூதர் முறை. நெற்றி தரையிற் படுமாறு கால் மட்டியிட்டு நமஸ்கரித்தலே சிறந்த முறை. பெண்கள் சாந்தமாகப் பிரார்த்திக்கலாம். ஆண் மக்களுடன் பெண்டிர் தொழப்போகலாகாது. காரிகையார்கள் தாழ்மையாக ஆபரணங்களையும் அதிகமான ஆடைகளையும் ஒதுக்கிக் கொள்ளவேண்டும். நித்தஞ்செயும் பிரார்த்தனையுடன், வெள்ளிக்கிழமையன்று மசூதியில் உபதேசமும் நிகழும். மக்கட்படைப்பு முதலில் வெள்ளியன்றுதானென்பர். முஸ்லீம்களுக்கு அதுவே தேவாராதனைக் குரியநாள். யூதர்களுக்கு சனிக்கிழமையும், கிறிஸ்தவர்களுக்கு ஞாயிறும்போல.

3. தருமஞ்செய்தல் இருவகைப்படும். சக்கத் (கோயில்வரி) ஒன்று. அது பணமாயிருக்கலாம், சாமான்கள், கால்நடைகள், தானியங்கள், பழவர்க்கங்களாகவுமிருக்கலாம். தாமே கொடையளித்தல் மற்றொன்று. இது சதக்கத் எனப்படும். அன்றியும், வருவாயில் பத்திலொருபங்கு ஏழை, திக்கற்றவர்கட்குத் தர்மமளித்தல் முஸ்லீமின் கடமை.

4. நோன்பிருத்தல். இதுவும் யூதர்களிடம் கற்றுக்கொண்டதாம். ஒவ்வொரு வருஷத்திலும் ரமதான் மாதத்தில் முப்பது நாளிலும் உண்மை விசுவாசியானவன் உதயமுதல் அஸ்தமனம் வரை மது மாமிசம் இன்றி, குளித்தல், வாசனைத் திரவியமணிதல், பெண்களைச் சேர்தல், இவற்றை விலக்கி, ஐம்புலன் அவாவை வெறுத்லுங்கடமை. 'பிரார்த்தனையானது விசுவாசியைக் கடவுளிடம் பாதிவாழி செலுத்தும்; நோன்பிருத்தல் அவரைக் கடவுளது தலைவாசலிற் கொண்டுவிடும்; தருமமோ (பிச்சையளித்தல்) அவரைக் கடவுள் சந்நிதியிலே சேர்க்கும்' என்பர் ஆன்றோர்.

5. தலயாத்திரை. மக்காவுக்கு ஆயுளில் ஒருமுறையாவது போதல் வேண்டும். தானேபோகலாம், அல்லது பிறனைப்போகச் சொல்லலாம். அங்ஙனமாயின் தொழும் போதெல்லாம் அவன் பெயரை உரைக்கவேண்டும். வயதுமுதிர்ந்த, சுயாதீனமுள்ள

அறிவாளிகள், உடற்சுகம் படைத்தவர்கள், போக்குவரத்துக்குப் போதுமான செல்வமுடையவர்கள் இவர்களே யாத்திரைக் குரியர். போவதன் முன் மரணத்தை எதிர்பார்த்துக் குடும்பக் காரியங்களை ஒழுங்காக வைக்கவேண்டும். (தமிழ் நாட்டில் இந்துக் களில் 'காசிக்குப் போகாதவன் கழுதை' என்பர். மரண சாசன மெழுதி மொட்டையடித்துப் பெற்றோர்க்குக் கருமஞ்செய்து போதல் வழக்கம்).

யாத்திரை புறப்படத்தக்க நாள் செவ்வாய், வியாழன், அல்லது சனி உகந்ததாம், முஸ்லீம்கள் புறப்படுமுன் பெண்டு பிள்ளைகள் சுற்றத்தார்களைக் கூட்டிவைத்துக் கடவுளிடம் ஒப்படைத்துப் போவர். தலைப்பாகையின் ஒரு நுனியை நாடியின் கீழிழுத்து, கன்னிகை மடப்பெண்போல ஆடையணிந்து, கையில் கனத்த தடிபிடித்து, வீட்டைவிட்டு வெளியேறும்பொழுது 'கடவுள் பெயரால், அவரருளால், அவருடைய பாதுகாப்பில் நான் செல்கிறேன். அவரை நம்புகிறேன். என் வாழ்நாளையும் செயல்களையும் அவர் கையில் ஒப்பிக்கிறேன்' என்று சொல்லுவர். தம்முகத்தை கெப்ளா (கஅபா) இருக்கும் திசைக்குத் திருப்புவர். குர் ஆன் சூராக்களிற் சில ஆயாத்துகளை ஒப்பிப்பர். குதிரையிலேறியதும், சர்வ வல்லமை, தயை, கருணைபொருந்திய இறைவனை வழுத்தி, யாத்திரை போவர். துல்ஹஜ் மாதம் துவக்கத்தில் மக்கா நகரம் புகுமாறு பிரயாணத்தைச் சரிப்படுத்திக் கொண்டு புறப்படுவது வழக்கம். சண்டை சச்சரவு செயேன், யார் வைது திட்டினும் தாழ்மையாகப் பொறுப்பேன், யாத்திரைக் கூட்டத்தாருடன் நல்லமைதியும் நற்சிந்தையும் பாராட்டுவேன் — இம்மூன்று விதிகளையும் பிரயாண முழுதும் கையாளுவேன் என்று உறுதி சொல்வதுண்டு. மக்காவுக்கருகில் சென்றதும் மயிரையும், நகத்தையும் வளரவிடுதல், எப்பொழுதுந் தரிக்கும் ஆடையையும் பட்டையும் நீக்கி, இஃரமெனும் யாத்திரிகருடையை யணிதல், இரண்டு துண்டுகளில் ஒன்றை இடுப்பில் கட்டுதல், மற்றொன்றை கழுத்திலுந்தோள்களிலும் போட்டுக்கொள்ளுதல், தலையில் ஒன்றும் அணியாதிருத்தல் வெயிலுக்கு மட்டுங் குடைப்பிடித்தல், ஏழை மக்கள் கந்தல்

துணியைத் தரித்தல், பாதரக்ஷையின்றி வெறுங்காலால் நடத்தல், இவ்வாறு தலயாத்திரை செய்பவன், 'அல்மோரம்' எனப்படுவான். பெண்கள் உடம்பையும் முகத்தையும் மணிக்கட்டையும், கழற்கட்டையும் போதுமான துணி வலைகளால் மறைத்துக்கொள்ள வேண்டும்.

மக்காவூர் அடைந்ததும் பொட்டணத்தை யாதானுமோர் கடைகள் (மெதோ வெப்ஸ்) தயாராயிருப்பர். சலாம், வாயில் வழியாகப் பள்ளிவாசலுட் சென்றதும் நான்குதரம் கீழேவிழுந்து நமஸ்காரம் செய்து பிரார்த்தித்துக் கமான் வழியேசென்று கருங் கல்லைக்கண்டு நான்முறை நமஸ்கரித்து, அதனை முத்தமிட்டு, கூட்டம் மிகுதியால் முத்தமிட முடியாத பக்ஷத்தில் வலது கையால் அதனைத்தொட்டுக் கையை முத்தமிடுவது வழக்கம். அதன்பின் கஅபாவை ஏழுதரம் வலம் வந்து, பிரகாரமாகப்போய், முதல் மூன்றில் விரைந்தும், ஏனை நான்கில் மெல்ல நடந்தும், ஒவ்வொரு பிரகாரத்திலும் கருங்கல்லை முத்தியும் தொட்டும் பணிவிடை செய்வார்கள். தேவாப் என்பது பவனிபோதல். ஆணும், பெண்ணும் இரவில் நிருவாணமாகப்போகும் வழக்கம் முகம்மதுநபி அவர்களால் நிறுத்தப்பட்டது. கருங்கல்லிற்கும் கதவிற்கும் நடுவிலுள்ள சுவரைத் தழுவிப் பாவ மன்னிப்புக் கேட்பதும் வழக்கம். மகம் (ஆபிரஹாம் இடம்) சென்று நான்குமுறை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து 'செம் செம்' என்ற கிணற்றிற்குச்சென்று வேண்டும் நீரைப்பருகுவர். மசூதியை விட்டு வெளியேறி ஐம்பது காலடித் தூரம் நடந்து ஸாபா மலையிலேறியபின் கையை உயர்த்திவணங்கி அறுநூறு காலடித்தூரஞ்சென்று, சிறிதுநின்று, பின்னோக்கிப் பார்த்து, அல்ஹாஷன் வீதிவழியாக மெரோவாவுக் குச்சென்று, நாவிதன் கடையிற் புகுந்து வளர்ந்த தலைமயிரைச் சிறைத்தும் நகத்தை யெடுத்தும், கழித்த உரோமத்தையும் நகக் கழிவையும் புனிதமானவிடத்திய் அடக்கஞ் செய்தலோடு தல யாத்திரச் சடங்குகள் முடிவடைகின்றன.

அன்றியும், ஒன்பதாம் மாதத்தில் யாத்திரிகர்கள் அரபாத் மலைக்கு துரிதப்பட்டேகி அந்திவரை தங்கி ஜெப மண்டபத்தில்

ஜெபஞ்செய்து, விடியுமுன் மேனு பள்ளத்தாக்கிலுள்ள மூன்று தூண்களில் ஒவ்வொன்றின் மீதும் எழுகற்களை வீசுவார்கள். மாறி மாறி 30, 29 நாட்கள் கொண்ட 12 சாந்திர மாதங்களிலும் மொத்தம் நாட்கள் 354 ஆகும். சூரிய மாதக் கணக்குப்படி 11 நாள் குறையும். இக்குறையை நீக்க மூன்று வருஷத்திற் கொருமுறை ஆண்டு ஒன்றிற்கு 13 மாதங்களாகக் கணக்கிடப் பட்டது. வானநூலறியாத பெம்மானவர்கள் 13ம் மாதத்தைத் தள்ளிவிட்டமையால் ஹாஜ் மாதந் தெய்தி கணக்கிடுவது கஷ்ட மாயிற்று. இம்மாறுதலால் முஸ்லீம் ஆண்டு பருவத்தை யொட்டி வருவதில்லை. மாரிக்காலமத்தியிலும், கோடைக் கால நடுவிலும் ஹாஜ் துவங்கப்பெறுவதால் யாத்திரி கர்களுக்கு அவஸ்தைகள் மிதுகின்றன. இது காறும் இஸ்லாத் கோட்பாடு, ஆசாரம் இவ்விரண்டும் விரிவஞ்சிச்சுருக்கமாகக் கூறப் பட்டன. இவ்விரண்டிற்கும் ஆதாரம் குர் ஆன் என்பது வியக்த மாகத் தெரிவிக்கப்பெற்றது. குர் ஆனைத்தவிர, பரம்பரையை ஒட்டி வந்தது சுன்னு வென்பதாம். இது நபியவர்கள் வெளி யிட்ட பிரமாணமாகும். அப்பெருமான் செய்கையாற் காட்டிய விதியாகும். இப்பகுதியில் எல்லாவிதச் சட்டமும் அடங்கும். 'சுன்னுதன் ஹஸானதீன்' = மேன்மையான சுன்னுக்கள், ஷீயாக் கள் இதனை ஏற்றுக்கொள்வதில்லை. மூன்றுவது ஆதாரம் இஜ்மா. இது இஸ்லாம் பற்றிய புராதன ஆன்றோர்களின் அபிப்பிராய வொற்றுமையாம். நபியவர்களின் தோழர்கள் அவர்களின் கருத் துக்களையும் கோட்பாடுகளையும் தொகுத்த தொகை வேற்றுமை யில் ஒப்புமை காண்பது, அல்லது அனுமானம். இது 'குயாஸ்' எனப்படும். இது முதன் மூன்றையும் தழுவிவரும். இதனால் பின்னோர் நான்கு வகையான அரசநீதிகள் ஹானிபா, மாலிக், ஷாமாயி, ஹன்பால் எனும் நான்கு இமாம் என்ற மதத் தலைவர் களால் ஏற்பட்டன. சுன்னி முஸ்லீம்கள் இந்நான்கிலொரு நீதிப்படி ஒழுகுவார்கள். கலிபாக்களும் இவற்றி லொன்றையா யினும் அங்கிகரித்து நடப்பார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவில் ஷாபி, ஹானபி இருவகையும்

காணப்படும். தமிழ் பேசும் முகம்மதியர்களில் சிறிது படித்தவர்கள் பூசாரியென்றும், லெப்பைகளென்றும் அதிகம் பயின்றவர்கள் குருக்களென்றும் சாகிபுவென்றும், கல்வி, பக்தியிலாதவர்கள் தரகனுர், இராவுத்தரென்றும் பெயர் பெறுவர். காயல்பட்டணத்தில் புராதன காலத்தில் அராபிகள் நாட்டுப் பெண்களை மணந்து பெற்றபிள்ளைகள் மரக்காயரென்று அழைக்கப்படுகிறுர்கள். இவர்களில் சிலர் அராபிபாஷை தெரிந்தவர்கள், பலர் அந்தமொழியைத் தமிழ் எழுத்தில் எழுதிப்படித்தவர்கள். சாயித்துகள் வைதீகர்கள், நபிகளின் வழித்தோன்றல்களாவர். இந்துமதச் சின்னங்களை நிந்திப்பவர்கள். பெண்டுகள் கோஷாக்கள், ஆடவர் கடல் வியாபாரிகள். இவர்கள் குலசேகரப்பட்டணத்திலும் காணப்படுவர். இவர்கள் தலையில் நிறமுள்ள இறுகிய கனத்த குல்லாக்களாவது பன்னிறத் தலைப்பாகையாவது அணிந்து கொள்வார்கள். இடுப்பில் நிறமுள்ள துணி கட்டுவார்கள். மாதர்கள் சேலையைத் தலைமேலிழுத்து முக்காடு போடுவார்கள். பிரபலமான மசூதிகள் பொட்டல்புதூர், நம்பி ஆற்றங்கரை, மேலப்பாளையம், கங்கை கொண்டான் இவற்றில் காணப்படும். இவற்றில் உற்சவங்கள் நிகழும், பெருங்கூட்டம் கூடும்.

சுருங்கச் சொல்லுமிடத்து, இஸ்லாம் ஏக கடவுளை உணர்த்திச் சிறு தெய்வ உருவ வணக்கத்தைக் கண்டிக்கிறது; மக்களுடைய சகோதர பாந்தவ்வியத்தை வளர்த்து நாட்டொற்றுமையைப் போற்றுகிறது; ஐங்காலத் தொழுகையைக் கட்டாயமாக்கிக் கடவுள் வணக்கத்தை ஆதரிக்கிறது. கடவுள் கிருபையை முன்னிட்டுகடவுளுக்கும் மனிதர்களுக்கும் தான தருமத்தைச் சிலாகிக்கிறது. மத்தியஸ்தர்களென்று பெருமை பாராட்டிக் கலகவித்திட்டுப் பிளவுபடுத்தித் தம் வயிறு வளர்க்கும் குருக்கள், பூசாரிகளை விலக்குகிறது. ஜன சமூக ஐக்கியத்தைப் பெருக்குமாறு விழாக் கொண்டாடுதலையும், தலயாத்திரை போதலையும் சிறப்பிக்கிறது; சிசுவதை, புருஷமேதம், சூதாடுதல், விபசாரம், இவற்றை அடாத செயல்களென விலக்கச் செய்கிறது; உடல்நலம், ஆன்ம நலம் பெருக்கி வீடுறும் ஒழுகலாற்றை வழங்குகிறது. அமீன் அமீன !

## அதிகாரம் V கலிபாக்கள்

கலிபாக்கள் யாவர்? முகம்மது நபி அவர்களுக்குப் பின் வந்த சமய அரசியல் சமுக அதிகாரிகளே இவர்கள். இவர்கள் பின்காலத்தில் இருவமிசத்தவர்களாயிருந்தனர். முதலில் 'உமாயித்' வகையாரும், பின்னர் 'அபாசித்' வகையினரும் கி. பி. 632முதல் 1258வரை கலிபாக்களாகயிருந்தனர். பெருமானவர்கள் தம் மரணத் தருவாயில் தொழுகையாற்றச்செய்த ஆத்ம நண்பரையே தமக்குப்பின் அதிகாரியாக்கினர். முதலில் கலிபாக்களாகவந்த நால்வர்கள் காலத்தில் இஸ்லாம் பரவிற்று, ஓங்கி வளர்ந்தது. பிந்தினவர் ஆட்சியில் இஸ்லாம் ஒருவாறு மங்கி மருண்டது. எனினும் கலிபாக்களின் கவின் பெறுவேலையின் பயனாக இஸ்லாம் உலகமெங்கும் இன்றுந் திகழ்ந்து வருகின்றது.

1. அபூபக்கர், கி. பி. 632—4
2. உமர், கி. பி. 634—644
3. உத்மான், கி. பி. 644—656
4. அலி, கி. பி. 656—661
5. ஹாசான் = 661—சில மாதங்கள்
6. மூவாவியா 661—680
7. யெஸித்
8. அபுதல்லா
9. அபுதல்மாலிக்.
10. வாதிக்
11. மாமூன்.

முதல் நான்கு கலிபாக்களில் ஆலிதான் முகம்மது நபிகளின் வமிசத்தவர். பெருமான மகள் பாத்திமாப்பிராட்டியை மணந்தவர் ஆதலின் பதவிக்குரியவரென்றும், ஏனைய மூவரும் பதவிக்குரியரல்லரென்றும் ஷீயாக்கள் கூறுவர். ஆலியையே சமய வழிகாட்டியாகக்கொண்டு மாதியுட்பட பன்னிரு இமாம்களும், இலேஞாவு

டன் பூமியிற்றேன்றி உலகமெலாம் இஸ்லாம் மயமாக ஆக்குவார்களெனவும் பகருவர். இவர்களுடைய வரலாற்றைச் சுருக்கிக் கூறுதும்.

1. **அபூபக்கர்.** செல்வச் செருக்கில்லாதவர், மிகுந்த பக்திமான். போர்ப்படைகளால் கலகங்கள் நேரிடா வண்ணம் அவைகளை அன்னிய நாட்டிற்கனுப்பி சுயநாட்டில் அமைதியை அமைத்தனர். ஏனையதேசம், தேசத்தார்களிடம் நடந்து கொள்ளும் வழியைப் பெருமானவர்களிடம் இவர் கற்றுக்கொண்டவர். அரேபியா தேசத்திலுண்டான கலகங்களைத் தாம்பதவியேற்ற முதலாண்டிலே அடக்கி விட்டனர். வடபாகத்தில் பாரசீகர், உரோமானியர் செய்த சூழ்ச்சிகளை அகற்றுவதே முதற் கடமையாகக்கொண்டனர் தம்முடைய வேலைகளின் பயன் வெளிப்படு முன் இவர் காலஞ் சென்றனர். ஆயினும் 633ல் எமாமா யுத்த களத்தில் மொசேலாமா இறந்தபின் அரேபியா தேசத்தில் ஒற்றுமையும் அமைதியும் ஏற்பட்டன.

2. **உமர்** ஆட்சியில் பாரசீகர்கள் கதீஸியாவில் தோல்வியடைந்தனர். ஈராக் பிடிக்கப்பட்டது. 635ல் **கூபா, பஸ்ரா** நகரங்கள் ஸ்தாபிக்கப்பெற்றன. அதே ஆண்டில் **தமாஸ்கஸ்** நகரம் பிடிபட்டது. அடுத்த வருஷம் ஜெரூசலம் பிடிப்பட்டவுடன் கலிபா அதனைப்பார்க்கப் போயினர். மூன்று வருஷங்களின் பின் மோவியா என்பவர் சீரியா தேசத்திற்கு அதிபதியாக்கப் பெற்றனர். இது பெரும் பிழையென்பர், 640ல் அமிர் இப்நு அல் அஸ் தலைமையில் ஈகிப்த் தேசத்திற்குப் படை அனுப்பப்பட்டது. அலெக்ஸாந்திரியா கைவசமாயிற்று. பாஸ்டத் (கெயிரோ) நகரம் உண்டாயது. 641ல் நெகவெந்தில் கிடைத்த வெற்றியால் பாரசீகர் வலிகுறைந்தது. கடைசி சாஸநித் அரசர் ஊரைவிட்டோடினர். 643ல் ரெய் (ரே) பிடிபட்டது. அதனுடன் பாரசீகம் அடங்கிற்று. அரசியற் காரியாதிகளை ஒழுங்குப்படுத்தியவர் உமரேயாம். குர்ஆன் வேலை முடிந்தது. தானைமுறை வகுக்கப்பட்டது. அரேபியாவில் முஸ்லீம் தவிர வேறெவரும் இருக்கக்கூடாதென்ற எண்ணங்கொண்டு நெஜரானிலிருந்து கிறிஸ்தவர்

கள் வெளியேற்றப்பட்டனர். கப்பங் கட்டவேண்டியதென்ற நிபந்தனையின்மேல். அவர்களுக்கு சீரியா. இராக் மாகாணங்களில் உறைவிடம் அளிக்கப்பெற்றது. அதன்பின் கைபரிலிருந்து யூதர் கள் வெளியேற்றப்பெற்றனர். பதினொரு ஆண்டு ஆண்டபின் உமர் பாரசீக அடிமைகையால் மாண்டனர்.

3. உத்மான் காலத்தில் அரேபியப் படைகள் வடக்கில் ஆர்மீனியா, ஏஷியா மைனர்க்குச் சென்றன. வடஆபிரிக்காவில் கார்த்தேஜ் நகரம்வரை வெற்றியுடன் சென்றன. மெல்ல உள் நாட்டில் கலகங்கள் கிளம்பின. உத்மான குறைஷி குலத்தின் மீதுந் தன்குடும்பத்தினர் மேலும் அபிமானங்காட்டினர். குறைஷி களின் விரோதிகள் இதில் பொறுமை கொண்டனர். குறைஷி களுக்குள் பிளவு ஏற்பட்டது. ஹாஷிம் குடும்பம் ஆதிக்கம்பெற்ற உமர் குடும்பத்தாரை வெறுத்தது. பின்னவர்கள் இஸ்லாம் பற் றிலாதவர். மதம்பற்றிய கடமைகளில் கவனமிலாதவர்கள். உத் மானைக் கொன்றுவிடவேண்டுமென்று புதிய நகரங்களாகிய கூபா, பஸ்ரா, பாஸ்தாத்திலுள்ளவர்கள் சதியாலோசனை செய்தார் கள். கூபாவில் குறைஷிகளின் குறும்பு மிகுந்தது. இப்புதிய நக ரங்களின் அதிபதிகள் இவர்தம் குடும்பத்தினரே. இந்த நிலைமை யில் சிலவாண்டுகள் கழிந்தன. பின் இவற்றிலிருந்து மதீனு விற்குத் தூதுகள் போயின. அதன் முடிவு உத்மான் கொலைப் பட்டதேயாம். சீரியாவில் அடைக்கலம் புகும்படி நண்பர்கள் வேண்டியதைக் கேட்டிருப்பாராயின் கொலை நிகழா திருந்திருக்க லாம். மதீனர்கள் ஆலியைக் கலிபாவாக நியமித்தனர்.

4. ஆலி தேர்ந்தெடுக்கப்பட்டதும், அவர் உத்மான் கொலை யாளிகளைத் தண்டிக்க மறுத்தனர். அவருடைய கக்ஷிக்காரர்களைப் பதவிகளினின்று நீக்கினர். சீரியாவில் தளகர்த்தராயிருந்த மூவா வியர்தம் வேலையை இழந்தனர். இதனுல் குழப்பமுண்டாயது. ஆயிஷா, தல்ஹா, ஸோபேர் கக்ஷி மக்காவில் பலமாயிருந்ததால் பஸ்ராவைப்பிடித்தது. ஆயினும் அது 656ல் ஒட்டகக்களத்தில் புறங்கொடுத்தது. ஆலி பஸ்ராவைக் காப்பாற்றுவதற்காகத் தலைநக ராகிய மதீனுவைக் கைவிட்டனர். மோவியா வெற்றியின் பின்னர்

அரேபியா சிறு மாகாணமாயிற்று. தமாஸ்கஸ் தலைநகரமானது. உமாயித் வமிசம் முன்னேற்ற மடைந்தது. [உமர் காலத்தில் கடற் சண்டை நிகழ்ந்தது. இவருடைய படவுகள் உடைந்தன. இவருக் குப் பெரும் பீதியுண்டாயிற்று. உத்மானும் அத்துணை எச்ச ரிக்கையுடையவரல்லவர். கடற்கரையோரமாகக் கப்பற்படைப் போக்குவரத்து ஏற்படுத்தப்பெற்றது. அப்படையின் தலைவர் அபூ குவேஸ் சைப்பிரஸ் தீவைக் கைப்பற்றினர். அபூ சார்ஹின் தலை மையில் ஈகிப்த் கப்பல் தளம் துருக்கியர்களை அலெக்சாந்திரியா விற்கு அருகே தோற்கடித்தது.] ஆலியின் மனைவியார் பாத்திமா, நபிநாயகரின் மகள் இவ்வம்மையார் மகள், மனைவி, தாய் எனும் மூன்று நிலைமையிலும் செய்த தொண்டுகளையும் அம்மையாரு டைய வீரகுணத்தைப்பற்றியும் **'பாத்திமா, தி லேடிஆப் தி லைற்று'** எனும் புத்தகம் முகமதுஆலி அல்ஹஜ் சால்மின், என்பவரால் ஆங்கிலத்தில் வரையப்பெற்றுப் புதிதாக வெளிவந்துளது. இது பெண் மக்கள் கட்டாயமாகப் படிக்கத்தக்கது. பெண்களின் குறிக்கோள்கள் இன்னவையென்பது இவ்வம்மையாரின் வாழ்க் கை வரலாற்றால் நன்குவிளங்கும். இதனை நம்நாட்டு மொழிக ளில் மொழிபெயர்த்தல் அவசியம். இதற்குமுகவுரை மௌலானா அப்துல்கலாம் அசாத் என்பவர் எழுதியுளார். முன்னுரை டாக் டர் காலித் ஷெல்திரேக் என்பவரளித்துளார். விலை ரூ. 5

**உமாயித்கள்** காலத்தில் அரேபியாவில் ஓயாத சண்டைகள் நிகழ்ந்தன. 658ல் காரிஜித்தியர் **நார்வானில்** தோல்வியடைந்தனர். இதனின்று தப்பிப் பிழைத்தவர்களிற் சிலர் அராபியர் குலமெதி னின்றும் கலிபா தெரிந்தெடுக்கப்படலாமென்றனர், சிலர் கலி பாவே வேண்டியதில்லை என்றும், கடவுளே அரசரென்றும், அவர் சபையே ஆட்சி நடத்தவேண்டுமென்றும் வாதித்தனர். ஆலி இறந் ததும் அவருடைய குமாரர் ஹாஸன், ஹொசன் (ஹுசேன்) இருவரில் முன்னவர் மோவியாவுடன் சமாதானஞ் செய்து கொண்டனர், பின்னர் நஞ்சிடப் பெற்றுச் செத்தனர். மூவாவியா கலிபாவாயினர். யாஸித் என்பவர் பதவி ஏற்றதும் ஹாசன் கப்பங் கட்ட மறுத்தனர். படைகளைத் திரட்டினர். 680ல் கெர்பெலாவில் மாண்டனர். ஆலி குடும்பத்தின் துயரத்தைத் தீர்ப்பதற்காக

வெளியில் வரவும் இருபெரிய நகரங்களும் உதவி புரிந்தன. 680ல் யாஸித்தின் துருப்புகள் மதீனத்தைத் தாக்கின. யாஸித் மாண்டார். கஅபாவும் அழிந்தது

அபுதுல்லா கலிபா ஆயினர். 691ல் ஆபூல்தல் மாலிக் மக்காவைத் தாக்கினர். நகரம் பிடிப்பட்டது. அபுதுல்லா வீழ்ந்தனர். அதன்பின் மாலிக் பட்டம் பெற்றனர். 750ல் அரேபியா தேசம் சிறப்பிழந்தது. ஸ்பெயினிலும் இந்தியாவிலும் கிடைத்த வெற்றிகளால் பயனென்றும் இல்லாது போயிற்று. உமாயித்துகள் காலத்தில்தான் முஸ்லிம் கல்வியும் நாகரிகமும் ஜொலித்தன.

அப்பாசித்துகள். ஹாஷிம் குடும்பத்தார்களே இவர்கள். அபுல் அப்பாஸ் கலிபாவானதும் கூபா தலைநகரமாயிற்று. பின் அன்பாரும் பாக்தாதும் அங்ஙனமாயின. இக்குடும்பத்தர் பாரசீகரையும் துருக்கியரையும் துணைகளாகக் கொண்டனர். அன்னியர் ஆட்சி பெருகிற்று. அரபிபாஷை தலையெடுத்தது. கவிஞர்களும் இலக்கணத்தாரும் உழைத்தனர். 762ல் ஆலி வமிசத்திற்காகக் கலகம் ஏற்பட்டது. கலிபா மன்சூருடைய தானை அதனை அடக்கிற்று. 785லும் ஆலி சார்பாகக் கலாம் விளைந்தது. அதுவும் தொலைந்தது. ஹாருண் அல் ராஷித்தின் மக்களுக்குள் நேர்ந்த சச்சரவுகளில் அரேபியா முழுதும் ஒருமைப்பட்டு 812ல் மாமூன் பக்கம் உதவி புரிந்தது. 845—6ல் வாதிக் எனும் கலிபா துருக்கிப் படைத்தலைவராகிய 'போகா'வை அனுப்பி வடஅரேபியாவில் அமைதியுண்டாக்கினர்.

பின்னர் கார்மாதியர் நூறுண்டுவரை அரபியர் தேசத்தில் ஆதிக்கஞ் செலுத்தினர். அபூசெயித், அபூதாகிர் காலத்தில் கலிபா மதிப்பிழந்தது. அவர் 929ல் மக்காவைப் பிடித்து ஆங்கிருந்த கருங்கல்லை பக்ரீனுக்குக்கொண்டுபோயினர். பத்தாண்டு கழிந்த பின்னர் அது மக்காவிற்குக் கொண்டுபோகப்பட்டது. அபூத்தாகிர் காலமுடியக் கார்மாதியர்கள் அரேபியாவிலாட்சி புரிந்தனர். 985ல் ஈராக்கில் இவர்கள் தோல்வியுற்றார்கள். ஹஜ் மேற்பார்வை தொலைந்தது. காத்திப் எனும் தலைநகர் பிடிபட்டது. இவர்கள் ஆதிக்கம் குலைந்தது. முகம்மது நபியவர்களின் சிறந்த நோக்

கமாகிய அராபியர் ஒற்றுமை கலைந்து சிதறிற்று. 966ல் கலிபா மேதி என்ற பெயரும் மங்கியது. ஈகிப்தின் கலிபா அதிகாரம் பெற்றனர். 1258ல் பாக்தாத் கலிபாக்கள் வீழ்ந்ததும், சூல்தான் களாட்சி தலைப்பட்டது. கலிபா என்ற நாமத்தை அமிர், எமிர், சூல்தான் என்ற மொழிகள் விழுங்கின.

அப்பாசித் கலிபாக்கள் வேத விரோதிகளெனப்பட்டனர். அவர்கள் பகுத்தறிவாளர்கள். மூடநம்பிக்கையில் மூழ்கினவரல் லர். கலிபா 'மாமூன்' காலத்தில் மூத்தாஸில்கள் கல்வி நிபுணர்க ளாயிருந்து மதக்கொள்கைகளை ஆராய்ச்சி செய்தவர்கள். ஹிஜ்ரா 212ல் குர்ஆன் என்றுமுள தென்பாரனைவரும் பதிதர், பாஷாண் டிகளாகக் கருதப்படவேண்டுமென்று கட்டளையிட்டனர், உத்தி ரவு பிறப்பித்தனர். "அனனர் மடமைக்கலங்கள். பொய்ம்மை யின் தீநாக்கள்" எனப்பட்டனர். அபூஹாஜன்அல் அஸ்காரி யென்பவர் பஸ்ரா மசூதிக்குச் சென்று அன்னார் பொய்ம்மையை விளக்கினர். மாமூன் என்பவர் கிரேக்கர் நூல்களை அரபிபாஷை யில் மொழிபெயர்க்குமாறு சில யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் நியமித்தனர். காலப்போக்கை அனுசரியாத கொள்கை யாதும் துலங்காது, மக்களும் பிற்போக்காகவே யிருப்பர்.

பாக்தாத்தில் கலிபாக்களுக்கு உடற்காப்பாளர்களாகயிருந்த துருக்கியர் பின்காலத்தில் வலிமை பெற்று அதிகாரஞ்செலுத்தத் தலைப்பட்டனர். இவர்களில் ஒத்மான் என்பவர் ஆசியா மைனரை 1299ல் பிடித்து முதல் சூல்தானுக அமர்ந்தனர். இவர் பின் னேர் 1355ல் ஐரோப்பா மீது படையெடுத்து, 1453ல் கான்ஸ் டான்றி நோபிள் என்ற தலைநகரைக் கைப்பற்றி முகம்மதிய ராஜ்ஜியத்திற்கு எல்லை அமைத்தனராம்.

எந்நாட்டிலும் எம்மக்களும் சமயப்பற்றுள்ளவர், சமயப்பற் றிலாதவர், எச்சமயமு முடன்பாடென்பவர், பலசமயப் பேருண் மைகளைத் தெரிந்து அனுசரிப்பவர் என நான்கு வகுப்பினர் காணப்படும். இஸ்லாத்தில் பற்றுள்ளவர் முமீன்களெனப்படு வர், பற்றிலாத வஞ்சகர் முனபிக் காவர். ஞானிகளுக்கு எச்சமய

மும் தம்சமயமே. நீரினின்று பாலைப்பிரித்துப் பருகும் அன்னம் போல்பவர் பலசமயங்களிலுமுள்ள பொதுவுண்மைகளைத் தெரிந் தெடுத்து அவ்வழி யொழுகுவோர். முஸ்லீம்களில் இவ்வகுப்பார் சூபிகளெனப்படுவர். சுன்னிகளுக்கு இஸ்லாத்தைக் காப்பவர் கலிபாக்களாதல்போல, ஷீயாக்களுக்கு இமாம்கள் கடவுளின் பிர திநிதி, முகம்மது நபியின் பின்னதிகாரிகளாயினர். ஷீயாக்கள் இமாமியார், இஸ்லாமியர் என இருவகையார்களாகப் பிரிந்தனர். சூபிகளோ மறைபொருள் வாதிகள். பாரசீகப் புலவர்கள் பெரும்பாலார் சாமீபவாதிகள். கடவுள் மறைபொருள், பல திரை களுக்கப்பாலுள்ள கடவுளை யடைய முயலுதலே பக்தர்களின் பணிவிடையாமென்பவர். இவர்களில் ஒரு சாரார் தத்துவஞானி களாவர். 'உள்நோக்கிப்பார் அகத்திலிருப்பவன் அவனே' என்பர். 'உடம்பினி லுத்தமனைக் காண்' என்றனள் தமிழ் மூதாட் டியும். உண்மையை நாடுவோர் பீரை யடுப்பர். 'உண்மை வதிவது கிறிஸ்தவர் கோயிலில் இல்லை. ஏனையர் ஆலயத்திலுமில்லை, முஸ் லீம்களின் பள்ளி மசூதிகளிலுமில்லை. அவனவன் அகத்திலே யாம்.' பீர் எனும் சமய வழி காட்டியின் துணையால் நாயகனைத் தரிசிக்கலாம் 'அன்பு மிகுந்தால் ஆதியை அடையலாம்'.

## அதிகாரம். VI. கலம்பகம்.

1. **கலைகள்.** அரபிகள் கலைகளில் வல்லுநரல்லர். கார் டோவா, டொலிடோ, அலெக்சாந்திரியா முதலான நகரங்களில் இஸ்லாம் பரவிய காலத்தில் முஸ்லீம்களின் கல்வி வளர்ந்தது. கல்லூரிகள் ஏற்பட்டன. சர்வகலாசாலைகள் தழைத்தன. கிரேக் கர்களின் பழக்கத்தால் வான நூலும் ஞான நூலும் மருத்துவ நூலும் அழகிய கட்டட நூலும் சாரசேனர்களுக்கு அறிமுகமா யின. தொழுகை நேரமறிதற் பொருட்டும், ஹஜ் போவதற்கும் இன்றியமையாத வான நூற்பயிற்சி ஏற்பட்டது. ஞான நூலும் கிரேக்கருடைய சகவாசத்தாலுண்டாயிற்றென்பர். யூனனி (கட வுளை யறிந்தவன்) வைத்தியம் முஸ்லீம் வைத்தியமாகும். பழ வர்க்கங்களும் பூ வகைகளும் கற்கண்டுகளும் சேர்ந்த மருந்துகள்

நாவிற்கினிமையும் உடலிற்குறுதியுமளிக்கும். கிரேக்கர் முறை அரபி பாஷையிலெழுதப்பட்டு அரபிகள் சொந்த அநுபவத்திலும் சோதனையிலும் கண்ட முறைகளை அதனுடன் சேர்த்து வைத்ததே யூனானி முறையாம். அரபி பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டபடியால் கிரேக்க முறை புத்துயிர் பெற்றதென்பர். முஸ்லிம் வைத்தியர்களே சுத்தமான ஆகாயமும் தூய்மையும் இன்றியமையாத அறமென்றனர். ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்திப் பிணியாளிகளுக்குப் பிணிக்கு ஏற்றவாறு இடமமைத்துக் கொடுத்தவர்கள் முஸ்லீம்களே. அன்றியும் பின்காலத்தில் 18ம் நூற்றாண்டில் துருக்கி முஸ்லீம்களே கேணி ஊற்று நீராருந்தலும் இடம் பெயர்ந்து காற்று வாங்கலும், பால் கட்டுதலும், உடற் சுகத்திற்கு வேண்டப்பட்டனவென்று உலகத்திற்குப் போதித்தனரென்ப. கட்டட நூல் சிறப்புற்றிருந்ததற்கு இந்தியாவிலுள்ள 'தாஜ்மஹால்' ஒன்றே தக்கசாறுபகரும். இதனையுற்று நோக்குபவர்கள் கட்டட அழகு இத்தகைய தென்றறிவார்கள். கட்டடங்கள் கண்ணிற்கு இனிமை பயப்பதுமின்றி, உறுதிப்பாடும், மகத்துவமும், அலங்காரமும், பலபாகங்களின் பொருத்தமும் உடைத்தாயிருக்கவேண்டும். ரசவாதத்தைப் பரிசோதித்தவரும் ஆல்ஜிப்ரா என்ற கணித நூலையாக்கினவரும், தாபரசாத்திர வாராய்ச்சியாளரும், அரபிகளென்றே துணிந்து கூறலாம். உருவ வணக்கத்திற்குப் பக்கவுதவியாயிருக்குமென்று அரபிகள் படம் வரைதல், சிலையடித்தல், நாடக மெழுதுதல் முதலான தொழிற் கலைகளை ஊக்கிக்காமல் ஒதுக்கினர். பொம்மைக் கூத்துகள் மட்டுந் திருவிழாக்களில் காண்பிக்கப்பட்டுவந்தன. அரபிகள் இயற்கைப் புலவர்கள். மக்காவில் லக்ஷக்கணக்கான தலையாத்திரிகளின் கூட்டத்தில் புலவர்கள் பாட்டுகள் பாடிப் பரிசு பெறுவது வழக்கம். அன்னார்களிற் சிறந்தோர் இம்ருல் கேட்ஸ், அந்தர், காப் இப்நூஸோகேர், அல் மூத்தனபி எனலாம். அரபி பாஷையில் கதைப் புத்தகங்கள் கணக்கில. கூறு கூறுகளாக அமைக்கப்பட்டுள. சரித்திரக்காரர்களில் உமாரா எமனில் நிகழ்ந்த போர்களைப்பற்றி வரைந்தனர். கிதப் பக்ரி, இப்நுல் அதிர், இப்நுகால்குன், ஆமத் ஜபார்த்தி (ஈகிப்த்வரலாறு வரைந்தவர்) முக்கியமானவர்கள். சமயசரித்திர

மெழுதியவர்களில் தலைமை பெற்றவர்கள் இஸ்மேல் அபுல் பீடா, மஜாவுடின் எனலாம். நீதிசாஸ்திரம் பிக் (Figh) எனப்பட்டது. இதன்கண் அரசியல் முறை, சமூக வொழுக்க விதிகள் காணப் படும். இதுவிஷயமாக நான்கு வகையார் உழைத்தனரென்று முன் னரே கூறியுளேம்.

2. **போலி தீர்க்கதரிசிகள்.** முகம்மது நபியவர்கள் சீரியா, பாலஸ்தீனம் இவற்றின்மீது படையெடுக்க நினைத்தபோது அரே பியாவில் அவருடைய ஆதிக்கத்தைப்பற்றிக் குறை கூற இருவர் புறப்பட்டனர். அவர்களில் ஒருவர் அல் அஸ்வத் மற்றொருவர் மோசில்மா. முன்னவர் விக்கிரகவாராதனை செய்தவர். பின் இஸ் லாத்தைத் தழுவினார். இரண்டு தேவதூதர்கள் மூலமாகத் தனக் குத் தெய்வ வெளியீடுகளுளவென விளம்பரஞ் செய்தனர். மந்திர மாயவித்தைகளில் நிபுணராயிருந்தமையால் பாமரமக்கள் இவரி டம் மயங்கினர். பூதன் என்ற பாரசீகர் 'அரேபியா•பீலிக்ஸ்' Felix எனும் பாகத்தில் ஆட்சி புரிந்து கொண்டிருந்தனர். அவர் மரண மடையுந் தருவாயில் இந்த மந்திரதந்திரி அவருடைய சந் ததியைக் கொன்று, அவருடைய மனைவியை மணந்து, ஆட்சி யைக் கைப்பற்றவும், நஜ்ரான், சானு முதலான மாகாண நகரமாக் தன் இவரை, வரவேற்றனர். இவருடைய பகைவர்களிலிருவரா கிய ரெய்ஸ், பிருஸுஉம் இப்பலவந்தன் படுக்கை அறைபிற் புகுந்து கொன்றனர். மற்றொரு மாரீசனாகிய மோசில்மாவென்பான் யமாமா மாகாணத்தின் அதிபதி. இவனும் முஸ்லீம் ஆயினன். முகம்மது நபிகளுக்கு உதவிபுரியுமாறு தேவகட்டளை தனக்குக் கிடைத்ததாக வெளிப்படுத்தினன். இவனும் குர்ஆன் ஒன்றை ஆக்கினன். ஆன்மா அடிவயிற்றிலுள தென்பது அதன் கொள்கை களிலொன்றாகும். இவன் பேச்சில் தீரன், இவன் செல்வாக்கோ அளவு கடந்திருந்தது. இவன் பெருமானவர்களுக்கு, 'உலகத்தை இருவரும் சரிபாகமாகப் பங்கிட்டுக்கொள்வோம்' என்று எழுத் தனுப்பினன். அதற்குப் பெம்மான், 'உலகம் நம்முடையதன்று, இறைவனதேயாம். இறைவனுக்கு யார்மீது கிருபையுண்டோ அவரே ஆட்சிக்குரியராவர். அவ்வாட்சியிற்றங்கும் மக்களே

ஆனந்தமடைவர்' என்ற மறுமொழி விடுத்தனர். இப்பதில் கிடைத்த பின்னரும் அவன் ஒடுங்கவில்லை. பெருமான் காலத்திற்குப் பின் அவன் தக்க தண்டனை யடைந்தான் என்பர் சரித்திரகாரர்.

3. **பழிக்குப்பழி வாங்குதல்.** அரபிகள் இதில் கைதேர்ந்தவர்கள். தலைமுறை தலைமுறையாகப் பழி வாங்குதல் கடமை என்றனர். நபிகள் இது தவறு, இது மக்களுள் அமைதி, ஒற்றுமையைக் கெடுக்கும் ஆயுத மென்றனர். ஆயினும் மத விரோதிகளையும் அரச துரோகிகளையும் கொல்லலா மென்பதற்கு விதிகள் உண்டாக்கப் பெற்றன. இவற்றைக் குர்ஆனில் காணலாம். அபுசூபியானுடைய துணைவர்களில் 800 வீரர்களை வெட்டி வீழ்த்தியதும் அன்னார் மனைவிகளையும் குழந்தை குட்டிகளை அடிமைகளாக விற்றதும் இதற்குச் சான்றாகும். பின்னர் ஜவஹாத் (சமயப் போர் புரிதல்) கடமையாயிற்று.

4. **மாஸ்க் (மசூதி), பள்ளிவாசல்.** இதன் உறுப்புகள். (1) பிரார்த்தனை மண்டபம். இது கிப்ளா, மக்காவின் திசையைக் காட்டும், (2) பிரார்த்தனை ஆரம்பிக்கு முன் உடம்பு சுத்தஞ் செய்யும் தலம், (3) குர்ஆன் வாசித்து விளக்கப் பெறுமிடம் தூபிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இவற்றிலிருந்து இமாம் ஐந்து பிரார்த்தனைக் காலங்களில் முஸ்லீம்களை அழைப்பார். 'மகான், என்பதும் மசூதியேயாம்.

5. **உலாமாக்கள்** ஞானவான்கள். துருக்கியில் இவர்கள் மேலோரெனப்படுவர். இவர்களில் (1) **இமாம்கள்,** பிரதானிகள். இவர்களின் முக்கிய கடமை பிரார்த்தனை செய்தல் (2) **முப்டிஸ்,** வக்கீல்கள் (வழக்குரைப் போர்கள்). (3) காடிஸ் (காசிஸ்), நீதிபதிகள். **பக்கிர், தெர்விஷ், பீர்.** பக்கிர் ஏழை, தெர்விஷ் பிச்சைக்காரன். இவர்கள் துறவிகள். **சுன்னி** பக்கிரிகள் சட்டத்துக்குட்பட்டவர்கள். 'தெசாவுப்' எனும் பேரற வாழ்விற்கு எர்க்கியான் (ஆறு தூண்கள்) உண்டென்பர். **ஷீயா** பக்ரிகள் 36 வகையினரென்றும் இவர்களில் மூவகையினர் மட்டுமே அபூபக்கர் வழி வந்தவரென்றும் கூறுவர்.

பக்கிரி, தெர்விஷ—இருவருள்ளும்—இருவகுப்புகளுண்டென்பர். பாஷாரா அல்லது சாலிக் பக்ரிகள் மனைவி மக்களுடன் வாழும் முனிவர்களெனலாம். அசூத் வகுப்பார் உண்மைத் துறவிகள், நீத்தார்கள். மகாசுப் லங்கோடு கட்டிகள், தலைவிரித்துத் தியானத்திலே மூழ்குபவர்கள். பிஷாரா பக்ரிகளில் 5 வகையுண்டு. பக்ரிகள் தங்குமிடம் கணக்கா, அல்லது மடம் எனப்படும்.

பக்ரி, தெர்விஷ—உலகினர் முன்பிலும் கடவுள் முன்பிலும் ஏழைகளெனினும் சிறு வித்தியாசமுண்டு. பக்ரிக்கு உறைவிடமுண்டு. ஸக்கத் உண்டு, வாக்பு (தானச்சொத்து) வரும்படியுண்டு. தெர்விஷ், சந்நியாசி, வீடு கோறுஞ் சென்று பிச்சையெடுப்பவர். பேருண்மையை அறியாதார். பக்ரிகளில் மேலானவர்கள் வாலிகளெனப்படுவர்.

பீர்கள் (மூத்தவர்கள்) மெய்யான தெய்வ பக்தர்களே. 'பஞ்ச பீர்கள்' உளர். ஐவர்களின் பேர்கள் பலவிடங்களில் வேறுபடும். புராதன பஞ்சபீர்கள் 1. முகம்மது நபி, 2. ஆலி, 3. பாத்திமா. 4. ஹாசான், 5. ஹூசேன் எனப்படுவர். சாயித்கள் மதம் பற்றி உயிர் துறந்தவர்கள். அபூபக்கரால் இவர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள் என்பர். இவர்களுடைய தொழில் ஸிக்ர், அல்லாவுக்குரிய 99 பெயர்களையும் நானுவிதமாக மாறி மாறி சந்தத்தொடு ஜெபமாலையின் அக்குகளை எண்ணிக்கொண்டே சொல்லுதலும், முருக்கபா, குர்ஆனைச் சொல்லித் தியானித்தலுமாம். இவர்களில் சிலர் கூட்டங் கூட்டமாக வசிப்பவர்கள், சிலர் ஊர் ஊராகத் திரிபவர்கள். இவர்களில் பேர் பெற்றவர்கள் நடனஞ் செய்யுந் தெர்விஷ்களென அழைக்கப்படுவார்கள்.

6. **நபியின் மனைவியர்** பதின்மரில்

i **கதீஜா**— குறைஷி குலத்தைச் சேர்ந்த பணக்கார விதவை, முன்னிரு மணாளரை யிழந்தவள். நாற்பதாம் வயதில் நபிகளை மணந்தனள். 28 ஆண்டுகளாகத் தம்மரணம் வரையிலும் நபியுடன் ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

ii ஆயிஷா, அபூபக்கர் மகள். ஒன்பதாம் வயதில் மணம் நிகழ்ச்சி. மிகச் சிறிய வயதுள்ள மனைவி. நபிகளின் பிரியநாயகி.

iii சந்தா. சொக்ரனுடைய விதவை. நபியின் மகள் பாத்திமாவுக்குச் செவிலித் தாயாக இருந்தவள்.

iv. ஹப்சா, 28 வயதுள்ள விதவை. உமேயாமகள். இம்மாதிற்கு மகனிருந்தான்.

v ஸீனுப். செய்த்தின் மனைவி, நபி யவளை மணப்பதற்காகவே செய்த் என்பான் மணரத்துச் செய்தனன்.

vi பர்ரா, அல்ஹாரத், அரபி குலத்தலைவனின் மகள். வாலிப் அரபியின் மனைவி. இவள் தந்தையும் பர்த்தாவும் நபிகளின் யுத்தத்தில் மாண்டனர். நபியின் கைவசமாகப் பிடிபட்டவள்.

vii ரெகானு சிமியன் மகள். யூதர் கைதி, சிறைப்பட்டவள்.

viii சப்பியா. கெனுவின் மனைவி. அவன் கொலையுண்டபின் நபிகளின் மனைவியாகி நபி இறந்த பின்னர் 40 ஆண்டுகள் உயிருடன் இருந்தவள்.

ix உம் ஹாபிபா, ஹாபிபாவின் தாய், அபுசோபியானுடைய விதவை.

x மெய்முனு, 51 வயதுள்ள விதவை. நபியவர்களின் மனைவியர்களில் கடைசியாக யிருந்தவள்.

நபியின் சகாக்களில் மரியேவைப்பற்றி முன் கூறப்பட்டுளது. இவளுக்கு ஒரு மகன் இபுராகிம், பிறந்த 15 திங்களில் மறைந்தனன். மேரி ஈகிப்தில் காப்ட்ஸ் எனும் வகுப்பைச் சேர்ந்த நங்கை. இவள்மீது நபிகள் கொண்ட காதல் நீதியானதென்பதைக் காட்டுவதற்காகக் குர்ஆனில் புது அத்தியாயமொன்று சேர்க்கப்பட்டதென்பர்.

இவற்றிலிருந்து வெளியாகும் உண்மையொன்று. நபிகளின் மனம் காமத்தால் மட்டும் ஏற்பட்டதன்று. சோதரத்துவத்தை விளக்கும் பொருட்டும், இராஜ்ஜியப் பெருக்கின் பொருட்டும், நிகழ்ந்ததாகும். பெண்களுக்குச் சொத்துரிமை யுண்டெனினும் மகளிரென்ற உரிமை கிடையாது. ஆண் மக்களிஷ்டப்படி யாரையும் மணக்கலாம், விலக்கலாம், மறுமணஞ் செய்யலாம். பெண் மக்களுக்கு அவ்வுரிமையில்லையாம்.

7. நபி கதீஜா மக்கள்.

(1) காஸிம் நான்காம் வயதில் மக்காவில் இறந்தார்.
(2) ஜைனப்–சிற்றன்னை புதல்வர் அபுல் ஆஸ்ஐ மணந்தனர்.
(3) அப்துல்லாஹ்–இரண்டு வயதில் காலஞ் சென்றனர்.
(4) ரொகய்யா
(5) உம்முகுல்தூம் } ஹஸரத் உத்மானை மணந்தனர்.
(6) பாத்திமா–ஹஸத் ஆலியை மணந்தனர் .
(7) ஜஹ்ரா .

8. பாத்திமா மக்கள்— 1. ஹஸன், 2. ஹுசைன், 3. ஜனப், 4. உம்முகுல்தூம்.

9. பண்டிகைகள்

(1) மொகரம்— முதல் மாதமாகிய மொகரத்தில் முதல் பத்து நாளும் விரதங் காத்தல் முக்கியம். இந்தப் பண்டிகை நிகழ்த்தப்படும் இடம் இமாம்பர்ரா எனப்படும். ஆலியும் அவர் மக்கள் ஹாசன், ஹுஸேன் இருவருடைய சாவையும் நினைத்து ஓதுதல் ஏற்படும். மற்றக் காலங்களில் அவர்களுடைய தாஸியஸ் அல்லது பூசைப் பெட்டிகள் அங்கு காப்பாற்றப்படும். இமாம் பர்ரா பொது மக்கட்குரியதன்று. சிலருக்கே சொந்தமாயிருக்கும். இந்தத் திருநாட்களில் ஏழை மக்களுக்குத் தான தருமங்கள் செய்யப்படும். மிட்டாய் (இனிப்புகள்), சர்பத்து, புகையிலை, காசுகள் முதலானவை வழங்கப்படும்.

(2) இத்(எத்)பக்ரீத்- இத்துகள் இருவகைப்படும். இத்இல்

பித்ர் ஒன்று. இது ரம்ஸான் விருந்தை முடிக்கும் நாள் பற்றிய விழா. இத் யுஸ் ஸாகா (உஷா) மற்றொன்று. இத்யுல் குர்பான் அல்லது பக்ரீத் முற்பகலில் நடைபெறும் விழா. இது காளை வேள்வி யுற்சவமாம். இது ஆபிரஹாம் தம்மகனைப் பலி கொடுத்ததன் ஞாபகமாகக் கொண்டாடப் பெறும் பெருநாள். இவை நிகழுமிடத்திற்கு இத்கா எனும் பெயருளது. இது ஒரு சுவரால் சூழப்பட்ட மேடை. முசல்லா எனும் ஸ்தலத்தில் இரண்டு இத்துகளுக்குரிய பிரார்த்தனைகளும் இறப்புக்குரிய தொழுகையும் நிகழும். இது முஸல்லா, நமஸ்கா என்றும் அழைக்கப்பெறும்.

(3) ரமதான், ரம்ஸான்– இது இப்பெயருடைய ஒன்பதாம் மாதத்தில் நடைபெறும். ஆங்கிலத்தில் நவம்பர் மாதமாகும். இம்மாதம் முழுதும் சூரியோதய முதல் அஸ்தமனம் வரை எல்லா முஸ்லீம்களும் உண்ணு விரதம் உபவாச மிருப்பார்கள். இது சிறந்ததொரு திங்களாம். முகம்மது நபிகளின் வாழ்நாளில் இந்த மாதத்தைப் பெருமானவர்கள் தனியே தியானம், பிரார்த்தனை செய்து கழித்ததனால் என்றுமுள அல்லாவின் பெருமையும், முழு ஆட்சியும் நபிகளுடைய கணக்குகளுக்குப் புலப்பட்டன வாதலால் இப்பண்டிகை திவ்ய, பரிசுத்தமானதாகக் கொண்டாடப்பட் டுவருகின்றது.

(4) ஷாப்-இ-பாரத். இது ஷாபான் எனும் எட்டாவது மாதத்தில் பதினைந்தாம் தெய்தியில் வரும். அன்றிரவு எல்லா மக்களின் கருமங்கள் அனைத்தும் எல்லாம் வல்ல நாயனால் பதிவு செய்யப்படும். இந்த இரவிற்கு பாரத் (பதிவு செயும் இரவு) என்றும், லெய்லிதுல் முபாரிக் (ஆசிர் வதிக்கப்பெற்ற, போற்றத்தகுந்த, இரவு) என்றும், ரக்மத் (தயைபொருந்திய இரவு) என்றும், பாரேக்கா (பகுத்தறியப்பட்ட இரவு) என்றும் நான்கு பெயருள. நபிகளே இது பாராட்டத்தக்கதென்று கூறினரென்பர். மக்களுடைய விதியை நிர்ணயிக்கும் இரவாதலால் இது புனிதமான இரவாகும். ஷாபான் மாதம் 13உ பகலிலாவது, இரவிலாவது, இறந்த முன்னோர்களை நினைத்துப் புலவு, ஹல்வா, கறிகள்,

மிட்டாய் முதலான உணவுகளைத் தயாரித்துத் தெய்வத்திற்கு அர்ப்பணம் செய்து, யார் பெயரில் அர்ப்பணஞ் செய்யப்படுகிறதோ அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுமாறு வேண்டப்படுமாம். மறுநாள் விருந்தளிக்கப்படும். தொழுகை நிகழ்ந்தபின் வாணங்கள், வெடிகள் விடப்படும். பதினான்காம் தெய்தி அர்பா சடங்கு நடத்துவோர் இனித்த புலவுகளாக்கி நாயன் அமைதியுடைய முஸ்டாபாவை ஸ்தோத்தரிப்பார்கள். குழந்தைகள் கழி மண்ணினால் யானைகளும் விளக்குகளுஞ் செய்து விளக்கேற்றுவார்கள். பெண்ணுறவினர் தோத்திர முடிந்தபின் அவ்விளக்குகளில் அரை ரூபா, ஒரு ரூபா வைப்பார்கள். மறுநாட் காலையில் பழங்கள் முதலானவைகள் நெருங்கிய பந்துக்களுக்குக் குழந்தைகள் மூலமனுப்பப்படும். அவற்றை எடுத்துச் செல்லுஞ் சிறுர்கள் கைகளில் தரத்துக்குத் தகுந்தபடி நாலணுமுதல் ஒரு ரூபா வரை பரிசு கொடுப்பார்கள். மாவுப் பலகாரங்கள், வாசனைப்பண்டங்கள் நண்பர்களுக்குச் செலவழிக்கப்படும். இவ்விதச் சிறப்புத் தமிழர்கள் இல்லத்தில் விநாயகச் சதுர்த்தி, சிவராத்திரியிற் காணப்படும். முந்தின இரவில் ஏழைகளுக்குப் பிச்சை வழங்கப் பெறும். தானமளிக்கப்படுவதுடன் முன்னோர்களின் கல்லறையுஞ் சமாதும் தரிசிக்கப்படும். இந்தியாவில் சித்ரகுப்தன் விழா இதுபோன்றதாம். சித்ரகுப்தன் யாருடைய ஓலையை அன்று கிழித்துவிடுகிறானே அவனுக்கு மரணம் வந்து விடுமென்பர் புராணிகர்கள். முகம்மதியர் ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொருவருடையவிதியும் புதிது புதிதாக வரையப்படுமென்பர். இந்துக்கள் பிறந்தவன்றே விதியெழுதப்பெற்று பழைய ஏட்டுடன் சேர்க்கப்படுமென்பர்.

## 10. பெருமானவர்களின் பகைவர்— முக்கியமாக மூவர்.

(1) அப்துல் ஜால்–தண்டிக்கப்பட்டார். உமர்1 அப்நு அல் கட்டப் என்பவரின் பழி வாங்க வெளிவந்தனர். முஸ்லீமாயினர்.

(2) அபுன் சோபியான், அவர் மனைவி ஹிந்த்—இருவரும் கடைசியில் இஸ்லாத்தைத் தழுவினர்.

(3) அப்துல்லா இபுன் ஒப்பா (obba) துரோகிளாகக மாண்டனர்.

**11. முகம்மதியர் ஜனத்தொகை.** இந்தியா, துருக்கி இராஜாங்கங்கள், அரேபியா, பாரசீகம், ஆப்கானிஸ்தான், வட நடு ஆபிரிக்கா இவற்றில் 200 மில்லியன்கள் எனப்படுகின்றது. இந்தியாவில் மட்டும் 70மில்லியன் என்பர் (மில்லியன் = 1,000,000 = பத்துலக்ஷம்). கிறிஸ்தவர்கள் சுமார் 420 மில்லியன்

| | | |
|---|---|---|
| யூதர்கள் | 15 | ஷை |
| புத்தர் | 325 | ஷை |
| இந்துக்கள் | 220 | ஷை |
| பாரசீகர் | $\frac{1}{4}$ | ஷை |

கன்பூஸியர் (டாவோ, ஷிண்டோ உள்பட) 150 ஷை.

உலகமக்களில் முஸ்லீம்கள் ஏறக்குறைய பத்தல்ல, ஒன்பதில் ஒரு பகுதியினரென்பது வெளிப்படை. இந்தியாவில் வங்காளத்திலே முஸ்லீம்கள் தொகை மிகுதியாகக் காணப்படும்.

12 **தொழுகை** தொழ ஆரம்பிக்குமுன் ஜலமுகம் கழுவியும், அல்லது **தயம்** ஸ்நானம் செய்தும் போவது வழக்கம். அதற்கு ஐந்து வேளைகளுண்டு. ரக் ஆத்கள், நிய்யத், ஒழுங்குமுண்டு. பர்ல்—கடமை. நிய்யத்—நிர்ணயம், சுன்னத்—அல்லாவுக்காக இந்த நேரத்தில் தொழுதல், வாஜிப்—இரவின் வித்ரை

1. பஜ்ர்— வைகறைத் தொழுகை–சூரியோதத்திற்குமுன்

2. ளுஹர் — மத்தியானத் தொழுகை — மையஞ் சரிதல் முதல் இரண்டு பங்கு சாயல்.

3. அஸ்ர்—சாயங்காலத் தொழுகை—சூரிய அஸ்தமனத்திற்கு முன்வரை.

4. மக்ரிப் — அஸ்தமனமானபின் செவ்வானம் மறைகிறவரை.

5. இஷாத்—இராத்தொழுகை—செவ்வானம் மறைந்தபின் வைகறைவரை.

பர்லாவின்பின் துஆ ஓதவேண்டும். அல்லா பூரணன், தூயவன், படைப்பு, க்ஷேமம். க்ஷேமத்தோடு, உயிர்ப்பிப்பாய், ஸ்தானத்தில் சேர்ப்பிப்பாய், விருத்தி செய்வாய். மகிமையன்—எங்களை உயர்த்திவைப்பாய்.

வித்ரு—மூன்று. ரக் ஆத் வித்ரு தொழுகை. ஒருமுறை நின்று, குனிந்து, எழுந்து, அஷ்டாங்கமும் தரையிற்படிய சிர வணக்கம் செய்து எழுதற்கு ஒரு ரக் அத் என்று பெயர். நான்கு ரக் அத்—பர்ல். இரண்டு ரக் அத்—சுன்னத். மூன்று ரக் அத்—வாஜிப்

13. **தொழுகை ஒழுங்கு—** 1. நிலை நிற்றல் 2. தக்பீர் தொடங்குதல். கையை உயர்த்தல். 3. தக்பீர் கட்டுதல்..கைவிட்டுவிடுதல் 4. ருகூஃ செய்தல்—குனிதல். 5. ஸஜதா செய்தல்—தரையில் குனிதல் (1) நிலை—பின்பார்த்தல், (2) பக்கப்பார்வை, (3) இருப்பின் முன் பார்வை, (4) இருப்பின் பின் பார்வை, (5) ஸலாம் கொடுத்தல்.

14. **தொழுகை பலவகை–**1. இமாம் ஜமா, ஆத்தொழுகை 2. பிணியாளி பிரயாணி தொழுகை. 3. ஜுமுஆத் தொழுகை. 4. ஜன ஜாவின் தொழுகை. 5. ஜனஜாத். 6. தரா வீஹ். 7. பெருநாள் தொழுகை.

15. **இமாம்.** ஆபிரகாம்போன்ற சமயத்தலைவர், வழிகாட்டி, குர்ஆனில் இதுவரைக் கொத்தனுடைய ரசமட்டம் தூக்குக் குண்டுக்கு ஒப்பாகவும், ரோடு, மாணவனுடைய தினசரி வேலை, எழுத்தாதாரத்திற் கொப்பாகவும் கூறப்பட்டிருக்கிறது. மக்களால் நியமிக்கப்படுகிறவர் இமாமென்று சுன்னிகள் கூறுவர். ஷீயாக்கள் கொள்கை யாதெனில் இப்பதவி தீர்க்கதரிசி மூமாகக் கடவுளாலளிக்கப்படுகிறதென்றும், தெய்வ நியமனமாயிருத்தலால் இமாம் தவறு செய்தாலும் பாவமாகா தென்றும் கூறுதலே

யாம். இமாம் பெரியவரென்றும் சிறியவரென்றும் பகுக்கப்படு கிறது. சிறியவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் தொழுகையை நடத்துவார்கள். இமாம் இப்பொழுது கௌரப்பட்டமாயிருக்கிறது, முக்கியமான வேதசாத்திரிகள் இமாம்களெனப்படுகிறார்கள். இவர்களில் பேர்பெற்ற நால்வர் அபு ஹான்பா, ஆஷ் ஷாபியி, மாலிக் இபுன் ஆனஸ், அ'மத் இபுன் ஹன்பால் என்பார்களே. கலாலியும் இவர்களுடன் சேர்த்து எண்ணப்படுவர். காரிஜித் வகுப்பார்கள் இமாம் வேண்டிய தவசியமில்லை. சவுகரியத்திற்காக நியமித்துக்கொள்ளலாமென்பர். மோத்தா ஸிலித்துகள் நியமுகத்திற்கு முகாந்திரமுமல்ல, ஒத்துக்கொள்ளனுமல்ல, என்பர். சரியான தலைமை வகித்தலே முக்கியமாம். ஷீயாத்துகள் கடவுளால் நியமுகம்பெற்ற இமாம் தெய்வ வொளி பெற்று பாவச் செயல் செய்யார். இவரே பெரிய இமாமாவா என்பர்.

16. **தான தருமம்** தானம் கொடுத்தல் நோன்பு (ஈதுல்) கடைசியில் நிகழும். பித்யா—ஒரு ஏழைக்கு அன்னம். பித்ரா—இலேசான தானம். வருவாய்க்குத் தக்கவாறு தானஞ் செய்தல் முறை.

17. **நகசு** என்பது கரிநாள். இது சிறிய நகசு, பெரிய கொடிய நகசு எனப்பெயர் பெறும். **சிறியநகசு** மாதந் தோறும் 3. 5. 13, 19, 21, 24, 25 தேதிகளும் கடைசிப்புதனுமாம். **பெரியநகசு** முதல் மாதத்தில் 14, 15, இரண்டாவதில் 1, 20, மூன்றில் 10. 20, நான்கில் 1, 15, ஐந்தில் 10, 15, ஆறில் 1, 5, ஏழில் 13, 15, எட்டில் 14, 20, ஒன்பதில் 3, 20, பத்தில் 8, 20, பதினொன்றில் 2. 3. பன்னிரண்டில் 6, 20. **கொடிய நகசு:** முறையே 12. கடைசி புதன். 4, 12, 28, 22, 23, 4, 27, 1. தேதிகளாம்.

18. **கார்வான்.** மக்காப் பஞ்ச காலத்தில் மக்களுக்குக் குழம்புடன் உரொட்டியுமளித்ததற்காக உண்டான பட்டப்பெயர் கார்வான்.

19. **மாதங்களின் பெயர்கள்.** 1. மொகரம், 2. ஸபர்.

3. சம்யூலவ்வல். 4. ரப்யூசானி. 5. ஜமாதிலவ்வல். 6. ஜமாதி சானி 7. ரஜப. 8. ஷாபான். 9. ரம்ஜான் 10. ஷவ்வால் 11. ஜில் ஹாத் 12. ஜில் ஹேஜ். இம்மாதங்கள் பங்குனி, மார்ச்சு மாத முதல் எண்ணப்படும்.

20. **கல்லறைகள், சமாதுகள்.** நவ்காஜா—நவகாஸா ஒன்பது கெஜமுள்ளன. இவைகளில் புராதனப் பக்தி மான்கள் அடக்கம் பெற்றனரென்பர். **தாகா** என்பது தெர்விஷின் சமாதாகும். இவற்றில் அர்ஸ் எனும் சடங்கு, கிரியை நடத்தப்படும். தூப தீபங்கள் பத்திஹா ஓதுதல் காணப்படும்.

21. **மக்கா. ஹஜ்,—தலயாத்திரை** புகுமுன்—பாபுல் மு அல்லா, கபா புகுதல், ஹாம்ஷரிமூலம், ஷெ ஜருல் அஸ்வத்; கருங்கல் ஓரமாகச் செல்லுதல், எழுமுறை சுற்றுதல், ஹத்தீம்—சிறியவட்டமான சுவர். அதன்பின் மக்காவிலிருந்து $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் மிஞ நகரம் புகுதல்.

22. **தலயாத்திரை 'ஹஜ' மாதங்கள்** மூன்றாகும். அப்பொழுது மக்காவில் எல்லா வகுப்பாரும் அபாவில் அனைவர்க்கும் அன்னபானதானம் அளிப்பதுண்டு. அமைதியாகத் தொழலாம் சண்டைச் சச்சரவு நிகழாமற் காக்கப்படும், பெருங்கூட்டம் கூடுவதால் மூன்று மாதங்களிலும் வியாபாரம் மிகிந்திருக்கும். மூன்றி மாதங்கள் ஷவால், துல்கதா, துல்கஜ்ஜா- என்பன. யாத்திரைக் காலத்தில் வேட்டையாடல், விளையாட்டுக்கூடாது.

23. **கந்தூரி.** திருவிழா, கொடி, கூடு, சந்தனம். விநோத கரமாகக் கொடியும் கூடும் பெரும் பொருட் செலவி லமைக்கப் பெற்று, தயாரிக்கப்பெற்று மேளதாளம் பறை சங்கு இவற்றுடன் 10ம் நாளில் ஊர்வலஞ் செய்யப்பெற்று, வாசனைச் சந்தனம் வந்தவர்கட்கெலாம் அளிக்கப்படுவதுடன் திருவிழா முடிவுறும். பொட்டல் புதூரில் இவ்விழாச் சிறப்பாக நடந்து வருகிறது. இந்துக்களும் இவ்விழாவிற் கலந்து சிறப்பிக்கின்றனர். நாகூரிலும் இவ்விழா வெகு நேர்த்தியான முறையில் நடந்து வருவதாகத் தெரிகிறது.

24. முகம்மது நபியவர்களின் பெண்மக்கள். (1) ரோகோலா நபிகளின் காலத்தில் இறந்தனள். (2) பாத்திமா ஆலியாரின் மனைவி. பெருமானவர்களுக்குப்பின் இருந்தவள். (3) செயிருப் நபிகளின் காலத்திலே இறந்தனள்; (4) ஒம் கெய்தும், உதுமான் மனைவி.

25. குர்ஆன் வரலாறு. எழுத்தாளர், செயித் இபுன் தாபித், என்பவர். இந்நூல் முதலில் முகம்மது நபிகள் இறந்த பின் அவருடைய மனைவிகளிலொருவராகிய ஹப்சா என்பவர் கைவசம் பக்தோபஸ்தாக இருந்தது. செயித் என்பாரும் அவருடைய கூட்டாளிகளும் இதை வெளிப்படுத்தினர். இங்ஙனம் செய்யத் தூண்டியவர் உமர் அபுபக்கர் இவர். பல கித்தாபுகளையும் ரிவாயத்துகளையும் திரட்டிக் கொடுத்தனர்.

குர்ஆன் இதற்கு மூலசாஸனங்கள் (1) யூதர் கிறிஸ்தவர்களுடைய புராண கதைகள். (2) யூதபோதகர்கள், ரபின்களின் பழங் கதைகள். (3) அரபிகளின் பூர்வகதைகள் பாட்டுகளாகக் காணப்பட்டன. இவற்றில் மனவெழுச்சி மிகுந்து காணப்பட்டது. குர்ஆனை ஆங்கிலத்தில் முதலில் 1734ல் மொழி பெயர்த்தவர் ஜி. சேல் என்பவர். இதில் முகம்மது நபியின் ஜீவியசரித்திரமும் சேர்க்கப்பட்டிருந்தது. 1905ல் அப்துல் ஹக்கிம்கான் என்பவர் குறிப்புரையுடன் குர்ஆனை வெளிப்படுத்தினர். ஜெ. எம். ராட்வெல் காலப்பிரமாணமாகச் சூராக்களை ஒழுங்குப்படுத்தி 1861ல் குறிப்பு அட்டவணைகளுடன் அச்சிற் பதிப்பித்தனர். அதன் பின் இது இ. எச். பால்மர் என்பவரால் சேக்ரெட்புக்ஸ் ஆப் தி. ஈஸ்ட். = கீழ்த்தேசத்தின் திவ்விய நூல்களு எனுந்தொகுயில் ஒன்றாகச் சேர்க்கப்பெற்றது. இதற்கு மஞ்சரியொன்று இ. டப்ளியூ லேன் என்பவரால் தெரிந்தெடுக்கப்பட்டு எஸ். லேன் என்பவரால் திரும்பப் பரிசோதிக்கப் பெற்று பிரசித்தப்படுத்தப்பட்டது. பாதரி மராக்சி என்பவரின் பதிப்பே சேல் என்பவருக்குப் பேருதவியாயிருந்தது. டாக்டர் ‘வெயில், Weil’, மூ(யி)ர்(Muir), கோல்டெக் என்பவர்களும் நபியவர்களின் சரிதத்தையும் குர்

ஆனையும் நன்கு ஆராய்ந்தனர். இம்மகத்தான வேலையைப் பாராட்டி கோல்டெக் என்பவரை பாரிஸ் நகரத்திலுள்ள கல்விச் சங்கம் கனப்படுத்தியது. சூரா 1 முதல் 34லிலும் மதீனா சூரா 29லும் இயற்கை வனப்பு முதலான செய்யுட் பாங்கான உறுப்புகள் அமைந்துளவென்பர். பெருமானவர்களின் வாழ்நாள் வரலாற்றை முதன் முதலில் வரைந்தவர் ஸாஹரி என்பார். இவர் ஆயிஷா பிராட்டியாருக்குப்பந்து. பின் இபுன் 'ஈசாக்', இபுன் ஹாஷாம், இவர்களுக்குப்பின் 'வாகுய்டி' (waquidi)யும் பேர் பெற்றவர். இவர் மதீனாவைச் சேர்ந்தவர். கடைசியாக, த. பாரி, அரபியர்களில் பெரிய சரித்திரகாரர். 'உரோம்' சரித்திர ஆசிரியர் லிவி என்பவருக்குச் சமமானவராக மதிக்கப்பெற்றவர் இவரென்பர்.

26. சிறந்த உவமைகள். தேனீ, சிலந்தி, பசு — உவமைச் சூராக்கள். தேனீ வயிற்றிலிருந்து பலநிறமுள்ள சல பதார்த்தம் கசியும். அது மனித வர்க்கத்திற்கு மருந்தாகின்றது. கடவுள் எல்லா மறிந்தவர், சர்வவல்லபர் என்று நினைப்பாருக்கு இதுவொரு பாடமாகும். சாலமன் காலத்தில் மனிதர்களும் பறவைகளும் எறும்புகளின் பள்ளத்தாக்கிற்குச் சென்ற பொழுது, எறும்பு ஒன்று தன் இனத்தாரை நோக்கி, 'எறும்புகளே, உங்களுடைய உறைவிடஞ் செல்க. இலையெனில் சாலமனும் அவன் தானையும் உங்களை நசுக்கி விடுவார்கள். அறிகுதும்.' என்று சொல்லிற்றும். நன்றி பாராட்டுதல் கடமை. ஒழுக்கமுடையார்க்குத் தயை காட்டுதல் சிறப்பு. சிலந்தி. 'கடவுள், எல்லாம் வல்லவர், பரமஞானி. கடவுளுக்குப் பதிலாகத் தாம் காக்கவல்லவர்கள் என்று தம்மை நினைக்கின்றவர்கள். தனக்கு கூடு கட்டுஞ் சிலந்திக்கு ஒப்பாவார். அந்த வீடோ வீடுகளிலெல்லாம் எளிதில் அழியத்தக்கது. இதனை அவை அறியுமா? பசு. பசு யாகஞ் செய்யப்படும். அப்பசு நடுவயதுளதாயும், மான் கன்று நிறமுளதாயும், பளபளப்புள்ள உரோமமுளதாயும், பார்ப்பவர்கட்கு இன்பமளிக்கத் தக்கதாயும், இருக்கவேண்டும். கிழட்டுப் பசுவாயிருத்தல் கூடாது. பசுவின் கன்று நாற்பது நாள் வணங்கப்படும்.

27. மக்கா ஷரீப்கள், 10 தலைவர்கள். பாரம்பரையாகக் குடும்பத்தலைவர் வசமே மக்காவின் காவலிலிருந்து வந்தது.

(1) ஹிஜாபா—திரவுகோலை வைத்திருப்பவர்.

(2) ஸிகாபா—கிணறு முதலான நீர் நிலையங்களையும் மேற் பார்ப்பவர்.

(3) தியாத்—சிவில், கிரிமினல் நியாய அதிகாரி.

(4) ஸிபாரா—அயல் நாட்டுக்குச் செல்லும் தூதர்.

(5) லிவா—கொடி பிடிக்கும் உத்தியோகஸ்தர்.

(6) ரிபாதா — ஏழைகளை யாதரிப்பவர் (தான தர்ம வரியினின்று)

(7) நத்வா—மஷுரா—மகாசபையின் தலைவர்

(8) கயிம்மா—குபித்தா—சபை கூட்டுவித்தல், மண்டபம் மேற் பார்த்தல், சேனைகள் யுத்த பரணியாகப் போகச் செய்வதும் இவர் கடமை

(9) காஜிஞ—அம்வால்—அரசாங்க வரவு செலவு பார்ப்பவர்.

(10) அஜ்லாம்—குறி பார்க்கும் பாணங்களின் மேற்பார்வைக்காரர். இப்பதின் மருள் வயோதிக முற்றோரே தலைவர் (ரயீஸ், சையித்) அதிகாரஞ் செலுத்தினர்.

28. கொரீஷ் குலத்தார் மெக்காவின்கணுள்ள காபாவை மேற்பார்த்துக் கைங்கரியங்கள் செய்து வந்தனர். இவர்களின் பிறப்பு மூலம் இஷ்மாயி லென்பவர். இவர் ஆபிரகாம், ஹாகர் மகன். அபுதுல்லா, அமிஞ இருவரும் இக்குலத்தவராதலால் முகம்மதும் இக்குலத்தவரே. ஆயினும் இவருக்கு விக்ரக ஆராதனை உடன்பாடிலாமையால் தம்குலத்தாருக்குப் பிடிக்கவில்லை. இவரைப் பலவிதத்திலும் இக்குலத்தார் இம்சை செய்தனர். கொல்லவும் எத்தனித்தனர். காபாவில் விக்ரகங்களையுடைத்து வெளிப்படுத்தினுலும் காபாவை பெரிய ஸ்தலமாகக் கொண்டாடினர். கி. பி. 632ல் இவர் மெக்காவைக் கைப்பற்றியபின் ஆங்கு

கடைசி தலயாத்திரை போயினர். குலத்தாரும் இவர் கொள்கை யைத் தழுவினர்.

29. **சண்டைகள்.** முக்கியமானவை — (1) பேடர், (2) உகத், (3) கெய்பர், (4) மூத்தா, (5) அகழ் என்பனவாம். பேடரில் வெற்றி. உகத்தில் உதைப்பு. கெய்பரில் உடன்படிக்கை, பின்பிரபல்லியம். மக்கா பிடிபடல். ஒற்றுமையடைதல்.

30. **இஸ்லாம் குறைபாடு.** கடவுள் ஒன்று, தெய்வ பக்தி, தானதருமம், தலயாத்திரை, பண்டிகை, பெண்ணுரிமை, சிசுக் கொலை நிவாரணம், சகோதரப்பான்மை. தொழுகை, புரோகித ரின்மை ஆதியன இஸ்லாமில் மிளிரினும் அடிமையும் பலமனைவி கொள்ளலும் வழக்கிலிருந்தன. ஆங்கில ஆட்சியில் அடிமை அறவே ஒழிந்தது. சந்ததிபற்றி ஏகமனைவியுடையாரும் மற்றொரு பெண்ணை மணத்தல் பாரதநாட்டு வழக்கம். சில சமஸ்தானங் களில் ஏககாலத்தில் இரு பெண்மணிகளை வரித்தல் நிகழ்கின்றது. எட்டயபுரத்தில் நாளிதுவரை இவ்வழக்கம் இருந்து வருகின்றது. தமிழ் பேசும் முகம்மதியர்களில் பெரும்பாலாரும் ஒருமனைவி யுடனே வாழ்ந்து வருகின்றனர். நாளடைவில் நாகரிகமும் மக் களுரிமையும் மிகும்பொழுது இதுவும் உறுதிப்படும் என்பது திண்ணம்.

## அதிகாரம் VII. சொற்பொருள் விளக்கம்.

குர்ஆன் அரபி பாஷையிலுள்ள மறைநூலின் வெளியீடு. அரபி பாஷையை நன்கறிந்த ஐரோப்பியர்கள் தந்தம் பாஷையில் குர்ஆனை மொழிபெயர்த்துளார். ஆங்கிலேயர்களில் சேல் என்பவ ரும் ராட் வெல் என்பவரும் வேறு சிலரும் குர்ஆனை ஆங்கிலத் தில் எழுதியுள்ளார்கள். இந்தியாவில் அரபி பாஷை நிபுணர்கள் சிலரேயாவர். தமிழகத்தில் அன்னார்களைக் காண்டலே அரிது. தமிழகமாகிய தாயகத்திலுள்ள முகம்மதியர்கள் சிற்சில தொழு கைக்குரிய சூராக்களை மனனம் பண்ணுவதே யொழிய முழுக் குர்ஆனையும் படித்து ஆராய்ந்தவரிலரெனலாம். குர்ஆனைத் தமிழ்ப்படுத்த நெல்லை நகரிலிருந்த நுருல் இஸ்லாம் பிரஸ் அதிபர்

முப்பதாண்டுகளின் முன்னர் பெரு முயற்சி செய்தனர். அம் முயற்சி வெகுகாலமாக நிறைவேறவில்லை. சிலஆண்டுகளின் முன்னர் தாவுட்ஷா குர்ஆன் முழுவதையும் தமிழில் எழுதியிருப் பதைக் கண்டு உவந்தேன். முகம்மதியச் செல்வர்கள் பலரிருந் தும் அதற்காக்ப் பாடுபடுவோரைக் கண்டிலம். சமஸ்கிருதவேதம் வெகுகாலமாக இந்தியாவில் மறைபொருளாக இருந்து ஆங்கிலத் தில் கிரிபித். மாக்ஸ மூலர் முதலான பெரியார் தர்ஜமா, ஆராய்ச்சி செய்த பின்னரே அதன் மகிமை இத்தகைத்தென்று தமிழ் மக் களும் அறியலாயினர். அங்ஙனமே, சேலெனும் பெரியார் ஆங் கிலத்தில் குர்ஆனை எழுதாவிடின் அரபி பாஷையை அறியாத என்னைப் போன்ற சிறியார் குர்ஆன் பெருமையை அறியவொண் ணுததாயிருக்கும். அரபிச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதி யோரைப் பின்பற்றியே பெரும்பாலும் யான் தமிழ் மொழியில் எழுதியுளேன். இச்சிறு நூலிலும் இடையிடையே சில அரபிச் சொற்கள் வருகின்றமையால் "அரபிச் சொற்பொருள் விளக்க" மெனும் இவ்வதிகாரம் இந்நூலிற் சேர்க்கப்பட்டுளது. முஸ்லீம் நண்பர்கள் தமிழ் மொழியில் எவ்வாறு அரபிச் சொற்களையமைத் துளரோ அறியேன். பெரும் பிழையிருப்பின் பிழையைத் திருத் தித் தரவேண்டுகிறேன்.

## அ

அக்கினி—ஹாதமா
அதாபு—தண்டனை
அதாப்—கஷ்டம்
அமல்—நற்கருமம், செய்கை.
அமாலத்—நம்பிக்கை காப்பாற்றல்
அமானம்—அடைக்கலப் பொருள்
அர் ரஹீம்—இரக்கமுள்ளவர்
அல் ஹம்து லில்லா—எல்லாப் புகழுக்கும் அல்லாவே
அல்லா ஹாம் மபிர் ரபீக்குலஅ உலா—அல்லா மேலான தோழன்
அல்லா—கடவுள், பூரண பரமசக்தி

அஹது—ஒருவரே
அல் ஹைய்யு—சதாசீவி, நித்தன்
அல்கைய்யூம்—நித்தன், தனித்திருப்பவன்
அல் அலி—மகாமேலானவன்
அல் அலீம்—பெரியவன்
அல் ஹிமீது—புகழுக்குரியவன்
அல் கனி—பரிபூரணன்
அல் கபீர்—மகாப்பெரியவர்
அல் முத்தஆல்—சிறந்தவர், உத்தமர்
அல் அஜீஜ்—எல்லாம் வல்லவர்
அல் அமின்—நம்பத்தக்கவர்
அல் அவ்வல்—முதல்வன்
அல் ஆகிர்—இறுதியானவன்
அல் ஜாஹிர்—ஆதியந்தமானவன்
அல் பாத்தின்—இகபரமுளான்
அல் குத்தூஸு—பரிசுத்தன்
அல் ஜப்பாரு—மேன்மையானவன்
அல் லத்தீப்—ஆராய்பவர்
அஸ்ஸாதிக்—சத்தியவாசகர்
அஸ்ஸலாமு—சாந்தியளிப்பவன்

## ஆ

ஆகிரத்—அவ்வுலகம், மறுமை
ஆகிரம்—பரலோகம்
ஆபீத்—வணங்குவான்
ஆமன்—நம்பிக்கை
ஆமீன்—அப்படியாகுக
ஆயாத்து—வாக்கியம், அம்சம், வெளிப்பாடு, அறிவிப்பு
ஆலிம்—கற்றவன், சகலத்தையும் அறிபவன்

## இ

இஹசான்—பட்சம், நன்மை செய்தல்
இஸ்ராப்—விற்றல்

இக்லாஸ்—தூய எண்ணம்

இக்லஸ—சுயஎண்ணம் [காலம்

இதாகாலம்—விலகியிருக்கும் காலம், கணக்கிடவேண்டிய

இபாதத்—வணக்கம்

இபுராகிம்—ஆபிரகாம்

இமாம்—வழிகாட்டி, தலைவர்

இஸ்ராட்—வீண் செலவு [தானம்

இஸ்லாம் — ஒப்புவித்தல், சரணமடைதல், சாந்தி, சமா

இல்ம்—கல்வியறிவு

ஈ

ஈமான்—விசுவாசம்

உ

உம்மத்—பின்பற்றியோர், ஓரே

உலமா—கற்றோர்

உலூ—சுத்தி (கை, கால் முகம் கழுவல்)

எ

எத்திம்—அநாதை

ஒ

ஒரு தர்ஜா—கொஞ்சம் ஔக்கியா—வெள்ளிக் காசு

க

கயிப்—மறைவானது

கதீர்—வல்லவன்

கத்ர்—ரம்ஸான் கடைசி நாளிரவு

கபர்—மயானம், பிரேதக்குழி

கபூர்—மன்னிப்பான்

கஸ்ஸார்—சிரேஷ்டர்

காபிர்—நம்பிக்கையற்றவர், கடவுள் விரோதி

காலிக்—கர்த்தர், படைத்தவர்

காயம்—கூடாரம் செய்பவன்

கார்வான்—பாலைவனத்தில் பத்திரமாகச் செல்வதற்காக வர்த்தகர்களின் ஒட்டகக் கூட்டம்
காலிப்—பிரதிநிதி
கிபலா—கஅபா
கியாமத்—தீர்ப்பு நாள்

கு

குத்பா—பிரசங்கம்
குர்பானி—பலிதானம்
குப்பார்—அவிசுவாசி
குர்ஆன்—வேதம், மறை (வெளிவந்தது)
கௌம்—ஜனங்கள்

ச

சதகாத்—தர்மம்
சலாம்—வந்தனம்
சாயிபா—பிரார்த்தனை
சாலிஹான்—சன்மார்க்கம்
ஸிஸ்தா—சாஷ்டாங்க நமஸ்காரம்
சுன்னத்—ஒழுங்கு, அனுஷ்டானம்
சுப ஹான் சு—வானம் பூமி
சூரா—அத்தியாயம்
சூர்—உயிர்
சுஜித்—சாஷடாங்க நமஸ்காரம்

த

தக்வா—பக்திமான், பாவத்திற்குப் பயந்தவன், கடமை, பயபக்தி
தபஸீர்—விரிவுரை
தவக்கல்—கடவுள் மீது நம்பிக்கை
தல்லாக்—விவாகரத்து
தர்ஜா—அந்தஸ்து
தாகிரா—பரிசுத்தமானவர்
தாரூல் ஆகிரத்—பின்வாழ்க்கையிருப்பிடம்

திர்ஹத்—அரபி நாணயம்
திக்ரு—சிந்தித்தல்
தீன்—கூலி, மதம்
தீனு—அரபி நாணயம்
துஆ—பிரார்த்தனே
தௌபா—இரக்கம், பச்சாதாபம், மனந்திரும்புதல்
தௌராத்—புஸ்தகம்

ந

நகிப்—பொறுப்பாளி
நபில்—நோன்பு
நப்ஸ்—ஆத்மா
நுத்பா—நீர்த்துளி
நூர்—ஜோதி
நபி—தீர்க்கதரிசி

ப

பகில்—உலோபி
பருமான்—கட்டளை
பாங்கு—தொழுகை
பித்னு—கொடுமை
புர்கான்—பிரமாணம்
பரக்கத்—பாக்கியம்
பஹீரா—கோயில் ஒட்டகம் (காது அறுத்தது)
பெயிற்உல்மல்—பொது நிதி
பர்ல்—கடமை

ம

மலக்கு—தேவதூதன்
மன்ஜில்—தங்குமிடம்
மஹர்—பரிசம், நன்குடை
மவுத்—மரணம்
மக்பிரத்—பாவமன்னிப்பு
மக்காமா—அரசன் மனே

மஜ்ஜித்—பள்ளிவாசல்
மிஸ்வாக்—குச்சு
முஸ்லீம்—சகோதரன்
மூமின்—விசுவாசி
முனபிக்—வஞ்சகன், கபடமாகத் தொழுகிறவன்
முஷரிக்—விக்கிரகம் வணங்கு, இறைவனுக்கு இணைவைப்பவர்
முத்தகீன்—தீங்கு அனுபவிக்கிறவர்
மர்திய்யா—பிரலாபகீதம்
முசாபகா—கையைப்பிடித்தல்
முஃஜிசாக்—அற்புதம்

ய

யர் ஹமக்கல்லாஹீ—ஆண்டவன் உம்மீது கிருபை செய்க.

ர

ரஹ்மத்—கிருபை
ரஹ்மான்—கிருபையாளன்
ரஹீம்—அன்புடையோன்
ரப்—ஆண்டவன்
ரப்பிலாலமீன்—சர்வலோகங்களின் ஆண்டவன்
ரம்லான்—மாதப்பெயர்
ரசூல்—தூதர்
ருஹு—ஆவி
ராக்கா—அஞ்சலித்தல், தலை வணங்கல்
ரௌலா—ஏரி

ல

லப்பைக்—இதோ இருக்கிறேன்
லைலத்துல்கதர்—இரவில்

வ

வஹீ—தெய்வ அறிவிப்பு
வக்கீல்—பொறுப்பாளன்
வஸியத்—உபதேசம்

வாக்பு—தருமச்சொத்து
வாரா தத்—வாரிசுசொத்து

ஹ

ஹஜ்ஜுல் அக்பர்— பெரிய யாத்திரை
ஹக்—உண்மை, உரிமை, கடன்
ஹக்கீம்—ஞானவான், நீதிபதி
ஹதியா—பரிசு
ஹயாத்—ஜீவன்
ஹர்பெபிஜாட்—வேதநிந்தனைப்போர்
ஹதீஸ்—நற்போதனை
ஹத்யி—குர்பானி, பலிதானம்
ஹர்ருப்பிஜாம்—வேதநிந்தனை பேசு
ஹயா—நாணம்
ஹலால் தருமானது, நியாயம், அநுமதிப்பு.
ஹ்ரா—ஆகாரம்
ஹறாம்—விலக்கப்பட்டது
ஹஜ்—மக்காவுக்குத் தலயாத்திரை
ஹிஜாத்—மதப்போர்
ஹஜர்அஸ்வத்—கஅபாவில் புனிதமான இடம்
ஹௌல்—சொர்க்கத்தடாகம்
ஹாஷிம்—மக்கா பஞ்சகாலத்தில் மக்களுக்குக்குழம்புடன் உரொட்டியும் அளித்ததற்காக உண்டான பட்டப்பெயர்,

ஷ

ஷர்க்—ஆண்டவனுக்கு இணைவைப்பது
ஷகூத்—செத்தல், உயிர் துறத்தல்
ஷாம்—சிரியர்
ஷுக்கூர்—நன்றி
ஷைத்தான்—தீயோன்

ஜ

ஜஸியா—பாதுகாப்பு வரி
ஜனுஸா—பிரேதம்

ஜன்னத்—மோட்சம், சுவர்க்கம்
ஜமாஅத்—சமுகம், கூட்டம்
ஜக்காத்—ஏழை
ஜிக்கிர்—தியானம்
ஜின்—பேய், பிசாசு
ஜிஞ—விபசாரம்

## அதிகாரம். VIII. இஸ்லாமியப் புலவர்கள்

முகம்மதியர் ஆட்சி இந்தியாவில் சுமார் ஆறு, ஏழு நூற்றாண்டுகளில் நிகழ்ந்ததாயினும் தென்னாட்டில் அவ்வாட்சி இரு நூற்றாண்டுகளில் மட்டுமே நிலவிற்று. மொகலாயர் வமிசத்தில் அரங்கசிப் சக்கிரவர்த்தியின் காலத்திற்குப்பின் தமிழகத்தில் நவாபுகள் அதிகாரஞ் செலுத்திவந்தனர். கலகமும் கலக்கமும் குழப்பமும் பெருகிக் கொண்டிருந்தமையால் கலைகள் சீரிழந்தன. முகம்மதியரின் கல்வி குறைந்தது. குர்ஆன் பள்ளிவாசல்களில் மட்டுமே ஓதப்பெற்றது. தாய் மொழியாகிய தமிழ் மொழியைக் கற்றவருமில்லை. முஸ்லீம்களும் குர்ஆன் மொழியாகிய அரபி பாஷையைக் கற்றவருமில்லை. பிரிட்டிஷார் ஆட்சி வந்த பின்னரே கலாசாலைகளும் கல்லூரிகளும் ஏற்பட்டன. அச்சுவாகனமேறிப் பழைய நூல்களும் புதிய நூல்களும் வெளிவரத் தலைப்பட்டன. நபிநாயகத்தைப்பற்றிய பாடல்களும் வசன நூல்களும் முகம்மதியப் புலவர்களாலும் உரைகாரர்களாலும் எழுதப்பெற்று வெளிவந்து கொண்டிருக்கின்றன. அன்னாரைப் பற்றியும் அன்னாருடைய இயற்றமிழ் நூல்களைப்பற்றியும்ச் சிறிதாயினும் தமிழ் மக்களறிதல் கடமையாதலின் ஈண்டு அது எடுத்தாளப்பட்டுளது.

1. **உமறுப்புலவர்.** இவர் எட்டயாபுரத்தில் சமஸ்தான வித்வானயிருந்த கடிகை முத்துப்புலவரின் மாணக்கர். இரகுநாத சேதுபதியவர்களின் மந்திரியாயிருந்த செய்தக்காதிர் மரைக்காயர்

எட்டயபுரம் வந்தபொழுது இவரைக்கண்டனர். தம்மனத்திலிருந்த எண்ணம் நிறைவேற்றுங்காலம் அடுத்து வந்தது என்று நினைத்தனர். அது முஸ்லீம்கள் அன்போடு கேட்கத்தக்க சீருப் புராண கீதை எழுதத்தக்கவரிவரென்று கண்டு இவரை கீழ்க்கரையெனும் தம்மூருக்கு அழைத்தனர். ஊர் வந்தபின் தம் எண்ணத்தைப் புலவர்க்குத் தெரிவித்தனர். இப்புராணத்திற்கு வேண்டிய விவரங்களைப் புலவருக்கு அளிக்குமாறு மரைக்காயரும் புலவரும் அரபிப்பாஷையில் நிபுணராயிருந்த காமிலொலி சைகு சதக்கத்துல்லா லப்பை ஹாலிம் ஹாஜியார் சாகிப் அவர்களிடஞ் சென்றனர். புலவருடைய கிர்தாமீசை, உடை, சரிகைத் தலைப் பாகை இவற்றைக்கண்டு வெருண்டு இயற்கை செயற்கையான சீரு (கோபமற்ற நபி)வைப் பாடத்தக்க புலவராயிவரென்று கடுகடுத்துப்பேசினர். மரைக்காயரவர்கள் வருத்தமுற்றுத் தம் வீட்டுக்கேகினர். புலவர் பள்ளிவாயிலில் தங்கி (ரசூல் நாயகத்தை என்று காண்பேனோ என்று முடிவுடைய) முதுமணிமாலையைப் பாடி அங்கேயே ஒரு மூலையிற்படுத்து கண் வளர்ந்தனர். இரவில் நபிநாயகந்தம் கண்ணிற்றோன்றி லப்பையிடம் போகும்படி சொல்லித் தாமும் மேற்படியாரிடந்தாக்கல் கொடுப்பதாகச்சொன்னதன்பேரில் புலவரும் மரைக்காயரவர்களும் லப்பை சாகிப் வீட்டிற்குச் சென்றனர். லப்பையவர்கள் இருவரையும் வெகு மரியாதையுடனேற்று பறங்கிப்பேட்டையிற் றம் மாணவரிருப்பதாயும் அவர் கித்தாபு ரியாயத்துகளைப் பொறுக்கி உரையெழுத வேண்டும் விவரங்களையும் எழுதித் தருவரென்றுங் கூறினர். அங்ஙனமே மாணவரும் அளிக்கப் புலவர் புராணம் பாடினர். அதைத் தொடங்கு முன்னர் மரைக்காயர் பேரில் ஒரு வாழ்த்தும், 400 கோவையும் பாடினர். இதற்குள் ஆறுமாதஞ் சென்றது. புலவரின் தனி வாழ்வை நினைத்து அவருக்கொரு பெண்ணை மணஞ் செய்து வைத்தனர், பின்னர் நாகலாதபுரத்திலும் கீழக்கரையிலும் இவருடைய இல்லற வாழ்க்கை நிகழ்ந்தது. உதவியாயிருந்த மரைக்காயர் காலஞ்சென்றனர். அவ்வூரில் கனதனவானுயிருந்த அசனயினு மரைக்காயர் குமாரரான அபுல்காசி மரைக்காயர் புலவரை வரவழைத்து மச்சான் முறை கொண்டாடி அருமைப்படுத்

தினர். இவர் பெயரால் தம் புராணத்தை அரங்கேற்றுவதாகப் புலவர் சொல்லவும், மரைக்காயர் தம்மனைவி சப்பாகுபீவியிடம் சொற்றனர். அதனைக் கேட்டு இருவரும் மகிழ்ந்தனர். புராணத்தின் பொருட்சுவை சொற்சுவை சந்தச் சுவைகளை யறிந்து இன்புற்ற நண்பர்கள் ஆயிரக்கணக்கான வெகுமதியளிக்க முன் வந்தனர். அதனால் மனஞ் சிறிது மயங்கி நண்பரிடம் அச்செய்தியைக்கூறி, வரும்பரிசுகளிற் பாதியை நண்பருக்குக் கொடுப்பதாகத் தெரிவித்தனர். பீவியின் மனங் கலங்கிற்று. இதனையறிந்த புலவர் மனந்தேறி, நண்பர் பீவிபிராட்டியார் விருப்பப்படியே அரங்கேற்ற ஒருமனப்பட்டு மரைக்காயர் இல்லத்தில் புராணம் படிக்கப்பெற்றது. பீவியவர்கள் உள்ளிருந்தே கவியின்ப மடுத்துக் கைக்குழந்தைக்கு குறித்த காலத்திற் பாலூட்ட மறந்த நிமித்தம் குழந்தை இறந்துபோக அதனைத் தொட்டிலிலிட்டு மறைத்து விட்டுப் புலவருக்குச் சன்மானஞ் செய்தனர். மரைக்காயர் ரூ. 2000மும், அவர் மனைவி 2000 ரூ. பெறுமான தம் அணிகலன்களையும் புலவர் பெற்றும் பின்னதைப் பீவியம்மையாருக்கு சகோதரி பாந்தவ்யத்தில் திரும்ப அளித்தனர். அதன்பின் புலவர் எட்டயபுரம் போயினர். ஆங்கு சிலகாலமிருந்து மரணமாகவே அவ்வூரின் தெற்குக் கோட்டை வாயிலிலடக்கஞ் செய்யப்பட்டனர். எட்டயபுர அரசனும் ஆண்டு தோறும் சமாதியில் திருவிழா நடக்கப் படித்தர மேற்படுத்தி நடப்பித்து வருகின்றார்.

"அமருமுயிர்கள்பா லன்பா லுயர்ந்த
வுமறுப்புலவரென் றோங்கிய வள்ளல்......
சிதநூ லியல்பிற் சீருவென்ன
முதனூல் நாமமே நாட்டி, முதுபயன்
அறம் பொருளின்பம் வீடனைத்து மடங்கிய
திறம்—பெறுங் காப்பியஞ் செய்தனர்."

இந்நூலின் கண் மூன்று காண்டமும் 92 படலமும் 5627 விருத்தங்களுமுள.

| | | | |
|---|---|---|---|
| கவிலாதத்து—காண்டம் | 1—படலம் 24, | விருத்தம் | 1240 |
| நுபுவ்வத்து ஷ | 2— ஷ 45, | ஷ | 2344 |
| ஹிஜுறாத்து ஷ | 3— ஷ 47, | ஷ | 2683 |
| ஆகமொத்தம் ஷ | 3 ஷ 116 | ஷ | 5267 |

இதுவன்றி, நாகையந்தாதி, மக்காக்கலம்பகம், இரண்டும் கர்த்தனருளாற் புனைந்தனரென்பர்.

பாடல் மாதிரிக்காகக் கடவுள் வாழ்த்து முதற் பாவையும்,

திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த
மருவினு மருவா யணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்தபல் லுயிரின்
கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கடனே"

முதுமொழி (மணி) மாலையின் முடிவுப்பாவையும்

ஞானவா ரிதியை நபிகளுக் கரசை
நானில மேற்சுவ ருேருத
வானமா மணியை யிருநிதித் தருவை
மரபுகட் கொருதனிச் சுடரை
மோனமா தவர்க டொழுநவம ணியை
மூவுல கனைத்து மோருலகிற்
கோனியல் புரிய வருமுகம் மதுவைக்
குணமுடனென்று காண்குவனே.

எனவிருபாவையும் இவண் தந்துளோம்

2. சர்க்கரை சவாதுப்புலவர்கள். தேவகோட்டைக்குப் பக்கத்திலே சிற்றூரொன்றில் வாழ்ந்த இப்புலவர்கள் முறையில் மைத்துனர்கள். தமிழில் நன்கு கற்றகவி வாணர்கள். சர்க்

கரையார் பள்ளி வாசலிற்றெழுது கொண்டிருந்தபொழுது ஒரு நாள் சவாதுப்புலவர் அங்கே போயினர். அங்கிருந்த கத்தீபு முதலானோர் அவரை வரவேற்று உபசரித்தனர். அப்பொழுது சர்க்கரையார் மைத்துனர் பெயரை நினைத்து விகடமாக நம் குர் ஆன் பிரகாரம் தொழுகையிடத்தில் தொடக்கூடாத அமேத்தியப் பொருள் வருதலாகாதே என்றனர். சாதுரியப் பேச்சிற் சிறிதும் பின் வாங்காத சவாதுப்புலவர், 'நன்று சொன்னீர், சர்க்கரை கண்டங்கொண்டது, சவாது காத்திரங்கொண்டதன்றோ? இதனை அறியீர் போலும்' என்றனர். சர்க்கரைப் புலவர் மக்காவிலிருந்த முகம்மது நபி அவர்கள் குறைஷியர்களுடைய துன்பம் பொறுக்காமல் தம் ஆப்த நண்பர் அபூபக்கருடன் மதீன் நகரஞ் சென்று ஆங்கு இஸ்லாத்தைப் பரப்பினராதலின் அந்நகரத்தின்மீது ஓரந்தாதி பாடினர். அவர் மைத்துனர் **ஆண்டவர் பிள்ளைத் தமிழ்** என்ற பிரபந்தத்தை ஆக்கினர். இந்நூலை சர்க்கரை சாகிப் தம்பி குமாரர் அல்லாபிச்சைப்புலவர் **1874**ல் வெளியிட்டனர். அன்றியும் தனிச்செய்யுட்கள் பல எழுதிவிடுத்தனராயினும் அவை இப்பொழுது அகப்படுவதில்லை. மாதிரிக்காக ஒன்று தருகுதும்.

"செல்லப்பன் கச்சியிலே சேர்ந்ததற்பின் மணிகள்
நல்லதருமேக நவநிதியம்—சொல்லவே
முட்டின்றி யொன்றிரண்டு மூன்று நான்கைந்தாறேழ்
எட்டொன்பான் பத்தானவே."

தஞ்சை ஜில்லாவிலுள்ள தமிழ்ப் பண்டிதரொருவர் சர்க்கரைப் புலவர் முகம்மதியரல்லரென்றும் எழுதி, அவ்வாறு என்னுடைய **இலக்கிய வரலாற்றில்** திருத்த வேண்டுமென்றும், திருத்தாதவளவில் தாம் மான நஷ்டத்திற்கு என்மேல் வழக்குத் தொடர்வதாகவுங் கூறிப் பயமுறுத்தினர். 'சார்லோலை சலசலப் புக்கஞ்சாது' என்றாற்போல யான் பண்டிதருக்கு உண்மையை அறிவுறுத்தியும் கொண்டதே கொள்கையென்று முறுமுறுத்துக் கொண்டிருந்தனர். [முகம்மதியரல்லாத சர்க்கரைப் புலவரிருந்தாரென்பதை வாசகர்களறியும் பொருட்டே இவ்விருத்தாந்தம்

இங்கு குறிப்பிடப்பட்டது. இந்நூலில் அவரைப்பற்றி எழுத அவகாசமில்லை.

3. **மஸ்தான் சாகிப் எனும் இபுராகிம் புலவர்.** முகம்மதியப் புலவர்களில் இவர் பெயர் அறியாத தமிழனிலனெனலாம். **மஸ்தான் சாகிப் பாட**லென்பதைப் பாமரமக்களும் அறிவார்கள். இது முகம்மது பெருமானவர்களின் பேரில் பாடப்பெற்ற பிரபந்தம். இவர் பாடல் தாயுமானவர் பாடலை ஒக்குமென்பர். இவரை மெய்ச்சிய நண்பர்களிலொருவராகிய ஐயாசாமி முதலியார் **குணங்குடிநாதர் பதிற்றுப்பத்தந்தாதி** எனும் நூலில் இவரைப் புகழ்ந்துளார். இவருக்குச் சொந்தமான வூர் திருச்சினப்பள்ளியிலுள்ள குணங்குடி யென்பர். இவர் பெரிய அத்தர் வியாபாரியாயிருந்தனர். இவர் சென்னையிலிருந்தபொழுது கிறிஸ்தவ மதகண்டனமொன்று வரைந்து வெளிப்படுத்தினர். இதனை மறுத்து 'மேசியா மகத்துவம்' என்ற தலையீட்டிலொரு நூலைத் தஞ்சை. வேதநாயகப் பாதிரியார் குமாரர் ஞானசிகாமணி என்பார் வெளியிட்டனரென்ப. இந்நூல் சுமார் 85 ஆண்டுகளின் முன்னர் வெளியாயிற்று,

4. **மதாறு சாகிப்** புலவர் பெயரும் சிறிது காலம் சிறந்திருந்தது. இவர் ஐயன்பேட்டை வாசி. இவர் பாடலின் பெயர் **மிகுருசு நாமா.** இதன்கண் 234 பாக்களுள. இது 1888ல் வெளிவந்தது. இதன் கடைசிச் செய்யுள் கடைக்காப்பாகும்.

> "இருபத்திப்பத்து மூப்பத்தி ருவிதமாய்க் கவி செய்தாயல்
> கூடலில்
> மருவுந்திருமாலை யுறைமார்பி னர்வள்ள லெனுமீறுன்
> றருபுத் திரனைக வினியமறை சகலகலை
> யெல்லாமறிந் துணர்ந்தவாழி
> குருவித் தெனவந்த மதாறு சாகிப் கூறு மிகுருசு நாமா".

5. **முகம்மதுசைன்.** இவருடைய ஊர் அதிவீரராம பட்டணம். இவரைச் 'சின்னக் குழந்தை' யென்றே சொல்லுதல் வழக்

கம். இவர் பாடிய நூல் **பெண் புத்தி மாலை** என்பதாம். இதில் 258 கண்ணிகளுள.

"அல்லா வொருவனையஞ்சி வணங்குங்கோ—மயிலே
எல்லாமவனென் றிருதயத் தெண்ணிக்கோ—மயிலே

**பெண்புத்திமாலைக்கு** ஆக்கியோன் இப்புலவரென்பதை அந்நூலின் காப்புச் செய்யுளே அறிவிக்கும்.

"**பெண்புத்திமாலை**யெனப் பேசினேம், பெண் பிறந்து
தண்பத்தியில்லா ததையவரே—பெண்புத்தி
சொன்னார் **முகம்மதுசைன்**, தோகையரே, கண்டறிந்திங்
கெந்நாளும் வாழ்வீ ரிசைந்து."

6. **வண்ணக்களஞ்சியப்புலவர்.** முகமது இபுறுஹீம் என்பது இவரது இயற்கைப் பெயர். மதுரை ஜில்லாவிலுள்ள மீசல் எனுங் கிராமம் இவருடைய பிறப்பிடமென்பர். மதுரையில் ஒரு மடத்துத்தம்பிரான் சாமியிடம் கல்வி கற்ற இவர் வடமொழி, தென்மொழி, மலையாளமாகிய மூன்று மொழிகளிலும் வித்துவானயினர். பலநூல்கள் எழுதிய இவருடைய சிறந்த நூல் **முகையத்தீன்** புராண மென்பதே. இது நாகூர்ப்பள்ளிவாசலி லரங்கேற்றப்பட்டது. அத்தருணம் இந்நூலில் குற்றங்கள் மலிந்துளவென்று சொல்லியவரோடு தக்கவாறு வாதஞ்செய்து அன்னாரை மடக்கினரென்ப. இதனைக் கண்ணுற்கண்டுங் காதாற் கேட்டுமிருந்த கனதனவான் ஒருவர் இவர் திறமையை மெய்ச்சித் தம் அருமை மகளை மணஞ் செய்து வைத்தனர். இவர் சுமார் தொண்ணூறு வயதுவரை வாழ்ந்திருந்தனர். தனிச் செய்யுட்கள் பல இவரியற்றினர். வண்ணப்பாக்களே மிகுதியாயிருந்த காரணத்தால் இவர் **வண்ணக்களஞ்சியப்** புலவரென்ற மறுநாமம் பெற்றனர். இவரிருந்தகாலம் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

7. **கவிக்களஞ்சியப்புலர்.** இவர் சீறாப்புராணம் பாடிய உமறுப்புலவரின் குமாரர். இவர் பாடியது **நபியவதார அம்மானை**

யாகும். இதனைப்பரிசோதித்து 1899ல் வெளியிட்ட புலவர் காயற்பட்டணம் கண்ணகுமது மகுதூமுகம்மது ஆவர். இவ்வம் மானையில் 289 கண்ணிகளுள. பின்வருவது அவற்றிலொன்றாம்.

''மக்க நகரில் வரிவை பெற நபியுந்
திக்கெல்லாம் விளங்கச் சிறப்பாயிருந்தனரே.''

8. **நயினு முகம்மதுப்புலவர்** இவர் பாசிப்பட்டணத்தில் பீருமுகமது சாகிபின் குமாரர். இவராக்கின முக்கியமான நூல் **முன்கிரீன்மாலை** என்பதாம்.

9. **அலியார் புலவர்.** இரு நூலியற்றிப் பேர் பெற்ற புலவர்களில் இவரொருவர். இரண்டும் படைப்போராம். ஒன்று **இந்திராயன்** படைப்போர் எனப்படும். மற்றொன்று **இபுனியந்தன்** எனும் இராக்ஷசனுடைய போர் வரலாறும்.

10. **குலாம் காதிறு நாவலர்.** இவர் நாகூர் தர்கா வித்துவானவர். இவர் மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் **புலவராற்றுப்படை** எனும் நூலமைத்துப் பாண்டித்துரை தலைமையில் அரங்கேற்றினர். இந்நூலில் 220 அடிகளுள. இவருடைய கல்வியைப்பற்றி அரசன் சண்முகனார் இதன் சிறப்புப் பாயிரத்தில் பின் வருமாறு கூறியுளர்.

''அகத்தியந்தொல் காப்பியமே யாதியபல் லிலக்கணமு
மகத்துவமார் வள்ளுவர் நாலடி வயந்துங் கோவையார்
சகத்துரைக்கு மிவைமுதலாந் தமைபெறு மிலக்கியமுந்
தகத்தெரிந்த **குலாங்காதிர்** சதிர்பெறு நன்னாவலனே.''

பின்வரும் அடிகள் பாண்டித்துரையின் சிறப்புப் பற்றியன.

''விரைப்பாண்டி துரைத்தேவர்......
மாட்சியினவனே மலர்ந்த முகத்தினன்.*

முன்னூறு ஆண்டுகளின் முன்னர் **புலவராற்றுப்படை** எனும் மற்றொரு நூலுமுளது. அது சிறிய இரத்தினக் கவிராயர் இயற்றியதே. அதில் 542 அடிகளுள. ஆக்கியோர் திருக்குருகூரெனு

ஆவழ்ர் திருநகரியார். அவருடைய முன்னோர் திருமேனி இரத்தின கவிராயர். இந்நூல் இரசை வடமலையப்பபிள்ளையன் பேரில் பாடப்பட்டது. சொற்சுவை, பொருட்சுவை, மலிந்து படிப்போருக்குப் பேரானந்தம் பயப்பது. இது திருச்சிராப் பள்ளியில் கொல்லம் 868ல் அரங்கேற்றப்பட்டது. பிள்ளையன வர்களும் மச்சபுராணம், நீடூர்த் தலபுராணம் இயற்றிய செந்தமிழப் புலவர் எனப்படுவர்.

"இரசைப்பதிவள்ர் இருவப்பனையருள்
வரிசைப் பெரியவன் வடமலையப்பனே"
"பாடுவன், பாடுவதல்லா மற்பாவலர் பாடலுங்கொண்
டாடுவன், செய்வ னிரையூர் வடமலை".

11. ஆ. கா. பிச்சை இபுருகிம் புலவர். இவர் திரிசிரபுரத்தில் இலக்கண வுபாத்தியாயராயிருந்தனர். இவரிடங்கற்றுப் பாண்டித்தியம் பெற்றவர்களில் கு. சோமசுந்தரம்பிள்ளை யுபாத்தியாயரும், வே. அ. சாமிநாதபிள்ளையும் ஆகிய இருவராவர். இவராக்கிய நூல் திருமதீனத்தந்தாதி. இதனை நாகூர் வித்வசனசேகரர் குலாம் காதிறு நாவலர் முத்திதரு திருமதீனத்தந்தாதியென்றொரு நூறு தீங்கவி யருமைவரப் புனைந்தனரென்று புகழ்ந்துளர். இவ்வந்தாதியின் சிறப்பைப்பற்றி உமறுப்புலவர் மரபினராகிய ஹாஜி முகம்மது செய்குமிருன் இராவுத்தர்

"சருக்கரைப்பாகலிற் றேன்மழை பொழிந்தெனச்
சொற்பொருளணிச்சுவை பற்பலதழீஇ
யிலக்கணத்ததுவர யெவர்க்கும் விளங்க
நாற்பயன் கிடந்த நூற் பொருள் காட்டி
ஒப்பிலா ஞான வைப்பெனத் திகழ்ந்த
யமகவந்தாதி யொன்றியபபித் தந்தனன்"

என்று கூறியுளர். இதற்கு உரை செய்தவர் ஷெ குலாம் காதிறு நாவலராவர். இவர் பாடல் மாதிரிக்காகச் செய்யுளொன்று இவண் தருகுவம்.

"அத்தந்தியாக விலைமர்தர் மம்ம ரகப்பட்டு
அத்தந்தியாக வலாதளித் தெய்தனை யாலினிநின்
அத்தந்தியாகத் திலகுறச் செய்யன் பராமணத்தில்
அத்தந்தியாகத்துறு மதீனத்தவரன்ப னென்றே".

அத்தந்தி-அந்த வெள்ளையானை, சிவந்தமாலைக்காலம், பொருளீகை.

12. செய்யிது அன்பிய்யா சாகிப். இப்புலவர் தென்காசி வடகரையூரிலிருந்தவர். இவர் நபிநாயகன் பேரில் பிள்ளைத் தமிழ் அருளினர். இது மகாவித்வான் சவாதுப் புலவருடைய பிள்ளைத் தமிழ் போன்று பத்துப்பருவங்கொண்டது. இதன் கண் 106 திருவிருத்தங்களுள. காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்த வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர், ஆகிய பத்துப்பருவங்களில் 6வது பருவத்தின் பெயர் 'வாரானை' என்பது 'வருகை'யென மாற்றப்பட்டுளது. மகாவித்வான் பாட்டிற்கும் இப்புலவர் பாட்டிற்குமுள்ள தாரதம்மியங்களைத் தெரிந்து கொள்ளுமாறு இருவருடைய பிள்ளைத் தமிழின் கடைசி விருத்தத்தை இவண் தருகுதும்.

மகாவித்வான்

ஆதிமுதலோன்றிரு வருட் பெருகிவாழ்க
நம் மகுமது நகுல் வாழ்கவும் மத்
தவரான தீனவாடங்கலும் வாழ்க
வகிலாண்டகோடிகளும் வாழ்க
வேதநடை வாழ்க நல்லோர் செயல்கள் வாழ்க மா
மெய்யறந் தபசு வாழ்க
வித்வ ஜனபரிபாலனத்தினர்கள் வாழ்க நூல்
விரும்பிப்படிப் போர்கள் வாழ்க
நீதிநெறி வாழ்க மனுமுகம் மதலிகா
னித்தியமும் வாழ்க வவனி
னிலவு செங்கோலோடு மக்களுற முறையாக்க
ணித்திய நீடுழி வாழ்க
சோதிமதி கதிர் வாழ்க முகயித்தீனொலியருட்
சுந்தரத்தேரும் வாழ்க

சுபகரத்தொடு மாதமும் மாரி பெய்துலகு
சுகமாக வாழ்க ஆமீன்.

### புலவர்

ஆதியினருளொடு வரிசைகடங்கிய
அகமுது நபி வாழ்க
ஆல சுகாபொடு தீனவாடங்கலு
மறிஞரு முதல் வாழ்க
மேதினி மீதினி விசையொடு படிப்பவர்
விதிமுறையுடன் வாழ்க
விழைவொடு கேட்பவர் கொடுப்பவர் கிளையொடு
வியம்பெற மிகவாழ்க
கீதமதொடுபல சீவசெந்தடங்கலுங்
கெழுமையினுற வாழ்க
கேதமு மணுகிடா விண்ணவர் கூறுலீன்
கிருபையுடன் வாழ்க
தீதொடு பலவினை யகற்றியும் வாழ்கத்
தேரை நடத்துகவே
செய செயசிங்க முகம்மது நந்
தேரை நடத்துகவே.

இப்புலவர். பிள்ளைத்தமிழ் ஏறக்குறைய அறுபது ஆண்டுகட்கு முன்னர் வெளிவந்ததென்பர், மகாவித்வானுடைய நூலுக்கு நான்காண்டுகட்கு முன்னென்பர்.

13. **ஆலிப்புலவர்.** இவர் வித்வசிரோமணியென்றும் சடாக்ஷக்கவியென்றும் புகழப்பட்டுளர். இவர் முகம்மது நபி மக்கமா நகரமிருந்து எழுந்தருளி ஹக்கனிட மிறுஷிற் போய் மொழிந்து வந்த காரணமாகிய மிகுறூ ஜென்ற சரிதையை **மிகுருசு மாலை** யெனும் மகுடமிட்டு பாலிதத்தமிழாற் பாடினர் என்பர். இதில் கடவுள் வணக்கம், நாட்டுச் சிறப்பு, பாயிரச் சிறப்பு, புருக்குச் சிறப்பு, பைத்துல் முக்கத்தீசுச் சிறப்பு, ஏணிச் சிறப்பு, எழுவான் சிறப்பு, நரகத் தியல்பு, சொர்க்கச் சிறப்பு, அறுஷிச் சிறப்பு, நபி

யுல்லா பனீயிசுறுயீல்களைக்கண்டது, நபி மக்கத்துக்குவந்த சிறப்பு எனும் பன்னிரு பகுதிகளுள. இதில் 743 பாக்களுமுள.

"துய்யமுகம்மதே முஸ்தபாவே துய்யவிம்க் குற்ற தீனில் வரேன்
பொய்யுங் கசட்டையு மகற்றி விட்டுப் பொருகா நிலையிலே வழிப்படுவேன்
மெய்யாகவென்றுனுடனே நபிமேவுங் கலிமாவைப்பு கட்டினார்கள்
செய்யுந்தவப் பொருளீமான்கொண்டு தீன்தீன் முகம்மது தீனே யென்றார்".

14. மாலிக் சாப்புலவர். இவர் மதுரையம்பதியில் வாழ்ந்த ஜமாலுத்தீன் சாகிப் புத்திரர். இவராக்கிய நூல் **தொழுகைநாமா.** இதில் 182 கண்ணிகளும் காப்பு விருத்தமுமுள. இத னுட்கிடை

அல்லா முகம்மதுடன் அனைவர்களெல்லோரும்
நல்லிப் புகழ்ந்திடுங்கள் நாட்டிலுள்ள மானிடரே

இக் கண்ணியால் விளங்கும். இந்நூல் 1888ல் வெளியிடப் பெற்றது.

15. ஷாமுனா லெப்பை. இவர் காயற்பட்டணம் கலைமான் லெப்பையவர்கள் குமாரர். இவரருளிய நூல் **இரு ஷாது நாமா.** இதில் தொங்கலும் வேறு முள்பட, காப்பு வெண்பா நீங்கலாக 187 செய்யுட்களுள. தொங்கல் 2வது செய்யுளில் இதன் உட்பொருளும் பயனுங் கூறப்பட்டுள.

"அல்லா திருவுளமானதுவுமால நபிசொன்ன அதீசலுவுஞ்
சொல்ல முடியாத சூட்சமது தோண்ட முடியாத புதையலது
நல்லோர் தவத்தோர்கள் நடுவறிந்து நாடிப் பொருடனையுணர் வீராகில்
பொல்லா வினையா னகுபறு நீங்கிப் பெரியோன்றகு மத்திலாகுவரே"

இந்நூல் 1902ல் சென்னையில் அச்சிடப்பட்டது.

16. ஷாகு முகமத் அப்துல் காதர். இவர் தென்காசி ஷைக் முகம்மது ஹனீ வத்துல் காதிரி ஷாகன்ஷா ஆலிம் சாகிப் குமாரர். இவரியற்றிய நூல் முரீது விளக்கம் என்னும் இரத்தினச் சுருக்கம். இது நாற்பதாண்டுகளின் முன் பதிப்பிக்கப் பெற்றது. இவ்வாசக நூலில் வினவிடை (ஜவால் ஜவாபு) என்ற முறையில் முரீதாதல், சிபத்து நபுசு, முஷா ஹிதா, முருக்கபா, கலிமா, அறிவு, (இன்சான், ஹைவான்), உலுச் செய்தல், தொழுதல் இவைகள் நன்கு விளக்கப்பட்டுள. இவ்வாசகக் கர்த்தாவின் முன்னோர்கள் பேரில் கும்மிகள் பாடப்பெற்றுள. இவற்றிலிருந்து இவருடைய மூதாதைகள் டில்லியிலிருந்து தென்காசிக்கு வந்தவர்களாமென்பது அறியக்கிடக்கின்றது.

17. பீர் முகம்மது சாகிப். இவர் மலையாளத்தைச் சார்ந்த தற்கலைப்பதியில் மெய்ஞ்ஞான சொரூபரெனப் போற்றப்பட்ட பாவலர். இவர் மஹரி பத்துமாலையை ஆக்கியருளியவர். இதில் கபிகளியற்றிய தீனில் விசுலாத்தின் நிலையாகிய ஷரீஹத்து, தரீக்கத்து, ஹகீக்கத்து, மஹரிபத்து ஆகிய இந்நான்கையும் அறிந்து தெளிந்த இப்புலவர் கடைசியான நிலையைப்பற்றிப் பாடியுளர். இந்நூல் பொருட்பால், அருட்பால், காமப்பால், எனமுப்பாலாக முறையே 37, 373, 202 ஆக 613 செய்யுட்களடங்கியது முதற்பாலில் கலிமா விளக்கம் 12 அறிவின் விபரமும், இரண்டாவது பாலில் இமாமுடைய நிலை, பீர் நிலை, அறியும் வகை, பாசக்காரனவர் செயல், மசலாக் கேட்கும் விபரம், தாத்துவகை, சிபாத்து வகை, ஹவ்வா பிறந்ததும், மூன்றும் பாலில் நவக்காமம் அறியும் வகை, ரூகுவகை, 14 முஷாஹதா விபரம் இவையடங்கியுள. மாதிரிக்காகப் பாடலொன்று பின்வருவது.

“புட்டுப் புட்டல்லோ வகுத்துச் சொன்னேன்
 புறுக்கான் முகம்மது மஹரிபத்தை,
சட்டமாகவே விரித்துச் சொன்னேன்
 சாகா முகம்மது மஹரிபத்தை
கட்டுமெட்டாகப் பிரித்துச் சொன்னேன்
 ஹபீபு முகம்மதை மஹரிபத்தை

எட்டுவிதத்திலே யறியச் சொன்னேன்.
பனங்கள் முகம்மது மஹரிபத்னைத".

இம்மகான் **பிசுமில்க்குறம்** எனும் நூலையும் ஆக்கியருளினர். இதன்கண் மாலையிலுள்ள பொருளை எளிய நடையில் 590 கண்ணிகளாக அமைத்துளர். இவற்றுடன் வெண்பா, விருத்தம் 10ம் சேர்ந்துள.

18. **கண்ணகு மதுமகுது முகம்மது.** இப்புலவர் நபிமார்களினியற்கையுஞ் செயற்கையுமாகிய பெரிய **கசசுல்லன்பியா** எனும் வசன நூலை, அரபு, பாரிசு, ஹிந்திக் கித்தாபுகளைக் கொண்டும் ப. நயினு முகம்மது புலவர் அச்சிட்ட பிரதியைக் கொண்டும், ஆலிம்களுடைய கேள்வியைக் கொண்டும் எவருக்கும் விளங்கும் பொருட்டு வழக்கத் தமிழில் வரையப்பட்டு 1902 வெளிவந்தது. இது 1000 பக்கம் கொண்டது, மூன்று பகுதியிலுளது. படைப்புத்தொட்டு 20 நபிமார்களின் மேற்பட்ட சரிதங்களுடையது. ஆதம், இதுரீசு, ஹாறாத்மாறாத், சீது, நூகு, கூது, சாலிகு, இபுறாகிம், யூசுபு, ஐயூபு, சுஐபு, மூசா, இலயாசு, அசுமவீல், தாவீது, சுலைமான், யூனுசு, ஈசா, இபுறு சக்கரியா, மறியம், இருபதின்மராம்.

இவர்கள் பெயர்களை ஈண்டுவரையப்பட்டிருக்கும் நாலுமடியாசிரிய விருத்தத்திற் காண்க.

ஆதி நாயகனருளிஞட்டத்திலே யுண்டது
ஆக்கிடவும் வேண்டுமென்ன
அழகான குன்னென்ற வொரு சொல்லினு லெலாம்
அமைத்திடுவதற்கு முதலே
அகுமது முகம்மது றசூல் நபியையே தன்னின்
அரிய வெளியாலமைத்தே
அவனிமிசையவரினுல் நாம் வெளியரங்கமாய்
ஆகிடவும் வேண்டுமென்ன
நீதியாய் முதலினில மைத்தல் விகசிதமான
நியதிவளர் **ஆதநபி** நல

நேசர் இதுரீசு நபி ஹாறுத் தூமாறுத் எனு
நிகழ்த்துதற் கரியவானோர்
நெறி வளருஞ் சீது நபி நூகு நபி கூது நபி
நீதியின் சத்தாது சுவனம்
நேரின் இபுருகிம் நபி இசுமாயில் நன்னபி
நேத்தியிசு ஹாக்கு நபி மெய்ச்
சோதி நீங்காத அருக்கூபு நபியார் தமது
சுதர்கள் பலர் யூசுபு நபி
சொல்லும் ஐயூபு நபி துல்கிலா பெனு நபி
ஷுஐறு நபி மூசா நபி
தூதிசிலுறு நபிநன்மை யூசகன் றேருது நபி
துய்ய இல் யாசு நபிசிர்
தோற்றும் அல்யகசு நபி அசுமவீல் என்னும் நபி
சுருதி தாவூது நபிமா
போதமார் நபிசுலையுமான் யூனு செனும்
புரித நபி ஈசா நபி
பொறுமை யெகியா இபுநு ஸக்கரீயா என்று
புகலும் நபி மறியம் இவர்கள்
புவிமீது வரவருளும் அச்சரிதை யாவையும்
பொறப்பில் உலமாக்கள் சொற்போல்
புந்திவளர் மகுது முகம்மதுப் புலவன் எழில்
பொங்க நோக்கி அச்சிட்டனரோ."

19. செ. செய்கப்துல்காதிறு ஆலீம்சாகிப். இவர் திருநெல்வேலிக்கணித்தாயுள்ள பேட்டையில் மௌலானு மௌல்வி என மதிக்கப்பெற்றவர். இவர் 'ஆபிதீன்நற்பதம் ஆறிபீன் அற்புதம்' என்னும் தறிக்கத்துல் அவுலியா என்ற நூலையாக்கினர். இது 1903ம் வருடத்தில் காரைக்காலில் வெளிவந்தது. கழுவுதல், முழுகுதல், தொழுதல், குர்ஆன் ஒதுமுறை, சக்காத் சதகா, இகுலாஸ். நோன்புகளின் வகை, நசீகத், பிதுகத், பள்ளிவாசல், மஜ்ஜிதி, மக்கட்பேறு, மக்களையும் மனைவியையும் நடத்துமுறை, பொய்ச்சத்தியம், பொய்ச்சாட்சி, கட்குடி

யின் கெடுதி, நிக்காகு விவரம், தௌபா, நசூகா, பைஅத்து, சைகு, முரீது, நபசுமாற்றம், அவுராது நன்மை, திக்று செய்முறை, அறஞ் செயும் முறை, இவைபோன்ற பல பொருள்களை விளக்கும் நூலிது. இது 400 பக்கம் கொண்டது.

இவராக்கிய மற்றொரு நூல் "நேர்வழி விளக்கம், தீன்மணி முழக்கம்" எனப்பெறும். பலவகை உயிர்களையும் காக்கக் காரணங் காட்டும் நபியரசையும், முதியோருரைத்த தொழுகை முதல் ஐவகைச் செயலையும், விளக்கும் இந்நூலிற்குச் சாத்து கவி கூறிய கண்ணகு மது மருதூ முகம்மதுப் புலவரின் மாணவராகிய த. அ. காதிறு முகயத்தீன் ராவுத்தரியற்றிய வெண்பாவில் இந்நூலடக்கம் காட்டப்பட்டிருப்பதைக் காண்க.

"ஏகனுரையும் எழிலா ரெங்கண் நபிதம் முரையும்
வாகு இமா மானவர் கண்மானுரையும்—பாகின்
அறபியுரையானவையை ஆய்ந்து தமிழுரையாய்த்
திறமை பெறச் செய்தார் தினம்."

இதுவன்றியும் இப்புலவர் தவத்துது என்னும் வெள்ளாட்டி மசாலா மறு மொழிவிசளம் எனும் வசன நூலையும் செய்துளர். இவர் சென்னபட்டணம் போகும் வழியில் இவ்வெள்ளாட்டியின் பாடல் வசனத்தைப் பார்க்க நேர்ந்தது. அதில் பிழைகள் மலிந்திருப்பதாக எண்ணி அவளைத்தேடி அவளுடன் சம்பாஷணை செய்தனராம். "கணவனும் மனைவியும் கூடும்பொழுது தூய்மையாகத் தொழுது ஆயத் தோதி இருவரும் தாத்தில் நின்று குல்கூ, அல்லாகு வென்று சொல்லி ஒவ்வொரு திக்றுக்கும் 10 மூச்சுப்பிடித்து வந்தால் அதிற் பிறக்கும் பிள்ளை அவுலியாக விருக்குமென்றும், அங்ஙனம் செய்யாது பிறக்கும்பிள்ளை ஹறுமாக விருக்கு மென்றுங் சொற்றனள்." இருவருடைய சவால், சவாபுகள் சேர்ந்தனவும், பல கித்தாபுகளிலுள்ளனவும் மொத்தமாகத் தொகைப்படுத்தி வரைந்த நூலிதுவாம். இது கதீது மார்க்க விசளம் என்ற தலைப்புப்பெற்றது. இதன்கண் வரும் 136 வினாக்களுக்கு வெள்ளாட்டி தக்க பதிலளித்ததைக்

கண்டு புலவர் மெய்ச்சித் தம்முவகையைப் பலருமறிய விளம் பினராம்.

**20. சாயிற் முஹியித்தீன் சூல்தான்பிள்ளை ஆலிம் சாசிப்.** இவர் திருவாங்கூர் பூவாற்றூர் போக்கு முசாமரைக்காயர் குமாரரின் மருகர். இவர் அரபு பாஷையில் பெயர் பெற்ற இறுசாதுல் இபாத் எனும் கித்தாபை தமிழில் மொழி பெயர்த்துளர். இதனைப் பல உலமாக்கள் பார்வையிட்டபின் இது 1901ல் சென்னையில் பதிப்பிக்கப் பெற்றது. 'இந்தக் கிதாபில் அனேக குர் ஆன் ஆயத்துகளின் பொருள்களும், ஹதீதுகளும், ஹிகாயத்துகளும், றிவாயத்துகளும், மார்க்க சட்ட வட்டமாகிய பற்லு ஷற்துகள், வாஜிபுகள், சுன்னத்துகள், முஸ்தஹப்புகள் முதலானவைகளும், இன்னும் நன்னெறி யொழுக்கம், உருக்கம், வணக்கம் ஆதிய நேர்வழிகளும், ஆழ்ந்த அறிவுகளும் அடங்கியுள. இது முதல் நூலின் மூன்றிலொரு பாகமெனப்படும். இப்புத்தகத்தில் 150 பக்கங்களுள.

**21. நாகூர் மு. க. முகம்மது இமாம் கஸ்ஸாலி மரைக்காயர்—** இவர் நாகூர் மீறன் சாகிபு காரண சரித்திரம் ஒன்று எழுதியுளார். கலறத் மீறன் சாகிபின் பிறப்பு, துறவு, யோகம், மணம் முதலானவற்றையும், அன்னாரிழைத்த பஞ்சம் நோய் தீர்த்த பற்பல அற்புதங்களையும், பற்பல தருமப்பணிகளையும், அன்னார் பெற்ற பரிசுகளையும். ஹச்சு செய்ததையும், கூத்தனூர், மேலநாகூர், சித்திரகூடம், பொதியமலை, பாப்பாவூர், கிட்டாநகரம் முதலான பலவிடங்களுக்குச் சென்றதையும் விரிவாக உரைத்துளார். துளசி மகாராஜாவினிடம் மானியங்கள் பெற்றவரிவராதலின் இவர் காலம் வெளிபப்படை. இவர் கந்தூரி எனும் கொடி கூடு விழாவைச் சிறப்பாக நடத்தி மணங்கமழும் சநதனத்தை யாவரும் மகிழச்சியுற அளித்து வந்தனரென்ப.

**22 மகாவித்வான் பதுறுத்தீன் புலவர்.** இவர் பாடிய அருமை பெருமை வாய்ந்த நூல் முகியித்தீன் புராணம். இதன் முதற்பாகத்தின்கண் பாயிர முதல் சேணுயிர் பெற்றபடல

மீருக நாற்பது படலங்களும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட செய்யுட்களுமுள.

"மேதினியிடத்திலுற்று விளங்குதீன் பயிரை யேற்றிக்
கோதிலாப் புலியுமானுங் குறு முயற்குடமுமாவு
மீதிரைக்கயலுஞ் சோகும் விண் மதியாயிமேனுடு
மாதவத்துடனே பேசு முகம்மதைப்பு கழுவாமே."

என்று பாயிரத்திற் கூறியுளர்.

இப்புலவரை கா. ப. ஷெய்குத்தம்பிப் பாவலர் பின் வருமாறு புகழ்ந்துளார்.

"மூன்னூறு புலவர் முழுது மோருருவாய்
இன்னிலத்துதித்த வியல்பினை யொத்தோர்
பதுறுத்தினென்றுப் பகர் பெயர்தாங்கிச்
சதுருற்றிடுமித்தலத்திகையாவும்
கதிர்படு சூரிய காந்திக் கொப்ப
மூதிர் புகழ் பெற்ற மூக்கிய நாவலர்''.

23. பா. தாவுத் ஷா. இவர் ஆங்கிலம் கற்று பி. ஏ. பட்டமெய்தியவர். தாருல் இஸ்லாமெனும் பத்திரிகாசிரியர். குர் ஆனைத் தமிழில் மொழி பெயர்த்தவர். நபி நாயக வரலாறு வரைந்து வெளியிட்டவர். 'நபிகள் நாயகமும் நான்கு தோழர்களும், நாயகவாக்கியம், ஐவர் ஹுருகில் புர்கான், இஸ்லாம், ஈமான் என்ற தலைப்புள்ள நூல்களும் இவராலாக்கப் பெற்று வெளிவந்துள. இவர் தமிழ்ப்பற்று மிகுந்தவர். இவர் செந்தமிழ் நடை சாலச் சிறந்தது இவருழைப்பு மெய்ச்சத்தக்கது.

24. அன்வார் நிருடீன். இவர் ஆங்கிலப் புலவர். எட்வெர்டு பித்ஸ் ஜெரால்டு என்பவர் உமர் காயம் என்பதைப் பாரசீக மொழியிலிருந்து ஆங்கிலத்தில் கூட்டியுங் குறைத்தும் மொழி பெயர்த்ததைப் படித்து அதை அனுசரித்தும் மூலத்தைத் தெரிந்து தெளிந்தவரிடங்கேட்டும் தமிழில் அழகாகப் பாடியுளார். 'கூடாரஞ் செயும் உமர்' என்பது பொருள். உமர் காயம் என்பவர் 11ம் நூற்றுண்டில் வாழ்ந்த ஒளிநூற் புலவர்.

25. முகம்மது பின் மன்சூர் பின் சாயித். இவருக்கு உலக வழக்கிலுள்ள பெயர் பக்கிர் முத்தாபிர். இவர் எழுதிய யுத்த முறை நூல் சாலச் சிறந்ததென்று தெரியவருகிறது. இதன் பெயர் அதாபுல் ஹர்ப் வாஷ் ஷுஜா அத். இவ்வருமையான நூல் அல்தாமிஷ் அல்லது இலுத்மிஷ் (1210–35) எனும் மரசனுக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டது. இதற்கு இரண்டு கையெழுத்துப் பிரதிகள் பிரிட்டிஷ் மியூசியத்திலும், இந்திய ஆபீஸ் நூல் நிலையத்திலும் இருக்கின்றனவாம். இந்நூலில் 40 அதிகாரங்களுள. தூதர்கள் முதல், குதிரை சோதனை ஈறாக யுத்த முறைக்கு வேண்டியன கூறப்பட்டுள. அரசர்களின் கடமைகள், ஆயுதங்கள், குதிரைப் படையணிகள், கூடார மடித்தல், இடம் மாற்றுதல், இரவுப் போர், மறைவிடங்கள், யுத்தக்களங் களினாராய்ச்சி, போர் ஒழுங்கு, பரிசு, கண்டித்தல், குஸ்தி முறை, ஏனைய உடற்பயிற்சி, அரசும் குடியும் படையும் அறிய வேண்டிய விதிகள், இவை விரிவாகக் கூறப்பட்டுள. இவையன்றி, கஸ்னி அரச குடும்பக் கதைகளனேகம் இந்நூலிற் காணப்படும். இதன்கண் கஸினி சூல் தான் முகம்மது (998—1030)க்குப் பெண் கொடுத்த அமிர் பில்க் டி கான் (969—72) பெயரும் அரசாண்ட விவரமும் துலங்குகின்றன. இந்நூலைத் தமிழில் மொழி பெயர்த்தல் மிக்க நலமாகும். இந்நூலின் பிரதி யொன்று வங்காள ஏஷியாட்டிச் சங்கத்தைச் சார்ந்த டாக்டர் ஹிதாயத் லாசான் என்பவரிடம் கிடைக்கும்.

26. டாக்டர் ஷர் முகமது இக்பால். இவரைப் புரட்சிக் கவியென்பர். இவர் ஆஸ்திகர். மேனாட்டு நாஸ்திகத்தைக் கண்டித்தவர். இக்கவிவாணர் புரோகிதர், போலி முல்லாக்களை வெறுத்தனர். தெய்வமொன்றே, எம்மக்களும் சகோதரமே, போன்ற உலகப் பொதுக் கொள்கைகளை முதலில் தம் உர்து மொழியிலும், பின் பார்சி மொழியிலும் கவிரூபமாக வெளியிட்டுப் பரப்பினர். இவருடைய ருமூஜ் என்ற கவி நிக்கல்ஸன் துரை மகனால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பெற்றதும் அதனையுலக முழுதும் புகழ்ந்தது. ஸர் பட்டங் கிடைத்ததும் இவர் இவ்வாண்டில் காலஞ் சென்றனர்.

27. **முகம்மது நாகூர் முத்துப்புலவர்.** இவர் கோயமுத்தூர் ஜில்லா, உடுமலைப்பேட்டை, சோழமாதேவி நகரம் செய்பிது முகம்மதுப் புலவர் குமாரர். இவர் பாத்திமா தேவியின் பேரன் முகியதீன் வரலாற்றைச் சதகமாகவும், ஆனந்தக்களிப்பாகவும், பதங்களாகவும் பாடியுளார்.

"கருமுகிற் குழலார் பாத்திமாவயிற்றிற்
கண்மணி முகியித்தீனெலியை
பெருமையிற் சிறந்தவன் னபிக்குவந்த
பேராரம் அசன் மரபினிலே
வரும் அபுசாலிக் கருந்தவத்தகனுல்
மைந்தராய மைத்தனன் மாதே".

"ஆயிரத் தெண்ணூற்றுத் தொண்ணூற்றேழ்
தன்னிலே கௌது முகியத்தீன்சதகம்
தமிழிற் பாடினன் தமியேன்".

"ஆதி முகம்மது பேரர்—அந்த
ஆலம்புகழ் அபிசாலிகு பாலர்
சோதி முகியித்தின் நாதர்—பையல்
துயர்தீர்த்து இரட்சிப்பாரென்றென்றும் நிசமே".

28. **செவத்த மரைக்காயர்.** இவர் நாகூர் தர்கா வித்வான் அ. தம்பி சாகிப் மரைக்காயர் குமாரர். இவர் நபிநாயகத்தின் பெயரால் அகப்பொருள் கோவை, மக்காக் கோவையொன்று இயற்றினர். இதன் கண் 437 செய்யுட்களுள. ஒவ்வொன்றிலும் சொற்சுவை, பொருட்சுவை, கற்பனை பொருந்தியுள. இந்நூலன்றி, இவர் வேறு கோவைகளும், கலம்பகம், பிள்ளைத்தமிழ், அந்தாதி, மாலைகளும் ஆக்கியுளர்.

"மீக்கோவைக் கண்டு மகமுறை சீரிறை மீதருந்தி
பூக்கோவைச் செந்நெறி நன்னெறி யாக்கும் புகழ்நபியே
தீக்கோவை தீர்க்கும் நும் சேவடிக்கே சிறியேன்செயும் மக்
காக் கோவையை மணப்பூக்கோவை செய்யுதிர்கண்
களித்தே".

**29. ஆ. கா. பிச்சை இபுராகிம் ராவுத்தர்.** இவர் திரிசிர புரம் வரகனேரி மேட்டுத்தெரு உபாத்தியாயராவர். இவரது **பிள்ளைத்தமிழைப்** போற்றிய புலவர்கள் பலராவர். செவத்த மரைக்காயர் சாற்றுக் கவியில் இது வருகின்றது.

'விராவுகின்ற **பத்தழகும்** குதிகொளப் பிள்ளைத்தமிழே
விளங்கச் செய்தான்
பராவுகலை யொருங்குணரும் பிச்சை இபுராகீ
மெனும் பாவலோனே'.

இவரைப்பற்றி பக்கம் 88ல் பார்க்க. இவர் மதீனத்தைப் பற்றி அந்தாதிகளும், கலம்பகமும், மாலையும் செய்துளர்.

**30. என்னயினுப்புலவர்.** (வேலன் சின்னத்தம்பி), இவர் ஆக்கிய நூல் **முக்கூடல் பள்ளு**. இதன்கண் கலிப்பா, அகவல், சிந்து, விருத்தம், சொல், புலம்பல், தரவு, முடுகு ஆதிய பல பாவகையில் **273** கவிகளுள. 'குற்றாலக் குறவஞ்சி போலும் குறவஞ்சியுமில்லை முக்கூடல் பள்போற்பள்ளுமில்லை, வருணகுல ஆதித்தன் மடல்போன்ற மடலுமில்லை' என்பது ஆன்றோர்வாக்கு. முக்கூடல் அழகர் பண்ணையைச் சேர்ந்த பள்ளனாகிய அழகனுக்கு சைவ வைணவ மனைவியர் இருவர். முன்னவள் முக்கூடல் காரியே, இளையவளுக்கு மருதூர். இரு பெண்டாட்டிக்காரனுக்கு எப்பொழுதும் சங்கடம், பொறுமையுற்ற மூத்தமனைவி தன் நாயகன் பண்ணை நிலவருவாயில் கொள்ளை கொண்டனனென்று கோட் சொல்லவும் முதலாளி செவிமடுத்து விசாரித்து அவனைக் கட்டையில் தொழு மரத்திலடித்தனர். இளையவள் அவனை மீட்கச் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. ஆனாலும் நாயகனுடைய துயரத்தைக் கண்ணுற்ற முதல் மனைவி மனமிரங்கிப் பண்ணையாரிடம் மன்றாடி விடுதலை செய்வித்தனள். பின்னர் இருவரும் இணங்கி வாழ்ந்தனர். இந்நூலில் பலவகை நெற்பெயர்களும் உழவுத் தொழிற்குரிய பதங்களும் காணப்படும். அன்றியும், வடமலைப் பிள்ளையன், திருமலைக்கொழுந்து மன்னன், பெரியநம்பி, செஞ்சி, கூடல், தஞ்சையரசராகிய அம்பாலவாண நாயனார் பெயரும் பிறங்

கும். வஞ்சி குறத்தி பாட்டு எனப்படுவதுபோன்று பள்ளு உழத்தி பாட்டு எனப்படும். முக்கூடல் என்பது தற்காலம் சிவ லப்பேரி எனப்படும். மூன்று நதிகள்—பொருநை (தாமிரபருணி), சிற்ருறு, (சித்திராநதி), கோதண்டராமநதி (உப்பு ஓடை) - கூடு மிடத்திலுள்ள சிறு கிராமம். உப்புஓடை சிறு வாய்க்கால். இது தற்காலத்தில் சிற்ருற்றுடன் கங்கைகொண்டான் ஊர்ப்பக்கத்தில் கலக்கின்றது. இச்சிறு கிராமத்தில் திருமால் திருப்பதியொன் றுண்டு. திருமாலின் திருநாமம் அழகர். இவ்வூரில் சாஸ்தா, பூலாவுடையார் கோவில்களுமுள. வடமலையப்ப பிள்ளையன் மகன் திருமலைக்கொழுந்துப் பிள்ளையன் (1113—82) காலத்தில் இந்நூல் எழுதப்பட்டதாகும். இதனை ஆக்கியோர் சைவ வைண மதங்களிலன்புடையார்.

இந்நூலாசிரியர் – என்னயினுர் – எல்லார்க்கும் நயினுன் – கார்காத்த வேளாளர் பெயர் பூண்டவர் எனத்தெரிய வருகிறது. இவர் கானகத்து மீருப்பிள்ளை புதல்வர். இப்பள்ளு நாடகமாக்கப் பெற்றதும் இவராலே என்பர் சிலர். இவருடைய ஆசிரியர்கள் இயற்றமிழ் முத்துப் புலவரும், இசைத்தமிழ் நாச்சிமுத்துப்பணிக் கரும், பரத நாட்டியம் சாமிப் புலவரும் ஆகிய மூவருமே. இந் நாடகத்தில் சுமார் 320 பாக்களுள. இவற்றில் இராகம் தாளம் சேர்க்கப்பெற்றுள. இதன் கண் விருத்தமும் தருவுமே மலிந் துள. இவ்விரண்டு நூல்களிலும் பள்ளன், பள்ளிகளின் இயற்கைப் பேச்சுச் சொற்கள் வழங்கப்பட்டிருப்பது வியக்தம்.

**31. P. M. அப்துல்காதிறு.** இவருடைய ஊர் திண்டுக்கல் பக்கம் பேகம்பூர். 'திண்டுக்கலென்றும் திருநகரின் தென்பாலில்... பேகம்பூர்தனிலே பிசகாது தீன் குலத்தில் அப்துற்காதிறென் போன் அவனிதனில் தீனவர் முன் நப்பாரும் அம்மானை நவில லுற்ருன்'. அது சீரு வம்மானை என்று பெயர் பெற்றுளது. உம றுப்புலவர் ஆக்கிய சீருப் புராணத்தில் ஒரு காண்டமாகிய 'விலா தத்து'க் காண்டத்தில் பாதைபோந்த படலத்தை அடிப்படை யாகக் கொண்டு இவ் வம்மானை பாடப்பெற்றது. இதில் பாயிரம் உள்பட பாக்கள் 273 உள. இதன்கண் நபி நாயகம் மக்காவி

விருந்து மதீதனத்திற்குப் போகும் காடுமுரடான வழியில் ஓரிரவு சோலையிற்றங்கி மீண்டுமுதயத்தில் வழிப்போக எத்தனிக்கையில் அபுஜில் தடை சொல்லிப் பட்டபாடும், உழுவையைக்கண்டு கலங்கித் தரைமீது விழவும், அவ்வரிவேங்கை அவரூர்ந்த அத்திரி (ஒட்டகத்தை)யைக் கௌவி, அடர்ந்த கானத் துட்சென்றதுவும் கூறப்பட்டுளது. இவ்வம்மானையில் செந்தமிழ்ச்சுவை ததும்புகின்றது. இது 1931ல் அச்சில் வெளிவந்தது.

இப்புலவர் **முகயத்தீன் சதகம்** ஒன்று நூறு விருத்தப் பாக்களிலமைத்துளர். இவற்றில் முகயத்தீன் வரலாற்றுடன் வாழ்க்கை ஞான வரிசையும் அருளியுளர். இந்நூலில் சிறுநகசு, பெருநகசு, கொடிய நகசு, சாதி ஒன்று, நபி அடையாளம், அவதாரம், சொர்க்கம், நரகம், லகீனத்து, பாக்கத்து, சபர், தரீகத்து, மகரிபத்து முதலானவை விளக்கப்பட்டுள. அன்றியும், பிள்ளை தாய் தகப்பன் கடமைகள், பிணி மூலம். விலக்கு, மிடிமை, பசியாறுமுறைமை, மயிர்களைதல், உடற்குற்றம், வீடு அமைத்தல், அதற்கு நேரம், வழக்கோரம், மடந்தை மணாளர் இணங்கும் நேரம், இணங்காத நேரம், இடம், சொல்லாத இரசியம், தருமம், தயாளம், புண்ணியம், ஏழுலகம் செல்வோர் இத்தகையர், ஆதிய நற்போதனைகளும் இப் பிரபந்தத்திற் காணப்படும்.

32. **மீருன் கனி அண்ணுவி.** இவரூர் தஞ்சை ஜில்லாப் புரையாறு என்பதே. இவர் காட்டானை செய்கெலியவர்களின் முரிதீன். இவரருளிய நூல் சொர்க்கக் குறமென்றும், மாதுகுறமென்றும், குறமாது என்றும் அழைக்கப்படும். இது குற்றாலக் குறவஞ்சி (மாது)யை முதனூலாக வுடையது. இதில் பல வகைப் பாக்கள் அமைந்துள. விருத்தம், வெண்பா, அகவல், கொச்சகம், கண்ணி, இவை நிறைந்துள. குறத்தியின் தகப்பன் நபிகளின் கருணையால் வயோதிகத்தில் இவளைப்பெற்று, இக்கன்னிகையைக் குற வாலிபன் ஒருவனுக்கு மணஞ் செய்வித்தனன். ஆனால் இந்த மாதினுக்கு எண்ணமெல்லாம் நபிகளின்மீதே. இம்மாது நபிகளின் மகள் பாத்திமாவிடம் பணிசெய்து நபிகளின் தாள் வணங்குதலே தன் கடமையாகக் கொண்டுக் கணவனை

விட்டு நீங்கியிருக்க, நபிகள் இவளுடைய கனவில் தோன்றி 'யான் உன் பக்தியை உணர்ந்தேன், நீ உன் கணவனோடு வாழ்வாயாக' வென்ற வரத்தால் இருவரும் பொருந்தி நபியினடிமைகளாயினர். இக்கதை இந்நூற் கடைசியில் "தன் வரலாறுரைத்தல்" எனும் பாகத்தில் 107 கண்ணிகளிற் கூறப்பட்டிருப்பது காணப்படும்.

வல்லமையில் வல்லமைதான்
வறுமை இளம்போதில் வந்தால்
நல்ல சபேருறுடு மனம்
நழுவாதிருக்குதலே. (89)

தீன்நிலையிலே குறவன்,
சேர்ந்து மகிழ்ந்திருக்கத்
தான்இயற்றியே குறப்பெண்
சங்கை நபியினோடும். (97)

நகமும் சதையும் நண்
ணிடுதலைப் போலும்
சுகவாரி மூழ்கி சுகித்
திருந்து வாழ்ந்தார்கள். (99)

இந்நூல் கண்ணகு மகுது முகம்மது எனும் புலவரால் பரி சோதிக்கப்பெற்று சென்னை பெத்து நாயக்கன் பேட்டை பத்ம நாப அச்சுக்கூடத்தில் 1896ல் பதிப்பிக்கப்பெற்றது.

## முகம்மதிய விழாக்களும் விரதங்களும்

(1) **ரம்ஸான் ஒரு மாசம்** (குத்பா) குத்பா என்பது ஒரு பெரிய கூட்டம் சேர்ந்து கடவுள் வணக்கம் செய்வது. ரம்ஸான் என்பது 30 நாட்கள் தொடர்ந்து அனுஷ்டிக்கப்படும் நோன்பு. இது கடவுளுடைய உத்தரவு. வருஷம் 365 நாளும் தினந்தோறும் 5 நேரம் வணக்கமும் ரம்ஸான் 30 நாள் நோன்பும் விடாமல் அனுஷ்டித்தவர் சேர்ந்த கூட்டமே குத்பா ஆகும். நோன்பு 30 நாளும் பகல் ஆகாரமின்றி இருக்கவேண்டும். காலை 3 மணியிலிருந்து மாலை 6 மணி (அஸ்தமனம்) வரை தண்ணீர்கூட அருந்தக் கூடாது. மனம், வாக்கு, காயங்களில் மிகவும் பரிசுத்தமாய் இருக்கவேண்டும்.

(2) **பக்ரீத் ஒரு மாசம்** (இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம்) குருபானி-(ஆடு. கன்றுகள், ஒட்டகை) ஒரு நாள் விழா. குத்பா முடிந்த உடன் குருபானி செய்வார்கள்.

(3) **முகரம் மாசம்** முஸ்லீம்களுக்கு வருஷப் பிறப்பு. உற்சவம் 10 நாள். இந்த மீ இந்த 10 நாளும் முஸ்லீம்களுக்கு துக்ககரமான நாட்களாக இருக்கும். மகம்மது நபியின் (மகன் பிள்ளைகள்) பேரன்மார்கள் பாலைவனத்தின் ஷஹீத் ஆனார்கள் (வாளாலும் ஈட்டியாலும் வெட்டிக்குத்தி கொல்லப்பட்டார்கள். ஒருவர் விஷத்தால் மாண்டார். 7, 8, 9, 10 நாளும் கடும் போர். மாளவியார் மகன் எஜீதால் கொல்லப்பட்டார்கள். நபிக்கும் மாளவியாருக்கும் சிஷ்யர் இமாம்ஹசன் இமாம் ஹுசேன், சகோதரர்கள். இவர்கள் இருவரும் தாம் வாரீசுகிரமப்படி வந்த அதிகாரத்தை மாளவியாருக்கு கொடுத்தார்கள். மாளவியார் மகன் காலத்தில் மார்க்க விரோதமாக நடக்க ஆரம்பித்ததை சகோதரர்கள் கண்டித்தார்கள். அதனால் போர் நடந்தது. தங்கள் பாட்டனாரால் கண்டுபிடிக்கப்பட்ட கடவுள் கொள்கைமாறுமல் ஸ்தாபிப்பதற்காகவும் கடவுளுக்காகவும் சகோதரர்கள் உயிரைக் கொடுத்தார்கள். 8, 9, 10 மூன்று நாளும் கண்டிப்பாக நோன்பு இருக்கவேண்டும்.

(4) தோரா தேஜி நபிகள் தேக அசௌக்கியமாயிருந்து குணப்பட்டநாள். இன்று எண்ணெய்க் குளிப்பும் ரொட்டி தானமும் செய்வார்கள்.

(5) ஆஹிர் ஷார் சம்பா. ஆஹிர் = கடைசி, சார் ஷம்பா = புதன். நபிகள் சௌக்கிய மடைந்த ஞாபகத்துக்காக எல்லாரும் சந்தோஷமாக வீட்டை விட்டு வெளிவந்து வனாந்தரம் தோப்பு களில் பகல் 12½ மணிக்கு வணக்கம் செய்வார்கள். இதை ஒவ் வொரு வருஷமும் சபர்மாதத்தில் கடைசி புதன்கிழமையில் கொண்டாடுவார்கள் – சந்தோஷமாயிருப்பார்கள். (சபர் மலே)

(6) மீலாத் நபி. நபிநாயகம் பிறந்த நாள். இதனை உலகம் முழுதும் கொண்டாடுவார்கள். இரவு அவருடைய புகழைப் பற்றிப் படித்து மகிழ்ச்சி அடைவார்கள்.

(7) ரப்யூசானி மாசம் (கார்வீன்) = 11வது நாள் கொண் டாட்டம். அமைதியாக பயபக்தியுடன் செய்து கொள்ளப்பட்ட விசேஷம். நபிகள் குடும்ப பரம்பரையில் பிறந்தவர் மஹபூ புசுப் ஹானி. ஒலிமார்களுடைய தலைவர். இவர் பக்தாதில் அடக்கமாயிருக்கிறார். ரோகிகள், குழந்தை இல்லாதவர்கள், அங்க ஹீனர்கள், ஊமை, செவிடு, குருடு முதலியவர்களை அவர்களு டைய குறைகளிலிருந்து நீக்கவல்ல–ஒலி கொட்டு மேளம், வேஷம், பாடல் ஆடல் முதலியன சட்டப்படி விலக்கப்படுகிறது.

(8) காதர் அலி உருசு. உருசு = கொண்டாட்டம். நபிகள் பரம்பரை, இவரும் ஒலி. இவர் செய்த அற்புதங்கள். தென்காசி யில் சிஷ்யர்கள் ஒரு பசுவைக் கன்றைக்கொன்று தின்றுவிட்டனர். மீதியிருந்த மாமிசத்துண்டிலிருந்து உயிர்ப்பித்துக் கொடுத்தார். இவர் நாகையில் கடற்கரை சமீபத்தில் திருமுடி இறக்கிக் கொண் டிருக்கும்போது மூழ்கிய கப்பலை கண்ணாடியை வீசிக் காப்பாற்றி வரவழைத்தார். நாகையில் அடக்கமானவர்—முத்திக்கு மார்க் கத்தை இவர்கள் மூலமாகத்தான் அறிய வேண்டும்.

(9) இதீ, ரஜப் மாசம். இதி = பெரு நாள் (கொண்டாட்

டம்) மனித முகத்தில் சிறகுகளுடைய ப்ராஹ் என்ற தெய்வப் பிறவிக் குதிரையில் நபிகள் உயிருடன் இருக்கும்போதே ஆகாய மார்க்கமாகக் கடவுள் அழைப்பின் பேரில் போனார்கள். அதன் ஞாபகார்த்தம்.

(10) ஷபே, ப்ராத் மாசம் முன்னோர்களில் இறந்தவர்களுக்காக ஞாபகார்த்தக் கொண்டாட்டம். (திதி). ஏதாவது தானம் செய்தல் உணவளித்தல்— ப்ராத் = நாள், ஷபே = இரவு. அற்புதங்கள் செய்வார் மகான்கள் (இயற்கையை மாற்றுவர்). அதிசயங்கள் செய்வார். ஒலிகள் மருந்தில்லாமல் குணப்படுத்துவர்.

## இணைப்பு II. முகமதியர்

அரபு நாட்டினர் அராபிய ரென்பர்
அராபியர் குலத்தொழில் ஆடு மேய்ப்பது
அராபியர் வணிகர் அரும் பொருளாக்கினர்
அராபியர் வணங்கிய உருவங்களனேகம்.
அரபு நாட்டினர் அருந்தவ நபியும்
இளமையிலிவரும் ஆடு மேய்த்தவர்.
இளமையிலிவரும் வாணிபஞ் செய்தவர்.
இளமையில் **கபீஜா** அம்மையர்க்காக
இதர நாட்டில் ஈட்டினர் பெரும் பொருள்.
இவர் தந்திறமையும் இவர் கட்டழகுங்
கவர்ந்தன பிராட்டியின் கடைக்கண்ணோக்கினை.
விதவையை வதுவை செய்முறை யாய்ந்தனர்.
விதவை மூத்தவள் வெகு பொருள் படைத்தவள்.
விதவை யூகின்ய விழைந்தனன் வீரனும்.
ஆண்டவன் ஒருவன் அவனே அல்லா.
அவன் வழிப்பாடே ஆன்றோர் முறையென
இளஞன் கொள்கையை ஏற்றனளிவளும்.
ஒத்த மனத்தொடு இணங்கின ரிருவரும்.
நித்திய வாழ்வில் நிகரற்றிருந்தனர்.
அராபியர் பலரும் அருவக் கொள்கையை

அறவே யொழிக்க அரும் பாடு பட்டனர்.
முகமதும் மனைவியும் முனைந்து முன் வந்தனர்.
வெகுசன வெறுப்பில் வியாகுல மடைந்திலர்.
மக்காவைவிட்டு மதீனா நோக்கவும்
அல்லா வருளால் அணியணியாக
அன்பர்கள் திரள ஆண்டவர் பெயரை
அகில மெங்கணு மருமை பாராட்ட
அமைத்தனன், அம்மை யகமும் குளிர்ந்தது,
முகமும் மலர்ந்தது, முதுகுரவ ராயினர்.
மூத்தசீ மாட்டியும் மூர்த்திகர மொய்தினள்.
முகமது நபியும் முதுக்குறை வெய்தி
மக்கம் புகுந்து மிக்கபுகழ் பெற்றுத்
தக்க அகவையில் தகுதவ வலியால்
அனைத்து மிழந்து ஆதியை யடைந்தனர்.
அன்னார் பெருமை யளவிட லாகுமோ?
அன்னார் தொண்டாரு முகமதியர்.
அன்னார் தொழுமுறை அறச் செய விரக்கம்,
அன்னா ரெவரு முடனிருந் தருந்தலும்,
அன்னா ரெவருஞ் சகோதர ரென்றும்,
அன்னா ரருந்தல யாத்திரை போற்றுவர்.
அன்னார் மரபினர் இந்நாட்டிதனில்
அறமறைக் காயர் அகனகர் காயல்.
சீதக்காதிச் சிறப்புற் றுறை நகர்.
ஆண்டா னடிச்சரண் உறு முஸ்லீம்கள்
ஆண்டு மீண்டும் யாண்டும் ஆண்டவர்.
ஆண்டெண் ணூறு ஆண்டன ரிம்மா நிலம்.
ஆண் பெண் சிறாரும் அருந்தொழிலாற்றுவர்.
ஆண்தகை யறிஞர் ஏகுவர் வணிகராய்,
வீண்பொழுது போக்கார், வியன் பொரு ளீட்டுவர்.
தமிழக மெங்கணுந் தமிழே பேசுவர்.
தமிழ்மொழி தாய் மொழி போற்றுவர்.
தமிழருந் தாமுந் தகுந்துணை யாயினர்.

இருவருஞ் சேர்ந்து இணங்கியே வாழ்ந்தனர்.
பருவ மறிந்து பண்புடன் ஆற்றின்
பருவாலுறுவரோ பார்தனில் சொன்மின் ?
இருவகை மக்களும் இரங்கும் வள்ளல்கள்.
இருவகை யினமு மாட்சி தோராட்சியர்.
இருவகையாளரும் வீரவிசு வாசிகள்.
கருவிலிருந்தே கண்ணோ டாமல்
மருவு முட்டி மாதங்க ரென்பயன்?
மக்களைப் பிரிப்பர், மகிமையைக் கெடுப்பர்.
ஒக்கக்கூடிவோம்புவர் பிறப்பினை.
அந்தணர், அறிவர், பார்ப்பார், யாமெனச்
செந்தமிழ் மொழியைச் சிதைத்தனர்.
பந்தந் தொலையப் பராதீனப் படுத்தினர்.
தமிழர் துருக்கர் தகைசால் நண்பினர்.
இமிழ்திரை வைய மிறையென வாழ்பவர்.
அமிழ்தம் போன்ற அரசியல் குடியென
ஆண்டவனருளால் ஆகும் நாள் விரைக.
அல்லா அருள்பெறு மனைத்துநல மாகுக.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 17 | 23 | வாச் | வரச் |
| 26 | 25 | எழுப்புல்த | எழுப்புதல் |
| 27 | 10 | மெள்று | மென்று |
| 41 | 26 | தொகுதியை | தொகுதியே |
| ,, | 29 | பிரமான | பிரமாண |
| 43 | 18 | பிரப்பு | பிறப்பு |
| 45 | 23 | வெறுத்லு | வெறுத்தலு |
| 47 | 28 | விடத்திய | விடத்தில் |
| 50 | 15 | ரல்லார் | ரல்லர் |
| 53 | 5 | அலி | ஆலி |
| 57 | 14 | சாறு | சான்று |
| 58 | 19 | தன் | கள் |
| 62 | 2 | மனம் | மண்ம் |
| 66 | 27 | மூமா | மூல்மா |
| 67 | 3 | கௌர | கௌரவ |
| ,, | 13 | மாவா | மாவர் |
| 68 | 2 | ரஜப | ரஜப் |
| ,, | 15 | ஹஜ | ஹஜ் |
| 71 | 2 | காவலி | காவலிலி |
| 77 | 25 | நன்குடை | நன்கொடை |
| 79 | 8 | வேக | வேத |
| 80 | 23 | பற்றியும்ச் | பற்றியும் |
| 84 | 27 | சார்லோலை | சாரலோலை |
| 88 | 1 | ஆரவழ்ர் | ஆழ்வார் |
| 90 | 30 | கிறப்பு | சிறப்பு |
| 96 | 26 | சநத | சந்த |
| 97 | 24 | புலவர். | புலவர் |

## BOOKS CONSULTED.


Margoliouth D. S. — Mahomedanism, Home University Library.

Dawood Shah . — Islam, Imam, (Tamil).

Muir — The Caliphate 1906.

Sell, E — Faith of Islam 1897, Religious Orders of Islam.

Syed Amir Ali — Personal Law of Mahdas 1880.

Oman, J. C. — Brahmin Priests and Muslims of India.

Browne, E. G. — A Literary History of the Arabian Persia.

Nicholson, R. A. — A Literary History of the Arabs 1907.

Field, C — Mystics and Saints of Islam.

Srinivasa Ayengar B. A., C. R.—Mahomet Nabi (Tamil)

Muhammad Abdullah Enan — Decisive Moments in the History of Islam.



Scenes from Islamic History (in two sections) (I) from the tragedy of Kerbala to the Expulsion of the Saracens from Spain, (II) The Moghul History—from Babur to the end of Aurangazeb including the Din-Allahi of Akbar and the surrender of Sivaji. By Syed Mahdi Imam M. A. L. (Oxon) Rs 1—4—0

Fatima, The Lady of the Light. by Muhammad Ali Alhaj Salmin, with a Foreword by Maulana Abdul Kalam Azad. Rs. 5

Towards Understanding Islam. — A step towards the study and better understanding of the Religion and Teachings of Islam—by Sayyid Abul Ala Maududi, in Urdu, translated by Dr. Abdul Ghani, Ex-Director of Public Instruction, Afghanistan Rs. 1—8—0.

## அச்சாகாதவை.

17. திருமந்திரத்திரட்டு — (சுமார் 400 செய்யுட்கள்) 18 பன்னிரு பரோபகாரிகள். 19 பன்னிரு சிறந்த சிந்தனையாளர்கள். 20 அம்மையார் ஆடலும் பாடலும். 21 பஞ்சப்பழநகர். 22 மேனாட்டு வாணிக வள்ளல்கள். 23 தமிழக வள்ளல்கள். 24 அமுதவாக்குகள். 25 கந்தர்புரிக் கதைகள். 26 பொருனை நாட்டுப் புலவர்கள். 27 கம்ப ராமாயணக் கொய்மலர் (250 செய்யுட்கள்). 28 வைரக் கண்டிகை. 29 ஔவையார் ஔஷதம். 30 காசறைக்கட்டுரைகள். 31 திருக்குறள் ஆராய்ச்சி. 32 அமைச்சர்கள் அறுவர். 33 வாழ்த்துப்பாக்கள். 34 நல்லாறு நல்லுரைகள். 35 வைத்தியமும் வாகடமும். 36 மணவாழ்த்துகள், பிறைக் கவிகள்.

ஃ இவற்றை வாங்கி அச்சிட விரும்புவோர் ஆக்கியோருக்கு எழுதி விவரம் தெரிந்து கொள்ளலாம், ஆசிரியரைக்கண்டு பேசி முடித்துக் கொள்ளுதல் நலம்.

ஃ இவ் ஆசிரியரின் ஏனைய ஆங்கில நூல்களின் விவரம் அட்டவணையிற்காண்க. இவ் அட்டவணை ஆசிரியரிடமும், தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி டவுன் கீழரதவீதியிலும், இதன் கிளை (சென்னை, பவளக்காரத் தெரு, நிர். 6)யிலும் கிடைக்கும்.

ஃ ஒவ்வொரு நூலிலும் பத்துப் பிரதிகள் ஒருங்கே வாங்குபவர்களுக்கு ரூ 1-க்கு அணா 2 வீதம் கழித்து விற்கப்படும். அதிகமான பிரதிகள் வேண்டுவோர் ஆசிரியர்க்கு எழுதவும்.